2017 ஜூன் 20
செவ்வாய்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ரமழான் பிறை 25 ■ பக்கங்கள் 12 ■ மணி 03 ■ ஒளி 093

NAVAMANI DAILY நவமணி දිනපතා

# நவமணி

சிறுபான்மை மக்களின் சுதந்திரமான குரல்

QD / 154 / NEWS / 2017


ஹிஜ்ரி 1438 ரமழான் பிறை 25 - ஜூன் 20, செவ்வாய்

## ரமழான் தொழுகை நேரங்கள்

| ஸ.முடிவு | சுபஹ் | சூ.உதயம் | ளுஹர் | அஸர் | மஃரிப் | இஷா |
|---|---|---|---|---|---|---|
| 04:18 | 04:32 | 05:56 | 12:13 | 03:40 | 06:28 | 07:44 |

மேற்குறித்த நேரத்திலிருந்து கிழக்கு மாகாணத்திற்கு 6 நிமிடங்கள் குறைத்து கணிப்பிடவும்




12

## கட்டார் துருக்கி இணைந்து கூட்டு இராணுவ பயிற்சி



துருக்கி இராணுவத்தின் ஒரு குழுவினர் கட்டாருக்கு வந்தடைந்துள்ளதாக கட்டார் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. இந்த இராணுவக் குழுவானது, கட்டாருடன்

11 »»»»

## கீதாவின் மனுவை விசாரிக்க ஐவர் அடங்கிய குழு



பாராளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்கவால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை விசாரணை செய்வதற்கு ஐந்து பேர் கொண்ட நீதவான் குழு அமைக்கப்பட்டுள்ளது. பிரதம நீதியரசர் ப்ரியசாத் தலைமையில் இந்த குழு குறித்த மனுவை விசாரணைக்கு உட்படுத்த உள்ளனர். இதன் படி கீதாவின் மனு எதிர்வரும்

11 »»»»

# தொழுகை முடிந்து திரும்பியோர் மீது லண்டனில் தீவிரவாத தாக்குதல்



## ■ ஒருவர் பலி பலர் படுகாயம் ■ வேன் சாரதி மடக்கிப் பிடிப்பு

லண்டன் நகரிலுள்ள பள்ளிவாசலில் தொழுகை முடிந்து திரும்பி வந்தவர்கள் மீது வேனை ஏற்றி தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியது.

முஸ்லிம்கள் புனித ரமழான் மாத நோன்பு கடமையில் ஈடுபட்டுகொண்டிருக்கும் இவ்வேளையில் வடக்கு லண்டனில் செவன் சிஸ்டர்ஸ் வீதியிலுள்ள பள்ளிவாசலில், நேற்றுமுன்தினம் நள்ளிரவு வேளையில் 'தராவீஹ்' தொழுகை நடைபெற்றது. தொழுகை முடிந்து ஏராளமானவர்கள் வெளியே வந்து கொண்டிருந்தனர்.

அப்போது அவ்வழியாக வேகமாக வந்த வெள்ளை வேனொன்று தொழுகை முடிந்து வீடு திரும்பி கொண்டிருந்தவர்கள் மீது மோதியது.

இதைக் கண்டு அதிர்ச்சியடைந்த பலர் அலறியடித்துக் கொண்டு ஓட்டம் பிடித்தனர். இச்சம்பவத்தால் அங்கு பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது.

இத் திடீர் தாக்குதலில் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் மேலும், 10 பேர் படுகாயம் அடைந்தனர். உயிர் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் சிலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

11 »»»»

### களுத்துறை சம்பவம்

## பிரதான சந்தேக நபர்களை கைது செய்ய இன்டர்போல் உதவி

களுத்துறை சிறைச்சாலை பஸ் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கி பிரயோகம் தொடர்பிலான சந்தேக நபர்கள் இருவரை கைது செய்ய சர்வதேச பொலிஸாரின் (இன்டர்போல்) உதவி கோரப்பட்டுள்ளது. 7 பேர் பலியான இந்த சம்பவத்துடன் தொடர்புடைய அங்கொட லொக்கா மற்றும் லடியா என அழைக்கப்படும் இருவரை கைது செய்வதற்காவே

11 »»»»

## ஞானசாரதேரர், ஹக்கீமுக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள்

### அமைச்சர் சம்பிக்க வலியுறுத்து



■ அ.அருண் பிரசாந்த்

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரருக்கு மட்டுமன்றி, இனவாதக் கருத்துக்களை வெளியிட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கு எதிராகவும் சட்டநடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரான அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

அத்தோடு, தமிழ் மொழி மூலம் பரப்பப்படும் இனவாத கருத்துக்கள் சமூகத்தில் கண்டு கொள்ளப்படுவதில்லை என்றும் சர்வதேச பயங்கரவாதத்துடன் தொடர்புடையோர் கூட நாட்டில் இருக்கிறார்கள் என்றும் அவர் கூறினார். பத்தரமுல்லையில்

11 »»»»

# வடமாகாண சபை சர்ச்சைக்கு முடிவு

## தளர்த்தப்பட்டது அமைச்சர்களுக்கான விடுமுறை; நம்பிக்கையில்லா பிரேரணையும் வாபஸ்



■ அ.அருண் பிரசாந்த்

தமிழர் அரசியல் வட்டாரத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்துவந்த வடமாகாணம் குறித்த சர்ச்சைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக அம்மாகாணசபையின் அமைச்சர்களாக பி.டெனிஸ்வரன் மற்றும் பி. சத்தியலிங்கம் ஆகியோருக்கான கட்டாய விடுமுறையை தளர்த்திக் கொள்வதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இவ்வறிவித்தலையடுத்து, முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை வாபஸ் பெறப்படும் என்றும் இதுதொடர்பில் தான் வடக்கு ஆளுநர் ரெஜினோல்ட் குரேயுடன் தொலைபேசியூடாக

11 »»»»

## சிறுபான்மை அநீதிகளை ஆராய ஐ.நா. அறிக்கையாளர் இலங்கை வருகை



■ ஆதில் அலி சப்ரி

ஐக்கிய நாடுகள் சபையின் வெளிப்பாடு மற்றும் கருத்துச் சுதந்திரத்துக்கான விசேட அறிக்கையாளர் டேவிட் கேய் இவ்வருட இறுதியில் இலங்கைக்கான உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு சிறுபான்மையினருக்கெதிரான அநீதிகள் குறித்து அறிக்கையிடவுள்ளதாக சர்வதேச மனித உரிமைகள் செயற்பாட்டாளர் முயின் வஹாப்தீன் தெரிவித்தார். ஐக்கிய நாடுகள் சபையின் 35ஆவது மனித உரிமைகள் கூட்டத் தொடரில் கலந்துகொண்டிருந்த விசேட அறிக்கையாளர் டேவிட்

11 »»»»

## மியன்மார் அகதிபெண் மீது இன்ஸ்பெக்டர் பலாத்காரம்

### விசாரணைக்கு உத்தரவு

மியன்மார் இனவாதிகளின் கெடுபிடிகளிலிருந்து தப்பி வந்து இலங்கையில் புகலிடமளிக்கப்பட்டுள்ள மியன்மார் பெண்ணொருவர் இலங்கை பொலிஸ் உத்தியோகத்தரொருவரால் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டுள்ளார். சுகயீனம் காரணமாக களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த 21 வயது பெண்ணே இவ்வாறு துஷ்பிரயோகத்துக்குள்ளாகியுள்ளார்.

11 »»»»

## சட்டத்தரணி லக்ஷான் டயஸுக்கு அமைச்சர் விஜேயதாஸ மிரட்டல்

### சிவில் சமூக அமைப்புகள் கண்டனம்



■ ஆதில் அலி சப்ரி

நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ சட்டத்தரணி லக்ஷான் டயஸை சட்டத் தொழிலில் இருந்து நீக்குவதாக மிரட்டியதற்கெதிராக ஜனநாயகத்திற்கான சட்டத்தரணிகள் சங்கம் உட்பட 20க்கு மேற்பட்ட சிவில் சமூக அமைப்புகளும், 150 சிவில் செயற்பாட்டாளர்களும் தமது கண்டனத்தை வெளியிட்டுள்ளனர்.

கிறிஸ்தவர்களுக்கெதிராக 195 இனவாத சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக அண்மையில் தனியார்

11 »»»»

# முஸ்லிம்களின் வேதனை விசும்பல்களை கண்டும் காணாமல் இருக்கிறது நல்லாட்சி

## வை.எல்.எஸ். ஹமீத் குற்றச்சாட்டு



(எஸ்.அஷ்ரப்கான்)

இனவாதத்தை அடக்கி, இனவாதிகளை நாய்க்கூண்டில் அடைக்க உறுதியளித்து கதிரையில் அமர்ந்த நல்லாட்சி, அது அமர்ந்திருக்கும் கதிரையின் ஒரு கால் '21 முஸ்லிம் எம்பிக்கள்' என்று தெரிந்திருந்தும் முஸ்லிம்களின் வேதனை விசும்பல்களை கண்டும் காணாமல் இருக்கின்றது என்று சட்டத்தரணி வை.எல்.எஸ். ஹமீட் தெரிவித்துள்ளார்.

இன்றைய முஸ்லிம்களின் நிலை தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும் அதில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது,

மஹிந்த ராஜபக்ஷ முஸ்லிம்களுக்கான இப்தார் நிகழ்விலும் அண்மைக்காலமாக முஸ்லிம்களைச் சந்திக்கின்ற பல சந்தர்ப்பங்களிலும் இன்றைய இனவாத தாக்குதல் விடயங்களில் முஸ்லிம்களுக்கு ஆதரவாகவும் இனவாதம் கட்டுப்படுத்தப் பட வேண்டும், ஞானசாரவைக் கைது செய்யாமல் அரசே மறைத்து வைத்திருக் கின்றது; என்றெல்லாம் கூறிவருவது நாம் அறிந்ததே.

விஹாரை ஒன்றில் நடைபெற்ற நிகழ்வில் தேரர்களையும் பௌத்த மதத்திற்காக பேசுபவர்களையும் அரசு கைது செய்கிறது. புதிய சட்டம் கொண்டு வந்து கைது செய்ய முனைகிறது; என்றெல்லாம் பேசியிருக்கின்றார். அதே நேரம் நாமல் ராஜபக்ஷ Sunday Leader பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் பெரும்பான்மையை அடக்கியாள்வதன் மூலம் சிறுபான்மையை சந்தோசப்படுத்த அரசு முனைகிறது; என்று தெரிவித்திருக் கின்றார். இவற்றின் மூலம் முஸ்லிம்க ளுக்கு முன் இவர்கள் எவ்வாறு நடித்தா லும் இவர்களின் பேரினவாதக் குணம் மாறப்போவதில்லை; என்பது தெளிவாகிறது .

மறுபுறம், இனவாதத்தை அடக்கி, இனவாதிகளை நாய்க்கூண்டில் அடைக்க உறுதியளித்து கதிரையில் அமர்ந்த நல்லாட்சி, அது அமர்ந்திருக்கும் கதிரையின் ஒரு கால் '21 முஸ்லிம் எம்பிக்கள்' என்று தெரிந்திருந்தும் முஸ்லிம்களின் வேதனை விசும்பல்களை கண்டும் காணாமல் இருக்கின்றது. நாலு மணித்தியாலத்திற்குள் 2000 இற்கு மேற்பட்ட இதுவரை மறைந்திருந்த பல தரப்பட்ட குற்றவாளிகளை கைது செய்ய முடிந்த பொலிசாருக்கு, ஒரு ஞான சாரவையோ அல்லது பிணை நிபந்தனைகளை மீறிய ஒரு டான் பிரசாத் தையோ கைது செய்ய முடியாமல் இருக்கின்றது.

அன்று நமக்கு அடிவிழுந்ததை, கைகட்டிப் பார்த்துக் கொண்டிருந்த மஹிந்தவை திட்டித்தீர்த்தோம். இன்று மைத்திரி- ரணிலை வைது கொண்டிருக் கின்றோம். அவர்கள் தருகின்ற கஞ்சிக் கோப்பையை குடிப்பதா? இல்லையா? என்று பஞ்சாயத்து நடாத்திக் கொண்டிருக் கின்றோம்.

நமது இந்த அவலம் தொடர்கதையா? இதற்கு தீர்வே இல்லையா? அரசு - அது மஹிந்த அரசோ அல்லது ரணில்-மைத்திரி அரசோ அல்லது நாளை இன்னுமொரு அரசோ வந்தாலும் அது பேரினவாத அரசுதான். அதன் குணம் ஒன்றுதான். எனவே பேரினவாத அரசுக்கு ஏசுவதால் எதுவும் ஆகிவிடப் போவ தில்லை. அப்படியானால் தீர்வுதான் என்ன?

தீர்வை அரசு ( அது எந்த அரச ானாலும்) தராது. தீர்வை நாம்தான் அரசி டம் இருந்து பெறவேண்டும். அரசைத் தீர்வைத் தரவைக்க வேண்டும். அதை யார் செய்வது? எவ்வாறு செய்வது?

அதை நாம் தெரிவு செய்த பிரதிநிதி கள் மாத்திரமே செய்து சாதிக்கக் கூடிய சூழ்நிலைகள் இருக்கின்றன. பிரதிநிதிக ளும் மக்களும் சேர்ந்து போராடித்தான் சாதிக்கலாம் என்கின்ற சூழ்நிலையும் இருக்கின்றது. முழுமையான தீர்வைப் பெறவோ சாதிக்கவோ முடியாது, சமாளிப்பதைத் தவிர வேறு வழியில்லை; என்கின்ற சூழ்நிலைகளும் இருக்கின்றன.

இதில் எந்த சூழ்நிலையில் நாம் இருக் கின்றோம்; என்பதைத் தீர்மானிப்பது, எதிரியின் பலம், பலயீனம் தீர்வைத் தரவேண்டிய அரசின் பலம், பலயீனம், தீர்வை எதிர்பார்க்கின்ற நமது அரசியல் பலம், பலயீனம் ஆகியனவாகும்.

மஹிந்தவின் காலத்தில் ஆரம்பத்தில் பொது பல சேனாவுக்கு நாடு பூராகவும் கணிசமான ஆதரவு இருந்தது. பொதுபல சேனாவின் உண்மை முகம் தெரியாமல் மக்கள் அதன்பின்னால் அள்ளுண்டு போனார்கள் - அதாவது நமது எதிரி அன்று மிகவும் பலமாக இருந்தான். நமக்குத் தீர்வைத் தரவேண்டிய அரசி டம் 150 இற்கு மேற்பட்ட பாராளுமன்ற ஆசனங்கள் இருந்தன. எனவே அந்த அரசும் பலமாக இருந்தது. தீர்வை எதிர்பார்த்த நம்மிடமோ 17 ஆசனங்கள் மட்டும் இருந்தன. அந்த 17 பேரும் ஓட்டு மொத்தமாக அரசை விட்டு வெளியேறினாலும் அரசை வீழ்த்த முடியாத, அசைக்க முடியாத சூழ்நிலை அன்று இருந்தது. எனவே, அன்று சமாளிப்பதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

எனவே, அளுத்கம போன்ற இடங்க ளில் ஏற்பட்ட இழப்புகளுக்கு மத்தியிலும் மக்களின் போராட்டத்திற்கு மத்தியிலும் சமாளிப்பதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை.

இன்று பொதுபல சேனாவுக்கு மக்கள் ஆதரவு இல்லை. அந்தவகையில் எதிரி பலயீனமாக இருக்கின்றான். தீர்வைத் தரவேண்டிய அரசிடம் பெரும்பான்மை இல்லை. எனவே அரசும் பலயீனமாக இருக்கின்றது. ஆனால் நம்மிடமோ 21 ஆசனங்கள்; என்பது மட்டுமல்ல. இந்த 21 ஆசனங்களில்தான் அரசு தங்கி இருக்கின்றது. இந்த 21 ஆசனங்கள் காலை வாரினால் அரசு நாளையே கவிழ்ந்து விடும். சுருங்கக் கூறின் நாம் மிகவும் பலமான நிலையில் இருக்கின்றோம்.

இவ்வளவு பலமான நிலையில் இருந்தும் நமக்கேன் இந்த அழுகை. பலமிருந்தும் பாவிக்கத் தெரியாத நாம் தெரிவு செய்த பிரதிநிதித்துவங்களி லல்லவா தவறு இருக்கின்றது.

அவர்களைத் தொடர்ந்து தெரிவு செய்து வரலாற்றுத் தவறை நாம் ஒரு புறம் செய்துகொண்டிருக்கின்றோம். சரி அதை வேறாகப் பேசுவோம். அவர்களைக் கொண்டு, அவர்களுக்கு நாம் வழங்கிய அரசியல் பலத்தை பாவித்து இதற்கு ஒரு தீர்வைக் கொண்டுவரச் செய்வதற்குகூடத் தெரியாத ஒரு கையாலாகாத சமூகமாக இருந்து கொண்டு 'கஞ்சை' குடிப்பதா இல்லையா? என்று சண்டை பிடித்துக் கொண்டிருக்கின்றோமே இது அறிவுடமையா? நியாயமா?

புரிந்து கொள்ளுங்கள். இந்த இனவாதி களை அரசு கட்டுப்படுத்த பிந்துகின்ற ஒவ்வொரு கணமும் பலயீனமான அந்த எதிரியின் பலம் அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. இன்று மஹிந்தவும் மகனும் மறைமுகமாக அவர்களுக்கு சாதகமாக பேசியிருப்பது நிலைமை மாறிக்கொண்டு செல்வதைக் காட்டுகின்றது. இறைவன் பாதுகாக்க வேண்டும். இன்னுமொரு அளுத்கமவை எம்மால் தாங்க முடியாது.

எனவே, நமது 'முட்டுக்கு' வேலை கொடுத்தாக வேண்டும். 'முட்டை' உடனடியாக கழட்டத் தேவையில்லை. 'கழட்டுவோம்' என்ற எச்சரிக்கையை காதும் காதும் வைத்தாற் போல் அரசுக்கு கொடுக்கச் சொல்லுங்கள். அதற்கும் அரசு மசியாவிட்டால் அமைச்சுப் பதவிகளை தூக்கி வீசிவிட்டு, அரசை விட்டு வெளியேறாமல் பின்வரிசையில் அமரச் சொல்லுங்கள். அப்போது நிச்சயம் தீர்வு கிடைக்கும். அதன்பின் மீண்டும் அமைச்சுப் பதவிகளை எடுத்து விடுபட்டதையும் சேர்த்து அனுபவிக்கச் சொல்லுங்கள். நமக்குத் தேவை தீர்வதான். அதற்கும் அரசு மசியவில்லையானால் எதிர்க்கட்சியில் அமர்வதைத் தவிர வேறு வழியில்லை.

## பெரியமுல்லை லாசரஸ் வீதியின் குப்பைமேடு இரவோடிரவாக அகற்றம்

(நீர்கொழும்பு நிருபர் இஸ்மதுல் றஹுமான்)

நீர்கொழும்பு, பெரியமுல்லையின் லாசரஸ் வீதியோரத்தில் பாரியளவில் குவிந்திருந்த குப்பைமேடு பல்வேறு தரப்பினரின் முயற்சியை அடுத்து இரவோடிரவாக நீர்கொழும்பு மாநகர சபையினால் அகற்றப்பட்டது.

மாநகர சபைக்கு சொந்தமான காணிக்குள் பிரதேசவாசிகளும் வெளியிடங்களிலிருந்து வருவோரும் குப்பைகளை வீசிவிட்டுச் செல்கின்றனர். அதிகாலை நேரங்களில் மறைந்திருந்து குப்பைகள் போடுபவர்களை கைது செய்து வழக்கு தொடுத்து அபராதமும் விதிக்கப்பட்டது.

இருந்தபோதும் இவ்விடத்தில் குப்பை போடுவது அதிகரித்ததே அன்றி குறையவில்லை. மாநகரசபையும் அதனை அகற்ற மறுப்புத் தெரிவித்தது. தினந்தோறும் அங்கு குப்பை கூலங்கள் சேர்ந்து சிறிய மண்மேடு போன்று காட்சியளித்ததுடன் பிரதேசமும் துர்வாடை வீச ஆரம்பித்தது.

இது தொடர்பாக ஊடகங்களிலும் சமூக வலைத்தளங்களிலும் சுட்டிக் காட்டப்பட்டதுடன் பிரதேச பள்ளிவாசல் நிர்வாகம், முன்னாள் மாநகர சபை உறுப்பினர் பிரீனின் உதவியுடன் மாநகர ஆணையாளருக்கும் சுகாதார பிரிவினருக்கும் முறையிட்டு இதனை அகற்றித் தருமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

குப்பைகளை அகற்றிய பின்னர் அங்கு குப்பைகளை வீச வேண்டாம் என மக்களை அறிவுறுத்துவதற்காக உத்தரவாதம் அளிக்கப்பட்டது. இவை அனைத்தையும் கருத்தில் கொண்ட மாநகரசபை ஆணையாளர் நகர சபை ஊழியர்கள் மற்றும் பெகோ இயந்திரம் லொரிகளுடன் குறித்த இடத்திற்கு இரவு வேளையில் வருகை தந்து குப்பைகளை அகற்றும் வேலைகளை ஆரம்பித்து முழுமையாக அகற்றப்பட்டன.

குறித்த இடத்தில் குப்பைகள் அகற்றப்பட்டு சுத்தம் செய்யப்பட்டுள்ள தால், அந்த இடத்தில் குப்பைகளை போட வேண்டாம் எனவும் வீதியோரங்க ளிலும் கண்ட கண்ட இடங்களில் குப் பைகளை போடாமல் மாநகர சபையின் அறிவுறுத்தலுக்கிணங்க அவற்றை வகைப் படுத்தி மாநகர சபையின் வண்டிகளில் ஒப்படைக்குமாறு பள்ளிவாசல்கள் மூலம் பிரதேச மக்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

குப்பைகளை அகற்ற நடவடிக்கை எடுத்த ஆணையாளருக்கும் உதவி செய்த ஏனையோருக்கும் பள்ளிவாசல் நிர்வாகம் நன்றி தெரிவிக்கின்றது.

## தேசிய காங்கிரஸின் பேராளர் மாநாடும் இப்தார் நிகழ்வும்



தேசிய காங்கிரஸின் பேராளர் மாநாடும், இப்தார் நிகழ்வும் ஞாயிற்றுக்கிழமை தேசிய காங்கிரசின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா தலைமையில் அக்கரைப்பற்றில் நடைபெற்றது. இதன்போது பேராளர் மாநாட்டில் முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாஉல்லா உட்பட நிகழ்வில் கலந்துகொண்ட பேராளர்கள் அமர்ந்திருப்பதனையும் அதாஉல்லாவின் கிழக்கு வாசல் இல்லத்தில் இடம்பெற்ற இப்தார் நிகழ்வில் கலந்துகொண்ட ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(நியாஸ் ஆதம்)

## இலங்கை துறைமுக அதிகாரசபை ஊழியர்களின் இப்தார் பணம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்க தீர்மானம்

இலங்கை துறைமுக அதிகார சபை முஸ்லிம் மஜ்லிஸ் இப்தார் நிகழ்வின் பொருட்டு ஒதுக்கிய பணம் வெள்ளத்தால் பாதிப்புற்ற மக்களிற்கு நன்கொடையாக வழங்கப்பட்டது.

இலங்கை துறைமுக அதிகார சபை யின் இப்தார் மஜ்லிஸ் நிகழ்வில் துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சர் மஹிந்த சமரசிங்க கலந்துகொண்டார். இந்நிகழ்வானது துறைமுக வளாகத்தில் அமையப்பெற்றுள்ள முஸ்லிம் பள்ளிவாசலில் நடைப்பெற்றது. இப்தார் நிகழ்வின்பொருட்டு இலங்கை துறைமுக அதிகார சபையினால் வழங்கப் பட்ட ரூபாய் பத்து இலட்சம் பணம் இலங்கையில் வெள்ளத்தால் அநாதரவாகியுள்ள மக்களிற்கு வழங்குவதற்கு துறைமுக அதிகாரச பையின் முஸ்லிம் மஜ்லிஸின் முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது.

அதனடிப்படையில் அமைச்சர் மஹிந்த சமரசிங்கவின் பங்குப்பற்றலுடன் இப்தார் நிகழ்வு சமய அனுஸ்டானங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு மிகவும் எளிமையான முறையில் நடைப்பெற்றது.

இந்நிகழ்வில் அமைச்சின் செயலாளர் எல்.பி.ஜயம்பதி, இலங்கை துறைமுக அதிகார சபையின்தலைவர் கலாநிதி பராக்கிரம திசாநாயக்க, இலங்கை துறைமுக அதிகார சபையின் அத்தியட்ச கர் சரத்குமார பிரேமசந்திர, உப தலைவர் பி.ஜி. தசநாயக்க உள்ளடங்கிய இலங்கை துறைமுக அதிகாரசபையின் முஸ்லிம் ஊழியர்களும் கலந்துக்கொண்டார்கள்.

## இனவாதிகளுக்கு எதிராக துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்

### ஐ.தே.க வலியுறுத்து



நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரசு மேற்கொள்ளும் முயற்சிகளை குழப்புதற்காக தற்போது நடைபெறும் சூழ்ச்சிகளையிட்டு ஐக்கிய தேசியக் கட்சி கவலையடைவதாக கட்சியின் தவிசான ரும் அமைச்சருமான மலிக் சமரவிக்ரம தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

நல்லிணக்கத்துக்கு எதிரான குழப்பங்களைக் கட்டுப்படுத்த சட் டத்தை கடுமையாக்க வேண்டும் என்று ஜனாதிபதி, பிரதமரால் எடுக்கப்பட்ட தீர்மானத்தை நாம் முழுமையாக வரவேற்கிறோம்.

2015 இல் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும், பொதுத் தேர்தலிலும் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவோம் என்றே நாம் மக்களுக்கு உறுதியளித்திருந்தோம். எனவே, இதனை குழப்ப ஐக்கிய தேசியக் கட்சி ஒருபோதும் இடமளிக்காது.

ஏனைய மதங்களுக்கும் சமமரியாதை வழங்கி, வன்முறையற்ற சூழலை உருவாக்குவதே எமது இலக்காகும்.

எனவே, இனக்குரோத செயற்பாடுகளை மேற்கொள்வோருக்கு எதிராக துரித கதியில் சட்டநடவடிக்கை எடுக்க ஜனாதிபதி, பிரதமர், பொலிஸார் என அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் முழுமையான ஒத்துழைப்பை வழங்கும். யுத்த காலத்தில் இருந்ததைப் போல இருண்ட யுகத்துக்கு மீண்டும் நாடு தள்ளப்பட்டுவிடக் கூடாது என்றார்.



(வத்துகாமம் நிருபர்)

கண்டி, மாரஸ்ஸன தேசிய பாடசலை யில் ஒழுங்கு செய்த வைபவம் ஒன்றில் 'தன சவிய' (செல்வ சக்தி) வேலைத் திட்டத்தின் கீழ் முப்பதாயிரம் மிளகுக் கன்றுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. ஆரம்ப கைத்தொழில் அமைச்சர் தயாகமகே பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அதனைக் கையளித்தார். ஆயிரம் குடும்பங்களுக்கும் பாடசலை மாணவர்களுக்கும் இவை பகிர்ந்தளிக்கப்பட்டன. இரண்டு வருட முடிவில் இவற்றினூடாக பொருளாதார நன்மையை அடைந்துகொள்ளமுடியும் என எதிர்பார்க்கப் படுகிறது. அமைச்சர் மிளகுக் கன்றுகளைக் கையளிப்பதைக் காணலாம். இவ்வைபவத்தில் பாராளுமன்ற அங்கத்தவர் மயந்த திசாநாயக்கா, ஆனந்த அலுத்கமகே ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## அமெரிக்க சர்வதேச குடியரசு நிறுவனத்தின் பிரதிநிதிகளுக்கிடையிலான விசேட சந்திப்பு



(காத்தான்குடி மன்னபறுஸ்)

முன்னாள் கிழக்குமாகாண சபை உறுப் பினரும், நகரதிட்டமிடல் நீர் வழங்கல் அமைச்சரின் இணைப்புச் செயலாளரு மான யூ.எல்.என்.எம்.முபீன், சர்வதேச குடியரசு பிரதிநிதிகளுக்கிடையிலான விசேட சந்திப்பு காத்தான்குடியில் இடம் பெற்றது.

சர்வதேச அரசியல் ரீதியான செயல்பாடு களில் கவனம் செலுத்தி வருகின்ற அமெ ரிக்க வொஷிங்டன் நகரை மையமாகக் கொண்டு செயல்பட்டு வரும் சர்வதேச குடியரசு நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஸ்டீபன் சீமா வருகை தந்திருந்தார்.

இலங்கையில் முஸ்லிம்கள் எதிர் கொள்ளும் பிரச்சினைகள், சவால்கள், மாகாணசபைகளின் தற்போதைய செயற்பாடுகள், அதன் அதிகாரங்கள் எதிர்காலத்தில் மாகாண சபையின் செயல்பாடுகளை வினைத்திறன் கொண்டதாக மாற்றியமைக்க வேண்டிய விடயங்கள், உள்ளூராட்சி மன்றங்களின் செயற்பாடுகள் என்பவற்றுடன் இலங் கையில் தற்போது மேற் கொள்ள உத் தேசிக்கப்பட்டிருக்கும் அரசியல் யாப்பு சீர்திருத்தத்தில் யாப்பு ரீதியாக சிறு பான்மை இன மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்தலது அதிலும் குறிப்பாக முஸ்லிம் மக்களுக்கு யாப்புரீதியாக வழங்கப்பட வேண்டிய உரிமைகள் உள்ளிட்ட பல விடயங்கள் இதன் போது விரிவாக பேசப்பட்டன.



மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரணவின் வேண்டுகோளுக்கமைய ஜப்பான் - இலங்கை நட்புறவு மன்றத்தினால் 450 இலட்சம் பெறுமதியான தீயணைப்பு இயந்திரம் மற்றும் 350 இலட்சம் பெறுமதியான நவீன தொழிநுட்பத்துடனான அம்பியூலன்ஸ் ஆகியவை இலங்கை விமானப்படைக்கு வழங்கப்பட்டுள்ளது.அவற்றை ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவிடம் உத்தியோகபூர்வமாக வழங்கும் நிகழ்வு நேற்று (19) முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.ஜப்பான் இலங்கை நட்புறவு மன்ற தலைவர் கலாநிதி லால் திலகரத்ன மற்றும் திருமதி எரங்கா திலகரத்ன ஆகியோரால் அவற்றுக்குரிய ஆவணங்கள் ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டன.பாராளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரணவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்.

# பொது எதிரணிக்கு முஸ்லிம் வாக்கு தேவையில்லை

### ஊடக மாநாட்டில் விமல் வீரவன்ச



பொது எதிரணிக்கு முஸ்லிம் வாக்குகள் தேவையில்லையென பாராளு மன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பிட்டகோட்டையிலுள்ள தனது கட்சி தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறுகையில், நல்லாட்சி அரசை பதவிக்குக் கொண்டு வருவதில் பெரும் பங்களித்த முஸ்லிம்களும் இன்று அரசுக்கெதிராக கிளர்ந்தெழும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

டெங்கு நோய் பரவல், குப்பை கூளங்கள் அகற்றப்படாமை உட்பட பலவேறு நெருக்கடிகளால் இந்த அரசாங்கம் ஆட்டம் கண்டுகொண்டிருக்கிறது. சிங்கள - முஸ்லிம் மோதலொன்றை உருவாக்கும் முயற்சிகள் திரை மறைவில் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான மோதல்கள் மூலம் அரசியலமைப்பு சீர்திருத்தம் என்ற போர்வையில் அடுத்த பொதுத் தேர்தலை ஐந்தாண்டுகளுக்குத் தள்ளி வைப்பதற்கும் அரசாங்கம் திட்டமிட்டு வருகிறது. இந்த நாட்டில் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்காகக் கூறிக் கொண்டு ஜனவரியில் பதவிக்கு வந்த அரசாங்கம், இன்று அதனை நிறைவேற்றிக்கொள்ள முடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. என்றாலும் மக்கள் இந்த அரசின் தற்போதைய நிலை கண்டு பெரிதும் அச்சமடைந்துள்ளனர்.

இன்று நாடு முழுவதும் குப்பை விவகாரம் பாரியளவில் பிரச்சினையாக மாறியுள்ளது. கொழும்பு உட்பட பிரதான நகரங்களில் குப்பைகள் நிறைந்துள்ளதால் சுகாதார ரீதியான பிரச்சினைகளும் தலையெடுத்துள்ளன. உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடாத்தப்படாமையினால் நகரங்கள் பாதிப்புக்குள்ளாகியுள்ளன. இதனைப் போக்க இராணுவத்தைப் பயன்படுத்தி குப்பைகளை அகற்றப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்டுள்ளதால் டெங்கு நோய் நகரங்கள் தோறும் தீவிரமடைந்து வருகிறது. டெங்குவினால் 200 பேர் அளவில் கொல்லப்பட்டுள்ளனர். 60,000 க்கும் மேல் டெங்குவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். வரலாற்றில் என்றுமில்லாதவாறு டெங்கு தாக்கம் நாட்டில் அதிகரித்துள்ளது.

குப்பைகளால் நாற்றமெடுத்து டெங்குவினால் உயிர்கள் காவு கொள்ளப்பட்டுவரும் நிலையில் அரசுக்குள் தோன்றியுள்ள நெருக்கடிகளும் நாட்டை பெரும் நெருக்கடிக்குள் தள்ளிவிடும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ரயில் ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பு

பல கோரிக்கைகளை முன்வைத்து ரயில் சாரதிகள் மற்றும் ரயில் கட்டுப்பாட்டாளர்கள் இன்று நள்ளிரவு முதல் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

பணிக்கு இணைத்தல், பதவி உயர்வு மற்றும் வேதன பிரச்சினை உள்ளிட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு பெற்றுக்கொடுக்க நிர்வாக அதிகாரி நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதாலேயே தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக ரயில் சாரதிகள் சங்கத்தின் செயலாளர் இந்திக தொடங்கொட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக புகையிரத திணைக்கள அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளதாக தொழிற்சங்க உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

## மேல் மாகாண முதலமைச்சருக்கு ஜனாதிபதி எச்சரிக்கை

கொழும்பு நகரில் தேங்கி கிடக்கும் குப்பைகளை 3 நாட்களுக்குள் அகற்றுமாறும் இல்லையேல் இது தொடர்பில் தீர்மானம் ஒன்று எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டுள்ளது.

மேல்மாகாண முதலமைச்சர் இசுரு தேவப்பிரியவிற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

கடந்த 17ஆம் திகதி ஜனாதிபதியின் உத்தியோகப் பூர்வ இல்லத்திற்கு முதலமைச்சரை அழைத்த ஜனாதிபதி இது தொடர்பில் எச்சரித்துள்ளதாகவும் ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.



கொழும்பு மற்றும் அதனை அண்மித்த நகரங்களில் தேங்கிக் கிடக்கும் குப்பைகள் மற்றும் டெங்கு ஒழிப்பு குறித்து கடந்த தினம் அவசர கலந்துரையாடல் ஒன்று ஜனாதிபதியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதில் முதலமைச்சர் இசுரு தேவப்பிரிய கலந்துக்கொள்ளவில்லை. இந்த நிலையிலேயே, ஜனாதிபதி இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

## செல்பி எடுத்தால் சிறைத் தண்டனை



ரயிலுடன் ஆபத்தான செல்பி புகைப் படம் எடுப்பவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படவுள்ளதாக ரயில் பாதுகாப்பு அதிகாரி அனுர பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.ரயில்வே கட்டளை சட்டத்திற்கமைய பயணிக்கும் ரயில் பயணி அல்லது ஏனைய நபர்கள் இவ்வாறு ஆபத்தான செல்பி புகைப்படங்கள் எடுக்க கூடாதென அவர் குறிப்பிட்டுள்ளார்.அதற்கமைய புகைப்படங்கள் எடுப்பவர்களுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ரயில் வீதியில் பயணிப்பதே தண்டனை வழக்கப்பட வேண்டிய குற்றச் செயல் என அவர் குறிப்பிட்டுள்ளார்.அவ்வாறு இருக்க சிலர் ரயில் வரும் போது செல்பி புகைப் படம் எடுப்பது மிகவும் ஆபத்தான ஒரு விடயம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அண்மையில் ரயில் பாதைகளில் செல்பி புகைப்படம் எடுத்து ஐந்துக்கு மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். இதனையடுத்து பாதுகாகாப்பு நடவடிக்கைகளை வலுப்படுத்தப்பட்டுள்ளது.





பாராளுமன்ற ஊடகவியலாளர்களுக்கான இரண்டுநாள் செயலமர்வு நீர் கொழும்பில் இடம்பெற்ற போது, பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கரு ஜயசூரிய மங்கள விளக்கேற்றி நிகழ்வை தொடக்கி வைத்தார். அமைச்சர் கயந்த கருணாதிலக, பிரதியமைச்சர் லசந்த அழகியவன்ன உள்ளிட்ட பிரமுகர்களும் படத்தில் காணப்படுகின்றனர்.

(படம் எம்.எஸ்.எம். முன்தஸிர்)

## கல்வியியல் கல்லூரிகளுக்கு மாணவர்கள் அனுமதி

கல்வியியல் கல்லூரிகளுக்கு அனுமதி பெற்ற புதிய மாணவர்கள், இன்று முதல் உள்வாங்கப்படவுள்ளதாக ஆசிரியர் கல்வி பிரதம ஆணையாளர் கே.எம். எச்.பண்டார தெரிவித்துள்ளார்.இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றிலேயே இவ்வாறு கூறியுள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடளாவிய ரீதியில் உள்ள கல்வியியல் கல்லூரிகளுக்கு நான்காயிரத்து 303 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர். இந்த விடயம் தொடர்பில் உரிய அறிவுறுத்தல் கடிதங்கள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

அனுமதி பெற்ற மாணவர்களின் விபரங்கள் கல்வியமைச்சின் கல்வியியல் கல்லூரி இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன், இம்முறை கடந்த வருடத்தை விட கூடுதலான மாணவர்கள் கல்வியியல் கல்லூரிகளுக்கு இணைத்துக் கொள்ளப்பட உள்ளனர்.

தகவல் தொழில்நுட்பம் மற்றும் அடிப்படைக் கல்விச் செயற்பாடுகள் தொடர்பான பாடத்திட்டங்களும் கற்கைநெறியில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளன. கற்கை நெறிகள் ஆரம்பமாவதற்கு முன்னர் பத்து தினங்களுக்கு நிறுவன ரீதியான ஆரம்ப பயிற்சிகள் வழங்கப்படும் என ஆணையாளர் கே.எம்.எச்.பண்டார மேலும் தெரிவித்தார்.

## சைட்டத்துக்கு எதிராக மீண்டும் சத்தியாக்கிரகம்

மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியை இரத்து செய்ய விரைவான நவடிக்கை எடுக்கவேண்டும் என அரசாங்கத்தை வலியுறுத்தி இன்று கொழும்பு- கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பு சத்தியாக்கிரகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.வைத்திய பீட மாணவர்களின் பெற்றோர் சங்கம் இந்த சத்தியகிரகத்தை ஆரம்பிக்கவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

சைட்டம் தனியார் கல்லூரி தொடர்பான பிரச்சினைக்கு விரைவான தீர்வினைக் கோரி இவர்கள் இந்த சத்தியகிரகத்தில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இலங்கை அதிபர் தர பிரச்சினைகள் தீர்க்கப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த மாதம் 28ஆம் திகதி கல்வி அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.ஆசிரியர்-அதிபர் முன்னணி சங்கம் ஒன்றிணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலங்கைக்கு அரிசி இறக்குமதி செய்ய வேண்டிய தேவை இல்லை

### இலங்கை அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம்

அரச தரப்பு தரவுகளின் பிரகாரம் இலங்கைக்கு வெளிநாட்டில் இருந்து அரிசி இறக்குமதி செய்ய வேண்டிய தேவை இல்லை என, அனைத்து இலங்கை அரிசி உற்பத்தியாளர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது. மாத்தளை பகுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அச் சங்கத்தின் தலைவர் முதித பெரேரா இதனைக் கூறியுள்ளார்.

இந்நிலையில், மூன்று மாதங்களின் பின்னர் இரண்டு இலட்சம் மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்படவுள்ளதாக அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வோர் மற்றும் வர்த்தக சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். இறக்குமதி செய்யப்பட்டுள்ள அரிசி நாடளாவிய ரீதியில் இந்த வாரம் பகிர்ந்தளிக்கப்படும் என அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வோர் மற்றும் வர்த்தக சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் ஹேமக பெர்ணாந்து குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை அடுத்த மாதமளவில் மேலும் 150,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.பிளாஸ்டிக் அரிசி இறக்குமதி செய்யப்படுவதாக வெளியாகும் செய்தி, வதந்தி எனவும் ஹேமக பெர்ணாந்து தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்கமதி செய்வதை விரும்பாதவர்கள், பிளாஸ்டிக் அரிசி இறக்குமதி செய்யப்படுவதாக பொய் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளதாகவும் அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வோர் மற்றும் வர்த்தக சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் ஹேமக பெர்ணாந்து சுட்டிக்காட்டியுள்ளார்.

## மேல் மாகாண சபை அமர்வு இன்று

(எம்.எஸ்.எம். முன்தஸிர்)

மேல் மாகாண சபையின் ஜூன் மாத இரண்டாவது அமர்வு இன்று 20ஆம் திகதி காலை 9.30 மணிக்கு ஸ்ரீ ஜயவர்தனபுர, பத்தரமுல்லையில் அமைந்துள்ள மேல் மாகாண சபையின் கேட்போர் கூடத்தில் மாகாண சபையின் தலைவர் சுனில் விஜேரத்ன தலைமையில் கூடவுள்ளது.

அமைச்சர்களிடமிருந்து பதில் எதிர்பார்த்து உறுப்பினர்களின் ஏழு எழுத்து மூல வினாக்கள் கூட்ட நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றுள்ளன.

நாட்டில் அண்மையில் நிகழ்ந்த வெள்ள அனர்த்தங்களினால் உயிரிழந்த மற்றும் இடம்பெயர்ந்த மக்களுக்கு சபையின் அனுதாபத்தைத் தெரிவிக்கும் பிரேரணை உள்ளிட்ட நான்கு தனிநபர் பிரேரணைகளும் இன்றைய கூட்ட நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.







இலங்கை இராணுவ அகடமியில் பயிற்சி பெற்று வந்த 60 கெடட் அதிகாரிகள், தங்களது பயிற்சிகளை முடித்துக்கொண்டு இராணுவ அதிகாரிகளாக வெளியேறும் நிகழ்வு தியத்தலாவ இராணுவ முகாமில் கடந்த சனிக்கிழமை(07) நடைபெற்றது.இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்தன ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

## இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு 15 கோடி ரூபா நிதி கையளிப்பு

வெள்ளப் பெருக்கு, மண்சரிவு மற்றும் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கு மற்றும் வீட்டு உபகரணங்களுக்கு 15 கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளதாக அனர்த்த நிவாரண அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட வீடொன்றுக்கு ஆரம்ப கட்டமாக பத்தாயிரம் ரூபா வீதம் வழங்குவதற்கு நிதி வழங்கப்பட்டிருப்பதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

இதில் அதிகளவாக மாத்தறை மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது.இந்த மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட 7171 வீடுகளுக்கு வழங்குவதற்கு 456 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. இரத்தினபுரி மாவட்டத்தில் 6176 வீடுகளுக்கு 380 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

காலி, களுத்துறை மாவட்டங்களுக்கு 250 இலட்சம் ரூபா வீதம் வழங்கப்பட்டுள்ளது.

காலியில் 3269 வீடுகளும், களுத்துறையில் 3224 வீடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் 830 வீடுகளுக்கு 830, 00, 000 ரூபாவும், 240 வீடுகளுக்காக கேகாலை மாவட்டத்திற்கு 240, 00, 000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களுக்கு 50 ஆயிரம், 40 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

NAVAMANI DAILY
# நவமணி
FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com
20th JUNE 2017 - TUESDAY

# பொது விவகாரங்களில் சிறுபான்மையினர் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்!

நல்லாட்சி அரசின் கீழ் பல புதிய மாற்றங்களும், நகர்வுகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில், அவற்றை திறம்பட எதிர்கொள்வதற்காக, இலங்கை சிறுபான்மை சமூகங்கள் ஒன்றிணைந்து செயற்படுவதற்கான ஒரு பொறிமுறையை உருவாக்குவது தொடர்பில் மிகவும் அவசரமாக செயற்பட வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இந்த அரசு ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் வாக்குறுதி வழங்கிய விடயங்களில், எதிர்கால இலங்கையின் போக்கை தீர்மானிக்கும் இரு பிரதான விடயங்கள் இருக்கின்றன. ஒன்று, இலங்கைக்கான புதிய அரசியலமைப்பு. மற்றையது, புதிய தேர்தல் முறைமை.

இந்த இரு விடயங்களும் இந்த நாட்டின் எதிர்கால சமூக சூழ்நிலையையும், அரசியலையும் தீர்மானிக்கும் விடயங்களாகும். புதிய அரசியலமைப்பு இந்த நாட்டு மக்களை எவ்வாறு ஆளப் போகின்றது? புதிய தேர்தல் முறை அந்த ஆட்சியாளர்களை எவ்வாறு தேர்ந்தெடுக்கப் போகின்றது? என்ற பிரதான விடயங்களை மையப்படுத்தி அமையப் போகின்றன.

இதுவரையிலும் இலங்கையில் கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புக்கள் இந்த நாட்டின் அனைத்து இன மக்களையும் சமமாக நோக்காத காரணத்ினாலேயே, இலங்கையில் பாரியதொரு சிவில் யுத்தம் நடைபெற்று ஓய்ந்தது. எனவே, புதிய அரசியலமைப்பானது இந்த நாட்டின் அனைத்து இனத்தவர்களையும், மதத்தவர்களையும் சமமாக நோக்கும் வகையில் அமைக்கப்பட வேண்டும்.

இலங்கையின் பிரதான மதமாக ஒரு மதத்தை மாத்திரம் வரையறை செய்தல், அதற்கு மட்டுமே அரச அனுசரணையை வழங்குதல் போன்ற விடயங்கள் சிறுபான்மை மக்கள் மத்தியில் தம்மை இரண்டாம் தரப் பிரஜைகளாக இந்த நாடு நடத்துகின்றதோ என்ற கவலையை காலாகாலமாக ஏற்படுத்திவிருக்கின்றது.

அத்தோடு, அதிகாரங்கள் அனைத்தும் மத்திய அரசிடம் குவிக்கப்பட்டுள்ளதால், சிறுபான்மை மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற பகுதிகளிலுள்ள மாகாண சபைகளும் வெறும் நிர்வாக அலகுகளாக மட்டுமே இருந்து விட்டுப் போகும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

எனவே, புதிய அரசியலமைப்பானது அனைத்து மதத்தவர்களையும் சமமாக நோக்குகின்ற வகையிலும், சிறுபான்மையினங்களும், அதிகாரங்களை கொண்டிருக்கும் வகையிலும் அமைய வேண்டும். இதற்கான அழுத்தங்களை சிறுபான்மை சமூகம் வழங்க வேண்டும்.

இன்னுமொரு புறத்தில் புதிய தேர்தல் முறை நடைமுறைக்கு வந்தால், கிழக்கு மாகாணத்துக்கு வெளியே வாழ்கின்ற சிறுபான்மை முஸ்லிம் சமூகம் அரசியல் ரீதியாக அநாதரவான நிலைக்குத் தள்ளப்படும் என்ற அச்சம் நிலவுகின்றது. எனவே, இந்த விடயமும் அதிகம் முக்கியத்துவம் கொடுத்துப் பார்க்கப்பட வேண்டியுள்ளது.

இவ்வாறு சிறுபான்மை சமூகங்கள் எதிர்கொள்கின்ற பொதுவான விவகாரங்களை ஒன்றிணைந்து கையாளக்கூடிய வகையிலான ஒரு பொறிமுறை மிக அவசரமாக உருவாக்கப்பட வேண்டும். இந்த விவகாரம் குறித்து தமிழ், முஸ்லிம் சமூகங்களைச் சேர்ந்த சிவில் சமூக நிறுவனங்களும், அரசியல் வாதிகளும் அதிக அக்கறை எடுத்துக்கொள்ள வேண்டும்.

தமிழ் சமூகம் எதிர்கொள்கின்ற பிரச்சினைகளை கூட்டாக அணுகுவதற்கான பொறிமுறைகளை தமிழ் சமூகம் ஓரளவு கொண்டிருக்கின்றது. அதேநேரம், முஸ்லிம் சமூகமும் தாம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை கூட்டாக அணுகுவதற்கான பொறிமுறைகளை ஓரளவு கொண்டிருக்கின்றது. ஆனால், இந்த இரு சிறுபான்மை சமூகங்களும் ஒன்றிணைந்து செயற்படும் ஒரு பொறிமுறை மிக அவசரமாக உருவாக்கப்பட வேண்டும். இது குறித்து தமிழ், முஸ்லிம் சமூகங்கள் சிந்திக்குமா?

# நெருக்கடியில் வடமாகாண சபை முதலமைச்சர் தப்பிப் பிழைப்பாரா?

**தொகுப்பு- பாறுக் ஷிஹான்**

2013 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலின் அடிப்படையாக உதயமான வடக்கு மாகாண சபை கைதடி பகுதியில் சுமார் 450 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்பட்டு முதலமைச்சர் சீ.வி. விக்கினேஸ்வரன் உள்ளிட்ட 38 உறுப்பினர்களுடன் இயங்கி வந்தது யாவரும் அறிந்ததே.

இந்நிலையில் தற்போது முதலமைச்சரை பெரும்பான்மையை நிரூபிக்குமாறு கோருவதுடன் புதிய முதலமைச்சரை பெரும்பான்மையை நிரூபிக்குமாறு கோருவதும் நீதியரசர் விக்னேஸ்வரன் பதவியில் இருந்து அகற்றுவதும் என்கின்ற விடயங்கள் தற்போது வட புல அரசியலில் பேசும் பொருளாக வெளிவந்துள்ளது.

இதில் தற்போதைய முதலமைச்சரை வீட்டுக்கு அனுப்புவது என்றும் புதிய முதலமைச்சராக தற்போதைய அவைத்தலைவர் சீ.வி.கே.சிவஞானம் அவர்களை நியமிப்பது தொடர்பாக பேசப்பட்டு வருகின்றது. அத்துடன் இது தவறின் சுகாதார அமைச்சர் சத்தியலிங்கத்தின் பெயரும் முதலமைச்சர் பதவிக்காக முன்மொழிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்நிலைமையில் தான் ஆளும் கட்சி உறுப்பினர்களில் பெரும்பான்மையாக 15 உறுப்பினர்கள் உள்ளிட்ட எதிர்கட்சியின் சில உறுப்பினர்கள் உள்ளடங்கலாக முதலமைச்சருக்கு எதிராகவும் ஏனைய ஆளுங்கட்சி 14 உறுப்பினர்களுடன் சில எதிர்கட்சி உறுப்பினர்கள் முதலமைச்சருக்கு ஆதரவாகவும் ஏட்டிக்கு போட்டியாக ஆளுநர் ரெஜினோல்ட் குரேயிடம் மகஜர் ஒன்றை கையளித்துள்ளனர்.

எதிர்வரும் 22ஆம் திகதி இடம்பெறவுள்ள சபை அமர்வில் பெரும்பான்மையை நிருபித்து தற்போதைய முதலமைச்சரை மீளவும் கொண்டு வர முயற்சிக்க ஒரு குழுவும் மற்றுமொரு குழு தற்போதைய முதல்வரை அகற்றுவது அதனுடன் புதிய ஆளும் கட்சி தலைவர் ஒருவரை முதலமைச்சராக நியமிப்பது என்ற நிலைப்பாட்டில் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும் எஞ்சியுள்ள ஒன்றரை வருட காலப் பகுதியிலும் வட மாகாண சபை நெருக்கடியான சூழலுக்குச் சுமூகமானதொரு தீர்வு காண வேண்டுமெனில் தற்போதைய முதலமைச்சரே பதவியில் நீடிக்க வேண்டும் என இன்னொரு தரப்பும் தமிழரசுக் கட்சி முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை திரும்பப் பெறாவிட்டால் பாராளுமன்றத்திலும் பங்காளிக்கட்சிகள் தனித்து இயங்குவதுகுறித்து பேசி வருவதாக தெரியவருவதாக தெரிய வந்துள்ளது.தற்போது ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிராக வடமாகாணமுதலமைச்சர் சீ.வி.விக்கினேஸ்வரன் நடவடிக்கை எடுத்திருந்த நிலையில் தமிழரசுக்கட்சி அரச கட்சிகளுடன் இணைந்து முதலமைச்சருக்கு எதிராக தன்னிச்சையாக நம்பிக்கையில்லா தீர்மானம் ஒன்றை கொண்டு வந்துள்ளமையே இவ்வாறான பிரச்சினை தோன்ற காரணமாக அமைந்துள்ளது.

இந்த வேளையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளாகிய ஈபிஆர்எல்எப் ரெலோ புளொட் ஆகிய கட்சிகள் வன்மையாக கண்டித்துள்ளதுடன் வடமாகாண முதலமைச்சருக்கு தமது ஆதரவையும் வழங்கியுள்ளன.பங்காளிக்கட்சிகள் தனித்து இயங்க முடிவு செய்ய உள்ள காரணத்தினால் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் நெருக்கடி உருவாகியுள்ளது. இதே வேளை வடமாகாண முதலமைச்சர் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினையில் ஜனாதிபதியை சந்திக்க சென்ற ஆளுநர் ரெஜினோல் குரேயை வடமாகாண முதலமைச்சர் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினையில் மத்திய அரசாங்கம் தலையிட விரும்பவில்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ளதுடன் அதனை முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரனே பார்த்துக்கொள்ளட்டும் என கூறியுள்ளார்.அத்துடன் ஊழலுக்கு எதிராக செயற்பட்டு வரும் நல்லாட்சி அரசில் ஊழல் தொடர்பான வடக்கு முதலமைச்சரின் விடயத்தில் தலையிடுவது பொருத்தமற்றது எனவும் அவர் கூறியுள்ளார்.

**நடந்தது என்ன?**
**அமைச்சர்களைப் பதவி நீக்க விசாரணைக்குழு பரிந்துரை**

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு தனது அறிக்கையில் இரு அமைச்சர்கள் பதவி விலக வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.

கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் தம்பிராசா குருகுலராசா மற்றும் விவசாயமும் கமநல சேவைகளும் கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசன கூட்டுறவுத்துறை மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் ஆகியோரையே பதவி விலக வேண்டும் என்று அந்த அறிக்கை பரிந்துரைத்துள்ளது.

வடக்கு மாகாண சபையில் முதலமைச்சர் உட்பட 5 அமைச்சர்கள் பதவி வகிக்கின்றனர். அவர்கள் மீது ஊழல் மோசடிக் குற்றச்சாட்டுக்கள் சொந்தக் கட்சியினராலேயே முன்வைக்கப் பட்டு வந்தன. அது தீவிரம் பெற்று விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கு எதிராக விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வடக்கு மாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதை அடுத்து அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரிக்க சுயாதீனமான குழு ஒன்றை நியமிக்கின்றேன் என்று முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அறிவித்தார்.

ஓய்வுபெற்ற நீதிபதிகளான எஸ்.தியாகேந்திரன் எஸ்.பரமராஜா மற்றும் ஓய்வு பெற்ற மாவட்டச் செயலர் செ.பத்மநாதன் ஆகியோர் அந்த விசாரணைக் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். இந்தக் குழு செப்ரெம்பர் மாதம் 20 ஆம் திகதி நியமிக்கப்பட்டது. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தனது பணியை ஆரம்பித்தது. அதன் இறுதி அறிக்கை கடந்த மே மாதம் 19ஆம் திகதி முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

விசாரணை அறிக்கை 82 பக்கங்களைக் கொண்டுள்ளது. முழுமையாகத் தமிழ் மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளது. விசாரணைக் குழுவுக்கு வழங்கப்பட்ட ஆணை விதிமுறை அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் கண்டறிவுகள் பரிந்துரைகள் அல்லது விதப்புரைகள் நன்றியுரை என்ற கட்டமைப்பில் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.

**பதவி பறிபோகுமா ? விசேட அமர்வாக கூடிய சபை**

வடமாகாணசபை அமைச்சர்கள் மீது முன்வைக்கப் பட்ட முறைகேட்டு குற்ற சாட்டுக்கள் குறித்து விசாரிப்பதற்காக முதலமைச்சர்



சீ.வி.விக்னேஸ்வரனால் நியமிக்கப்பட்ட விசாரணை குழுவின் அறிக்கை தொடர்பாக ஆராய்வதற்காக வடமாகாணசபையின் விசேட அமர்வு ஜுன் 6 இல் வடமாகாணசபையின் 94ம் அமர்வாக மாகாணசபையின் பேரவை செயலக சபா மண்டபத்தில் நடைபெற்றது .

**தமிழரசுக்கட்சியின் சதிவலை - ஐங்கரநேசன் வெளியே - குருகுலராசா உள்ளே**

வடமாகாண அமைச்சர்கள் விடயத்தில் விவசாய அமைச்சர் ஐங்கரநேசனை பதவியிலிருந்து அகற்றிவிட்டு கல்வி அமைச்சர் குருகுலராஜாவை காப்பாற்றும் நோக்கில் தமிழரசு கட்சி மும்முரமாக செயற்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதன் பின்னணியில் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மும்முரமான வேலைத்திட்டங்களில் ஈடுபட்டனர். கிளிநொச்சி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் குருகுலராஜாவைக் காப்பாற்றும் கைங்கரியங்களில் கடுமையாக ஈடுபட்டு வந்தார். கல்வி அமைச்சருக்கு எதிரான நடவடிக்கைகளினால் சீற்றமடைந்துள்ள அவர் இது தொடர்பில் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவையிடம் காட்டமான கருத்துக்கள் சிலவற்றினை முன்வைத்துள்ளதாக சொல்லப்படுகின்றது.

அதே நேரம் பிரபல வர்த்தகரான யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஐங்கரநேசனை பதவிநீக்கம் செய்யும் முனைப்பில் காய்களை நகர்த்திவருவதாக தெரியவருகின்றது. அதற்காக அவர் தனது கட்சி ஊடகத்தை கடுமையாகப் பயன்படுத்தி ஐங்கரநேசனை இலக்குவைத்து தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்றமையும் தெரிந்ததே. இவருக்குப் பக்கபலமாக சுமந்திரன் ஆதரவு அணியினரும் ஐங்கரநேசனை இலக்குவைத்து அவரை வெளியகற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

வடக்கு மாகாணசபையைப் பொறுத்தவரை நான்கு அமைச்சர்களும் மோசடிகளில் ஈடுபட்டதில் ஒருவருக்கொருவர் சளைத்தவர்கள் அல்ல எனக் கூறப்படுகின்றபோதும் ஐங்கரநேசன் முதலமைச்சருக்கு நெருக்கமாகச் செயற்பட்டமையே அவரை பழிவாங்குவதனூடாக முதலமைச்சரை ஓரங்கட்டும் வேலைத்திட்டமே அமைச்சர்களிற்கு எதிராக குற்றச்சாட்டுக்களும் தற்போதுவரையான நடவடிக்கைகளும் என அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சகல அமைச்சுக்களின் மீதும் முறைப்படியான நீதியான விசாரணை ஒன்று முன்னெடுக்கப்பட்டால் நான்கு அமைச்சர்களும் பதவி இழக்கவேண்டும் எனக் கூறப்படுகின்றது

**கல்வி அமைச்சர் த.குருகுலராசா மீதான குற்றச்சாட்டு**

கல்வி அமைச்சர் த.குருகுலராசா கல்விச் சேவைப் பின்புலத்திலிருந்து வந்தவர். வடக்கின் கல்வி வீழ்ச்சியடைந்திருந்தது. இவ்வாறான சூழலில் கல்வி அமைச்சராகப் பொறுப்பேற்றார். இதன் பின்னரும் கல்விப் புலத்தில் முன்னேற்றம் ஏற்படவில்லை.

அமைச்சர் குருகுலராசா அதிகார முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளார். கல்வி அமைச்சின் செயலாளரின் அதிகாரத்தை அமைச்சர் தனது கையில் எடுத்துள்ளார். இடமாற்றங்களின் போது அரசியல் செல்வாக்குச் செலுத்தப்பட்டுள்ளது. செயலாளருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை முறையற்ற விதத்தில் அமைச்சர் பயன்படுத்த வகை செய்யும் அமைச்சரவைப் பத்திரம் சமர்பிக்கப்பட்டிருக்கின்றது.

**இதில் செயலாளரும் கையெழுத்திட்டு உடந்தையாக இருந்திருக்கிறார்**

இப்படியானதொரு அமைச்சரவைப் பத்திரம் சமர்பிக்கப்பட்டபோது தலைமைச் செயலாளரும் அமைச்சரவைக் கூட்டத்தில் இருந்துள்ளார். வடக்கு மாகாண சபை திறனற்றுச் செயற்படுகின்றது என்ற குற்றச்சாட்டு மக்களால் முன்வைக்கப்பட்டு வருவதை ஆமோதிப்பது போன்று இது உள்ளது.

மிக முக்கியமாக கிளிநொச்சி மாவட்டத்தில் பாடசாலைச் சிறுமி ஒருவர் பாடசாலை அதிபரால் பாலியல் வதைக்கு உட்படுத்தப்பட்டார். சம்பவம் குறித்துக் குரல் எழுப்பிய பாடசாலை ஆசிரியரை கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளருடன் இணைந்து கல்வி அமைச்சர் இடமாற்றம் செய்துள்ளார். இது மிக மோசமான மன்னிக்க முடியாத குற்றம்.

எனவே கல்வி அமைச்சர் த.குருகுலராஜா உடனடியாகத் தனது அமைச்சுப் பதவியிலிருந்து விலக வேண்டும். அத்துடன் கல்வி அமைச்சின் செயலாளரும் அந்தப் பதவியிலிருந்து விலக வேண்டும்.

விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மீதான குற்றச்சாட்டு

விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மீது பல குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன. ஆளும் கட்சி உறுப்பினரான ஜீ.ரீ.லிங்கநாதன், தன்னுடன் வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவுடன் விசாரணைக் குழுவிடம் முன்னிலையாகியிருந்தனர். அமைச்சர் பொ.ஐங்கரநேசனிடம் தவராசா குறுக்கு விசாரணை செய்திருந்தார். அதிகார வரம்பு மீறல், முறைகேடுகள், நிதி மோசடி தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டன.

மூத்த இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் இருக்கின்ற நிலையில், இளையவரான ம.பற்றிக் டிறைஞ்சன் இவரது அமைச்சின் செயலராக நியமிக்கப்பட்டார். இது இவர் செய்கின்ற மோசடியான நடவடிக்கைகளுக்கு இணங்கிச் செயற்படுவதற்காகவே மேற்கொள்ளப்பட்டதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

மரம் நடுகை, பாதீனிய ஒழிப்பு, நீர் ஆய்வு விடயங்களை சுற்றாடல் அமைச்சர் என்ற கோதாவில் முன்னெடுத்துள்ளார். சுற்றுச்சூழல் விடயம் 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் ஒருங்கிணைவு நிரலில் உள்ளது. இவற்றை கொழும்பு அரசுடன் சேர்ந்து திணைக்களம் உருவாக்கி மேற்கொண்டிருக்க வேண்டும். அப்படியல்லாமல் அமைச்சரை முன்னிலைப்படுத்தியே இவரது செயற்திட்டங்கள் அமைந்துள்ளன.

இத்தகைய செயற்திட்டங்களின் தொடக்க நிகழ்வுகளுக்கு முதலமைச்சர் அழைக்கப்பட்டிருக்கின்றார். அவரே இவற்றை இயக்குவதான பின்னணியில் இருப்பதான மாயை ஏற்படுத்தும் நோக்கில் செயற்பட்டுள்ளார். அதனை வைத்து தனது கைங்கரியங்களை நிறைவேற்றியுள்ளார்.

இவரது அமைச்சுக்கு வழங்கப்பட்ட தண்ணீர் பவுசர்களை உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்காமல் தனது கட்டுப்பாட்டில் வைத்துள்ளார்.

விவசாய கிணறு புனரமைப்பு, புழுதியாற்று ஏற்று நீர்பாசனத் திட்டங்களில் நிதி முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன.

வடக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளராகக் கடமையாற்றிய திருமதி மதுமதி வசந்தகுமார், இவரது அழுத்தங்கள் காரணமாகவே மாகாண சபை சேவையை விட்டு வெளியேறினார் என்று விசாரணைக் குழு கண்டறிந்துள்ளது. வடமராட்சி கிழக்கு கூட்டுறவுச் சங்கத் தலைவரை பதவி நீக்கம் செய்தமை உள்ளிட்ட விடயங்களில் அமைச்சர் நேரடியாக தலையீடு செய்து அழுத்தங்களை வழங்கியுள்ளார்.

இதேபோன்று யாழ்கோவிலும் தலையீடு செய்துள்ளார். இதனால் விசாரணைக் குழு விசனமடைகின்றது. பிந்திய செய்தியாக யாழ்கோ பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் நியமனத்திலும் அழுத்தம் கொடுத்துள்ளார் என்று அறிகின்றோம்.

**மற்றைய அமைச்சர்களது குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை**

சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் மீதான குற்றச்சாட்டுக்கள் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்பட வில்லை. இதனால் அவர் சகல குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவிக்கப் படுகின்றார்.

அமைச்சர் பா.டெனீஸ்வரன் மீது குற்றச்சாட்டுக்கள் சுமத்தியவர்கள்இ விசாரணைக்கு சமுகமளிக்கவில்லை. எனினும் குற்றச் சாட்டுக்கள் விசாரிக்கப்பட்டன. ஆதாரங்கள் இல்லாததால் அவரும் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்கப்படுகின்றார்.

**விசாரணைக் குழு மீது நம்பிக்கையில்லை**

தமக்கு எதிராக விசாரணைகளை மேற்கொண்ட விசாரணைக் குழுவின் நம்பகத்தன்மை மீது வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன் கேள்வி எழுப்பியுள்ளார். வடக்கு மாகாண சபையின் ஒரு குறிப்பிட்ட விடயம் தொடர்பில் நீதிமன்றத்தில் எதிராக வாதாடும் ஒருவர் அதனோடு தொடர்புடைய விசாரணைக் குழுவின் நீதிபதியாக இருந்து தீர்ப்பளிப்பதை தான் முரண்பாடாக பார்ப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாண அமைச்சர்களிற்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைக் குழுவின் அறிக்கை வடக்கு மாகாண சபையில் முதலமைச்சரால் சமர்பிக்கப்பட்டபின் அதற்கு பதிலளித்து உரையாற்றியபோதே விவசாய அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட முன்பு அது தொடர்பில் தகவல்கள் வெளியில் வந்து வைகளும் திரிவுபடுத்தப்பட்ட செய்திகளும் வருவது எம்மைப் பாதிக்கும். நாங்கள் கூறிய விடயங்கள் பல அறிக்கையில் வெளியிடப்படவில்லை. கூறாத பல விடயங்கள் வெளிவந்திருக்கின்றன. பல விடயங்கள் பிழையானவை. சபை உறுப்பினர்கள் அனைவரது கைகளிற்கும் அறிக்கை கிடைத்ததும் இது தொடர்பான விளக்கம் அளிக்கின்றேன் என்றார் அவர்.

**வடமாகாண அமைச்சர்கள் மூவர் உட்பட 16 உறுப்பினர்கள் ஆளுநருடன் சந்திப்பு.**

முதலமைச்சருக்கு எதிரான பிரேரணை கையளிப்பு

வடமாகாண முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை வடமாகாண ஆளுநரிடம் ஆளும் கட்சியினர் ஜுன் 14 விசேட அமர்வின் பின்னர் கையளித்துள்ளனர். அவைத்தலைவர் சீ.வி.கே சிவஞானம் தலைமையில் வடமாகாண ஆளுநரை சந்தித்த மாகாணசபை உறுப்பினர்கள் 16 பேர் முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை கையளித்துள்ளனர். அதேவேளை முதலமைச்சருக்கு எதிராக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆளும் கட்சி உறுப்பினர்கள் 22 பேர் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவு தெரிவிக்கவுள்ளனர் என தெரியவருகிறது.

எதிர்க்கட்சித் தலைவர் தவராஜா உட்பட ஈபிடிபி மாகாணசபை உறுப்பினர்கள் முதலமைச்சருக்கு எதிரான நம்பிக்கையிலாப் பிரேரணையில் கையெழுத்திடவில்லை. வடமாகாணசபை குறைந்தபட்சமாவது இயங்குவதற்கு ஈபிடிபி இன் ஒத்துழைப்பே முதலமைச்சருக்கு கை கொடுத்து வந்துள்ளது.

நாட்டின் ஏனைய ஏழு மாகாண சபைகளும் நீண்ட காலம் இயங்கிய அனுபவத்தினை உடையவை. வட மகாடண சபையோ மிக இளைய மாகாண சபையாகும். இந்த மாகாண சபை எப்படி நெருக்கடியை எதிர்கொள்கின்றது என்பதை எதிர்வரும் வியாழக்கிழமை அறிய முடியும்.

# கிழக்கு மாகாணசபை தேர்தலில் மக்கள் காங்கிரஸுக்கு கூட்டமைத்து போட்டியிடும் அவசியம் கிடையாது

## பிரதித் தலைவர் ஜெமீல்

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் எந்தவொரு கட்சியுடனும் கூட்டமைத்து போட்டியிட வேண்டிய தேவை அகில இலங்கை மக்கள் காங்கிரஸுக்கு கிடையாது என அக்கட்சியின் பிரதித் தலைவரும் இலங்கை அரச வர்த்தக கூட்டுத்தாபனத் தலைவருமான கலாநிதி ஏ.எம்.ஜெமீல் தெரிவித்தார்.

எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம்.அதாஉல்லாவின் தேசிய காங்கிரஸ், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் முன்னாள் செயலாளர் நாயகம் எம்.ரி.ஹசன் அலி மற்றும் முன்னாள் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் தரப்புகள் ஒன்றிணைந்து போட்டியிடவிருப்பதாக ஊடகங்களில் வெளிவந்துள்ள செய்தி குறித்து தொடர்புகொண்டு கேட்டபோதே அவர் இதனைக் கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

'இன்று கிழக்கு மாகாண மக்கள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் துணிச்சல்



மிக்க தலைமைத் துவத்தின் கீழ் அணிதிரளத் தயாராகி யுள்ளனர். கடந்த பாராளுமன்ற பொதுத் தேர்தலின்போது எமது கட்சிக்கு கிடைத்த மக்கள் ஆதரவு தற்போது பன்மடங்காக அதிகரித்திருக்கிறது. இனிவரும் எந்தவொரு தேர்தலிலும் கிழக்கில் அதிகூடிய வாக்குகளை பெறுகின்ற ஒரு தனிக்கட்சியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் திகழும் என்பதில் சந்தேகம் கிடையாது.

அந்த வகையில் எதிர்வரும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் இன்ஷா அல்லாஹ் தனித்தோ அல்லது வேறு வியூகத்தின் அடிப்படையிலோ போட்டியிட்டு 10 ஆசனங்களைப்பெற்று கிழக்கின் ஆட்சியை தீர்மானிக்கின்ற சக்தியாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் வரக்கூடிய வாய்ப்பிருக்கிறது.

ஆகையினால் வேறு தரப்புகளுடன் கூட்டமைத்து போட்டியிட வேண்டிய எந்தவொரு தேவையும் எமது கட்சிக்கு கிடையாது. இதுவரை எந்தவொரு தரப்பினருடனும் அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தப்படவுமில்லை தீர்மானங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவுமில்லை. அதேவேளை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசில் இருந்து வெளியேறிய சிலரும் மாற்றுக்கட்சிகளிலுள்ள மற்றும் பலரும் எமது கட்சியின் தலைவர், தவிசாளர் மற்றும் முக்கியஸ்தர்களுடன் தனிப்பட்ட முறையில் பேசி வருகின்றனர். அத்தகையோருக்கு எமது கட்சியின் வேட்பாளர் பட்டியலில் இடமளிப்பது குறித்து சாதகமாக பரிசீலிக்கப்படக்கூடிய வாய்ப்பிருக்கிறது.

எவ்வாறாயினும் சமூக நலன் கருதி வேறு கட்சிகளுடன் கூட்டமைத்து போட்டியிட வேண்டிய தேவை ஏற்பட்டால் தேர்தல் அறிவிப்பு வெளியிடப்பட்ட பின்னர் அதற்கான உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு கட்சியின் தலைமைத்துவம் தயாராக இருக்கிறது' என்று கலாநிதி ஏ.எம்.ஜெமீல் குறிப்பிட்டார்.

# இரு அமைச்சர்கள் தொடர்பில் உத்தரவாதம் வழங்கமுடியாது

## இரா.சம்பந்தன் விக்கிக்கு மறுப்பு



குற்றங்கள் நிருபிக்கப்படாத இரு அமைச்சர்கள் தொடர்பில் என்னால் எவ்வித உத்தரவாதத்தையும் வழங்க முடியாது என்று வடக்கு முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள கடிதத்தில்,

எமக்கு முன்னால் உள்ள பிரச்சினையை மட்டுமே நான் கையாளுவேன். விசாரணைக் குழுவினால் குற்றவாளிகளாகக் காணப்படாத இரண்டு அமைச்சர்களுக்கும் எதிரான தண்டனைச் செயற்பாடு நியாயப்படுத்தக் கூடியதா என்பதே அது.

இரண்டு அமைச்சர்களுக்கும் எதிராக, அவர்கள் குற்றவாளிகளாகக் காணப்படாதபோதிலும் நீங்கள் மேற்கொண்ட தண்டனை நடவடிக்கையே தற்போதைய குழப்பங்கள் எழக் காரணமாகியுள்ளன.

உங்களைச் சந்தித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று கட்சித் தலைவர்களினதும் ஆலோசனைக்கு அமைவாக, ஏதேனும் விசாரணையின் போது இரண்டு அமைச்சர்களினதும் நடத்தை தொடர்பாக நான் ஓர் உத்தரவாதத்தைத் தந்தால், குறித்த அமைச்சர்கள் இருவர் தொடர்பான திருத்த நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்ற எனது கருத்தை, கட்சித் தலைவர்களும் ஆதரிப்பார்கள் என்ற ஆலோசனையைக் கூறியுள்ளீர்கள்.

விசாரணை தொடர்பாக இரண்டு அமைச்சர்களினதும் நடத்தையைவிட்டு நான் உத்தரவாதமளிக்க வேண்டுமென்று எவ்வாறு ஆலோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதை என்னால் விளங்கிக்கொள்ள முடியவில்லை. அத்தகைய உத்தரவாதமொன்றை நிச்சயமாக நான் தரப்போவதில்லை.

நான் ஏற்கனவே தெரிவித்திருந்தபடி, இயற்கை நீதிக் கோட்பாடுகளுக்கு மாறான தங்களுடைய நடவடிக்கையின் தொடர்ச்சியாக மாகாண சபையில் ஏற்பட்டுள்ள குழப்பநிலைமையைச் சீர்செய்வதற்காகவே நான் எனது ஒத்துழைப்பை நல்க முயற்சிக்கின்றேன்.

எனினும், ஒரு சட்டரீதியான, சுதந்திரமான விசாரணைக்குத் தடைகள் எதனையும் ஏற்படுத்தக்கூடாது என நான் குறித்த இரு அமைச்சர்களுக்கும் நிச்சயமாக ஆலோசனை கூறுவேன். இந்த விடயம் மேலும் தாமதப்படுத்தக் கூடியதென நான் கருதவில்லை. ஆதலால் தாங்கள் தாமதமின்றிச் செயற்பட வேண்டும்.

வடக்கு மாகாணத்துக்கான முதலமைச்சர் வேட்பாளராகத் தங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்து அதனைத் தங்களுக்குத் தெரிவித்தவேளையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எல்லாத் தலைவர்களின் முன்பாகவும் மாவை சேனாதிராஜாவிடம் நீங்கள் கூறினீர்கள், வடமாகாண சபையின் நிர்வாகத்தை நடத்திச் செல்வதில் அவரது வழிகாட்டலும் அரசியல் ஆலோசனைகளும் உங்களுக்குத் தேவைப்படும் என்பதாக. இது அவ்வாறே நிறைவேற்றப்பட்டதா என்பதைச் சிலவேளை நீங்கள் உங்களையே கேட்டுக் கொள்ளலாம்.

மாவை சேனாதிராஜா, எமது மக்களுக்காகவும் கட்சிக்காகவும் பல தியாகங்களைச் செய்த, அதிக துயரங்களை அனுபவித்த ஒரு தலைவராவார். இத்தகைய பெறுமதிவாய்ந்தவர்கள் ஓரங்கட்டப்படக் கூடாது என்றார்.

## கலாநிதி றமீஸ் அமெரிக்கா பயணம்

(எம்.வை.அமீர்)



தென் கிழக்கு பல்கலைக்கழக சமூகவியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் மாணவர் நலன்புரி பணிப்பாளரும் சர்வதேச விவகாரங்களுக்கான இணைப்பாளருமாகிய கலாநிதி றமீஸ் அபூபக்கர் இம்மாதம் 22 ம் திகதி 'சமய பல்வகைத்தன்மை எனும் இரண்டு (02) மாதகால சிறு பயிற்சி நெறிக்காக புலமைப்பரிசில் பெற்று அமெரிக்கா பயணமாகிறார். இப்பயிற்சி நெறி அமெரிக்காவின் தலை சிறந்த பல்கலைக்கழகங்களுள் ஒன்றான டெம்பில் பல்கலைக்கழகத்தில் இடம் பெறவிருக்கிறது. உலகில் பல பாகங்களில் இருந்தும் 18 பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தெரிவு செய்யப்பட்ட இப்பயிற்சி நெறிக்கு இலங்கையில் இருந்து இவர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

தனது ஆரம்பக்கல்வியை கல்முனை சாஹிரா தேசிய பாடசாலையிலும் பல்கலைக்கழக கல்வியை தென் கிழக்கு மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தில் தொடர்ந்த இவர், தனது கலாநிதி பட்டப்படிப்பை சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்தார்.

இனமுரண்பாடு, சமயசகிப்பின்மை (Religious intolerance) போன்ற சிக்கல்களால் நிறைந்த இலங்கை போன்ற நாடுகளுக்கு இவரின் இப்பயிற்சி நெறி பல்வேறு வகையில் உதவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## யாழ். வை.எம்.எம்.ஏ நிறுவன ஏற்பாட்டில் ரமழான் அன்பளிப்பு

(பாறுக் ஷிஹான்)

ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் கிளிநொச்சி மண்கும்பான் நயினாதீவு சாவகச்சேரி பகுதியில் உள்ள வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள முஸ்லிம் மக்களுக்கு உலருணவுகள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

இந்த உலருணவுகளை யாழ். வை. எம்.எம்.ஏ நிறுவன ஏற்பாட்டாளர் றஹீம் சமூக சேவகர்களான நஸீர் நிஸ்வான் றொஸின் ஆகியோர் மேற்குறித்த பிரதேசத்தில் உள்ள பள்ளிவாசல் நிர்வாகிகளிடம் கையளித்துள்ளனர்.

சுமார் 100க்கு அதிகமான குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட இவ்வுலருணவில் சீனி, மா, பருப்பு தேயிலை உள்ளிட்ட பொருட்கள் உள்ளடங்குகின்றன.




## பௌத்த, கிறிஸ்தவ, இந்து மத குருக்கள் பங்கேற்ற இப்தார் நிகழ்வு





பௌத்த, கிறிஸ்தவ, இந்து மத குருக்கள் பங்கேற்ற இப்தார் நிகழ்வு சுவிற்சர்லாந்து - சூரிச் மாநிலத்தில் அமைந்துள்ள மஸ்ஜித்துல் ரஹ்மா இலங்கைப் பள்ளிவாசலில் 17ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

இந்நிகழ்வில் சுவிஸில் வசிக்கும் இலங்கை முஸ்லிம்களும் இலங்கை வாழ் முஸ்லிம்களுடன் நெருக்கமான உறவைக் கொண்டுள்ள பாகிஸ்தான், இந்தியா, ஆப்கானிஸ்தான், ஈராக், பலஸ்தீன மக்களும் பங்கேற்றனர். இங்கு தமது கருத்துக்களை தெரிவித்த மதகுருமார்கள்,

இலங்கைக்கு மாத்திரம் நல்லிணக்கம் தேவைப்படவில்லையெனவும் முழு உலகமும் நல்லிணக்கத்திற்காக ஏங்கி நிற்பதாகவும் இதுபோன்ற இப்தார் நிகழ்வுகள் அந்த நல்லிணக்கத்திற்கு துணை நிற்பதாகவும் சுட்டிக்காட்டினர்.

மேலும் இதுபோன்ற இப்தார் நிகழ்வுகள் எதிர்காலங்களிலும் தொடர்ந்து நடத்தப்பட வேண்டுமெனவும் கடந்த காலங்களில் தமக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் காணப்பட்ட உறவுகளை சிலாகித்து கூறியதுடன், இப்தார் நிகழ்வுக்கு தம்மையும் அழைத்தமைக்காக சுவிஸ் வாழ் இலங்கை முஸ்லிம்களுக்கு தமது நன்றிகளையும் தெரிவித்துக் கொண்டனர்.

வாடகைக்கு இடம் வழங்கல்

சம்மாந்துறை சமிர்புர (உடங்கா) கிராமத்தில் ஸபுர் பள்ளிவாசலுக்கு அருகாமையில் வியாபார / கைத்தொழில் / குடியிருப்பு நோக்கத்துக்குரிய வீடு வாடகைக்கு உண்டு.

நீர் மற்றும் மின்சார வசதிகளுடன்

தொடர்புகளுக்கு :
0778592233

# முசலி இப்தார் சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமைக்கு நல்லதொரு முன்மாதிரி - பிரதேச செயலாளர்



(எஸ்.எச்.எம்.வாஜித்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள முசலி பிரதேச செயலகத்தின் முஸ்லிம் மஜ்லிஸின் ஏற்பாட்டில் பிரதேச செயலாளர் கே.எஸ்.வசந்த குமார் தலைமையில் நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதேச செயலாளர் கருத்து தெரிவிக்கையில்,

நான் இந்த பிரதேசத்திற்கு சேவையாற்ற வந்ததன் பின்பு முதன் முதலாவதாக இடம்பெறும் இப்தார் நிகழ்வு அதற்காக நான் பெருமை அடைகின்றேன். இப்படியான நிகழ்வுகளின் ஊடாக இன நல்லுறவு, சமூகங்களுக்கிடையிலான ஒற்றுமை என்பன ஏற்படுவதை பார்க்கின்ற போது மிகவும் சந்தோஷமாக இருக்கின்றது.

எனக்கு பல முஸ்லிம் நண்பர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் நோன்பின் நன்மைகள் பற்றி எனக்கு தெரிவித்துள்ளார்கள். நோன்பை பற்றி நான் இன்னும் படிக்கின்றேன் எனவும் நோன்பு நோற்பதன் காரணமாக மனதை ஒருமுகப்படுத்தி எங்களுடைய ஆசைகளை கட்டுப்படுத்தி படைத்த இறைவனை பயந்தவர்களாக நாங்கள் இருக்கின்றோம்.

ஒரு நோன்பாளி பிழைகள் செய்யமுற்பட்டால் அதனை தடுக்கும் ஒரு கேடயமாக இந்த முஸ்லிம் சமூகத்தின் நோன்பு இருக்கின்றது எனவும் தெரிவித்தார்.

இந் நிகழ்வில் சிலாவத்துறை நிலைய பொலிஸ் அதிகாரிகள், முசலி நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகள், வனவள திணைக்கள அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என சுமார் 200க்கு மேற்பட்ட முஸ்லிம், தமிழ், சிங்களம் என பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.



மாபோலை மலாய் சங்கத்தினரால் வத்தளை நகரசபை மண்டபத்தில் ஏற்பாடு செய்த இப்தார் நோன்பு திறக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை (17ஆம் திகதி) மாலை நடைபெற்றது. இந்நிகழ்வில் இந்தோனேசிய குடியரசின் இலங்கைக்கான கவுன்சிலர் தாவாத்மாஜி ஹனோமன்றாசி உரையாற்றுவதையும் செல்வி நிஹாரா ஹில்மி நன்றியுரை நிகழ்த்துவதையும் மௌலவி அஸ்லம் பாங்கு சொல்வதையும் சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் புரவலர் ஹாசிம் உமர் மலாய் சங்கத்திற்கு புனித குர்ஆன் பிரதியையொன்றை அதன் தலைவர் மொஹமட் தஸ்னீன் சல்டீனிடம் வழங்குவதையும் கலைச் செல்வன் எம்.எம் றவுப் கவுன்சிலர் ஜனாபா ஷெய்னப் ஹமீட் ஆகியோர் உடனிருப்பதையும் இப்தாரில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(அஷ்ரப் ஏ சமத்)

விலைமனு அறிவித்தல்
Lanka Mineral Sands Limited
(கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு)

பெறுமதிமிக்க கனரக கனிம மணல்களை விற்பனை செய்தல்
கேள்வி இல: LMS/MKT/TDR/17/11

இலங்கை கனிம மணல்கள் நிறுவனத்தின் சார்பாக, அமைச்சின் கேள்விமனு சபை தலைவர், பின்வரும் கனரக கனிம மணல் பொருட்களை வாங்குவதற்கு ஆர்வமுள்ள, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தரப்புக்களிடமிருந்து கேள்விமனுக்களைக் கோருகிறார். வாங்குவதற்குசாத்தியமுள்ளோர், அனைத்து கொள்ளளவுக்கும்கேள்விமனு வழங்க வேண்டும்.

| | பொருள் | விற்கப்படும் அளவு | மனு பத்திரம் | கேள்வி மனு மூடப்படும், திறக்கப்படும் திகதி, நேரம் |
|---|---|---|---|---|
| 1 | DRY ILMENITE (PRODUCT IS CERTIFIED TO THE SPECIFICATION PROVIDED) | 3,500 MT (மொத்தமாக விநியோகிக் கப்படுகிறது) | 10,500,000.00 இலங்கை ரூபா அல்லது 70,000.00 அமெ. டொலர் | 11.07.2017 பிற்பகல் 02 மணி |

மனுதாரருக்கான அழைப்பிதழ், விற்பனை நோக்கம், மனுதாரருக்கான அறிவுறுத்தல்கள், விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள், பரிந்துரைக்கப்படும் கேள்விமனு படிவம் மற்றும் பொருளின் விபரங்கள், இலக்கம் 341/21, சரணமாவத்தை, இராஜகிரியவில் அமைந்துள்ள இலங்கை கனிம மணல்கள் நிறுவனத்தின் விளம்பரப் பலகையில் இடப்பட்டுள்ளன. அத்தோடு,ஆர்வமுள்ள தரப்புக்கள் இலகுவாக அணுகுவதற்காக www.lankamineralsands.com என்ற இணையத்தளத்திலும் இடப்பட்டுள்ளன. ஆர்வமுள்ள தரப்புக்கள் கேள்விமனுவின் விபரங்களை அறிந்து கொள்வதற்கு, இணையத்தளத்தை தரிசிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு சந்தைப்படுத்தல் முகாமையாளரை பின்வரும் இலக்கங்கள் ஊடாக தொடர்பு கொள்ளவும். +94 11 2863951-2, +94 11 2863965 அல்லது சந்தைப்படுத்தல் பிரிவை தொடர்பு கொள்ளுங்கள் +94 11 2863954, தொலைநகல் +94 11 2862606, மின்னஞ்சல்: ilmenite@slt.lk

தவிசாளர்
அமைச்சின் கேள்விமனு சபை
இலங்கை கனிம மணல்கள் நிறுவனம்
341/21, சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை




# மனிதனைப் புனிதனாக்கும் பாவமன்னிப்பு கோரல்

- அஷ் ஷெய்க் மஸிஹுத்தீன் இனாமுல்லாஹ்

மனிதன் இயல்பிலேயே தவறிழைக்கக் கூடியவனாக, பாவம் செய்யக் கூடியவனாக படைக்கப் பட்டிருப்பதனை அல்-குர்ஆன் கூறுகின்றது, அவன் அவற்றிலிருந்து மீளுவதற்கும், திருந்திக் கொள்வதற்குமான வழி வகைகளை இஸ்லாம் சொல்லித் தருகின்றது. அடியார்கள் விடயத்தில்

கவும், தீமைகளில் மானக்கேடான செயல்களில் இருந்து தவிர்ந்து கொள்வோராகவும் இருப்பார்கள், பாவக் கரைகள் அவர்களை சூழ்ந்து கொள்ளாமல் தற்காத்துக் கொள்வார்கள், தமது குற்றம் குறைகளை, பாவங்களை உடனுக்குடன் உணர்ந்து மனம் வருந்தி திருந்தி வாழுகின்ற ஆன்மீக பக்குவத்தை அடைந்து கொள்வார்கள்.

இன்னும் நீங்கள் உங்கள் இறைவனின் மன்னிப்பைப் பெறுவதற்கும், சுவனபதியின்

காரியங்களில் தரிபட்டிருந்து விடமாட்டார்கள். (ஸூரத் ஆலஇம்ரான் 3: 133, 134, 135)

சிலர் அறிந்து கொண்டே விடாப்பிடியாக பாவங்களை செய்வதில் அவர்களது பாவங்களை அல்லாஹ் மன்னிப்பான் என்பதற்கு உத்தரவாதம் இல்லை, சிலர் தமது உயிர் பிரியும் வரை பாவங்களில் மூழ்கி இருப்பார்கள் இறுதி நேரத்தில் அவர்கள் திருந்தி வாழ சந்தர்ப்பம் கேட்பார்கள், ஆனால் கைசேதமே!

எவர்கள் அறியாமையினால் தீமை செய்துவிட்டு, பின்னர் விரைவில் மன்னிப்புத் தேடி கொள்கிறார்களோ அவர்களுக்குத் தான் அல்லாஹ்விடத்தில் மன்னிப்பு. உண்டு. அல்லாஹ்

றன.

ஆகவே, அவர்கள் சம்பாதித்ததின் தீமைகள் அவர்களை வந்தடைந்தது இன்னும், இ(க் கூட்டத்த)வர்களிலும் எவர் அநியாயம் செய்கிறார்களோ, அவர்களுக்கு அவர்கள் சம்பாதித்ததின் தீமைகள் விரைந்தே வந்து சேரும் - அன்றியும் அவர்கள் (அல்லாஹ்வை) தோற்கடிக்க முடியாது.

நிச்சயமாக அல்லாஹ் தான் நாடியவர்களுக்கு உணவு (சம்பத்து)களை விசாலமாக்குகிறான்; சுருக்கியும் விடுகிறான் என்பதை அவர்கள் அறியவில்லையா? ஈமான் கொள்ளும் மக்கள் சமூகத்திற்கு நிச்சயமாக இதில் திடமான அத்தாட்சிகள் இருக்கின்றன.

என் அடியார்களே! (உங்களில்) எவரும் வரம்பு மீறி தமக்குத்தாமே தீங்கிழைத்துக் கொண்ட போதிலும், அல்லாஹ்வுடைய ரஹ்மத்தில் அவர் நம்பிக்கையிழக்க

உதவி செய்தருள்வாயாக! (அல்பகறா 2:286)

புனித ரமழான் மாதத்தினை அடைந்தும் ஒருவன் பாவமன்னிப்புப் பெறாமல் மரணித்தால் அவன் நரகம்



இழைக்கப்பட்ட தவறுகள், குற்றங்கள், பாவங்கள், அல்லாஹ்வின் விடயத்தில் இழைக்கப் பட்டவைகள் என உணர்ந்து உரிய விதமான பரிகாரங்களுடன் பாவ மன்னிப்புக் கோருகின்ற மனிதன் புனிதனாகின்றான்.

(நன்மை செய்வோர் யார் எனின்) எவர்கள் (அறியாமல் ஏற்பட்டுவிடும்) சிறு பிழைகளைத் தவிர பெரும் பாவங்களையும் மானக்கேடானவற்றையும் தவிர்த்துக் கொள்கிறார்களோ அவர்கள், நிச்சயமாக உம்முடைய இறைவன் மன்னிப்பதில் தாராளமானவன், அவன் உங்களைப் பூமியிலிருந்து உண்டாக்கிய போது, நீங்கள் உங்கள் அன்னையரின் வயிறுகளில் சிசுக்களாக இருந்த போதும், உங்களை நன்கு அறிந்தவன் - எனவே, நீங்களே உங்களைப் பரிசுத்தவான்கள் என்று புகழ்ந்து கொள்ளாதீர்கள் - யார் பயபக்தியுள்ளவர் என்பதை அவன் நன்கறிவான். (ஸூரத் அல் நஜ்ம் 53:32)

இறையச்சம் உள்ளவர்கள் எப்பொழுதும் நன்மைகளை செய்வோர்களா

பக்கமும் விரைந்து செல்லுங்கள்;. அதன் (சுவனபதியின்) அகலம் வானங்கள், பூமியைப் போலுள்ளது. அது பயபக்தியுடையோருக்காகவே தயார் செய்து வைக்கப் பட்டுள்ளது.

(பயபக்தியுடையோர் எத்தகையோர் என்றால்,) அவர்கள் இன்பமான (செல்வ) நிலையிலும், துன்பமான (ஏழ்மை) நிலையிலும் (இறைவனின் பாதையில்) செலவிடுவார்கள்;. தவிர கோபத்தை அடக்கிக் கொள்வார்கள். மனிதர்(கள் செய்யும் பிழை)களை மன்னிப்போராய் இருப்பார்கள். (இவ்வாறு அழகாக) நன்மை செய்வோரையே அல்லாஹ் நேசிக்கின்றான்.

தவிர, மானக் கேடான ஏதேனும் ஒரு செயலை அவர்கள் செய்துவிட்டாலும், அல்லது (ஏதேனும் பாவத்தினால்) தமக்குத் தாமே தீங்கிழைத்துக் கொண்டாலும், உடனே அவர்கள் (மனப்பூர்வமாக) அல்லாஹ்வை நினைத்து தங்கள் பாவங்களுக்காக மன்னிப்புத் தேடுவார்கள்;. அல்லாஹ்வைத் தவிர வேறு யார் பாவங்களை மன்னிக்க முடியும்? மேலும், அவர்கள் அறிந்து கொண்டே தங்கள் (பாவ)

அவர்களின் மன்னிப்பை ஏற்றுக்கொள்கிறான். இன்னும் அல்லாஹ் நன்கறிந்தோனும். ஞானம் உடையோனுமாக இருக்கின்றான்.

இன்னும் எவர்கள் தீவினைகளைத் (தொடர்ந்து) செய்து கொண்டேயிருந்து, முடிவில் அவர்களை மரணம் நெருங்கிய போது, நிச்சயமாக இப்பொழுது நான் (பாவங்களுக்காக வருந்தி) மன்னிப்புத் தேடுகிறேன் என்று கூறுகின்றார்களோ, அவர்களுக்கும், எவர் காஃபிர்களாகவே மரிக்கிறார்களோ அவர்களுக்கும் பாவ மன்னிப்பு இல்லை, இத்தகையோருக்குத் துன்பம் கொடுக்கும் வேதனையையே நாம் சித்தப்படுத்தி வைத்துள்ளோம். (ஸூரத் அந்நிஸா 4:17,18)

மனிதர்கள் செய்கின்ற பாவங்களிற்கான தண்டனை அல்லது விளைவுகள் மறுமை நாளில் மாத்திரமன்றி அவர்களது இவ்வுலக வாழ்விலும் அவர்களுக்கு சோதனைகளாகவும், வேதனைகளாகவும் வந்தடைகின்றன, அதே போன்றே அவர்கள் செய்யும் நற்கருமங்களும் ஈருலகிலும் பிரதி விளைவுகளைக் கொண்டிருக்கின்

வேண்டாம் - நிச்சயமாக அல்லாஹ் பாவங்கள் யாவையும் மன்னிப்பான் - நிச்சயமாக அவன் மிக்க மன்னிப்பவன்; மிக்கக் கருணையுடையவன் (என்று நான் கூறியதை நபியே!) நீர் கூறுவீராக.

ஆகவே (மனிதர்களே!) உங்களுக்கு வேதனை வரும் முன்னரே நீங்கள், உங்கள் இறைவன் பால் திரும்பி, அவனுக்கே முற்றிலும் வழிபடுங்கள்; (வேதனை வந்துவிட்டால்) பின்பு நீங்கள் உதவி செய்யப்பட மாட்டீர்கள்.

(ஸூரத் ஸுமர் 39: 51,52,53,54)

எங்கள் இறைவா! நாங்கள் மறந்து போயிருப்பினும் அல்லது நாங்கள் தவறு செய்திருப்பினும் எங்களைக் குற்றம் பிடிக்காதிருப்பாயாக! எங்கள் இறைவா! எங்கள் சக்திக்கப்பாற்பட்ட (எங்களால் தாங்க முடியாத) சுமையை எங்கள் மீது சுமத்தாதிருப்பாயாக! எங்கள் பாவங்களை நீக்கிப் பொறுத்தருள்வாயாக! எங்களை மன்னித்தருள் செய்வாக! எங்கள் மீது கருணை புரிவாயாக! நீயே எங்கள் பாதுகாவலன், காஃபிரான கூட்டத்தாரின் மீது (நாங்கள் வெற்றியடைய) எங்களுக்கு

செல்லட்டும். அல்லாஹ் அவனை தூரமாக்கட்டும் என வானவர் ஜிப்ரீல் அலைஹிஸ்ஸலாம் கேட்ட துஆவிற்கு தான் ஆமீன் சொன்னதாக எங்கள் உயிரினும் மேலான தலைவர் முஹம்மத் (ஸல்) அவர்கள் சொன்னார்கள்.

பாவமன்னிப்பு கோரல் தவ்பா என்பது என்பது ஓர் அடியானுக்கும் அவனது இரட்சகனுக்கும் இடையே இடம்பெறும் மிகத்தூய்மையான இதயசுத்தியுடன் கூடிய முனாஜாத் ஆகும், பாவங்களில் இருந்து தவிர்ந்து கொள்ளுதல், இடம் பெற்ற பாவங்கள் குறித்த வருந்துதல், பாவத்தில் மீள்வதில்லை என்ற திடசங்கற்பம் கொள்தல் போன்ற பிரதான நிபந்தனைகளோடு மற்றுமொரு பிரதான நிபந்தனை இருக்கின்றது.

மனிதன் அல்லாஹ்வினுடைய விடயத்தில் அல்லது தனிப்பட்ட விடயங்களில் இழைத்த தவறுகள் அல்லாத பிற அடியார்கள் விடயத்தில் இழைத்த குற்றங்களிற்காக அவர்களிடம் உரியவிதத்தில் மன்னிப்பு கேட்டுக் கொள்ளுதல் மற்றுமொரு நிபந்தனையாகும்.

# எமது ஆன்மீகப் பலவீனம்

- உஸ்தாத் எம்.ஏ.எம்.மன்சூர்

புனித ரமழான் மாதத்தின் அரைவாசியை கழித்து விட்டோம். மனிதர்களை புனிதர்களாக மாற்ற இந்த மாதம் எம்மை எவ்வளவு மாற்றியதோ தெரியவில்லை.

அற்புதமானதொரு மாதம். மனிதர்களுக்கு இறுதி இறை வழிகாட்டல் இறங்கியதைப் பின்னணியாகக் கொண்டு ஒழுங்குபடுத்தப்பட்ட மாதம்.

உடலின் வீரியத்தை, சாப்பாட்டில் ஓரளவு கடுமையான கட்டுப்பாட்டை ஏற்படுத்துவதன் மூலம் குறைக்க முயல்கிறது இம் மாதம். அதன் விளைவாக தீமையை நோக்கி உடல் இழுபடுவது குறையும், அத்தோடு தீமைகளிலிருந்து ஒதுங்கும் மனக்கட்டுப்பாட்டை பேண நன்கு முயல வேண்டும் என இம் மாதம் வலியுறுத்துகிறது.

அதிகமதிகம் தர்மம் செய்ய வேண்டும் என இம் மாதம் மிகவும் வேண்டுகிறது. சக மனிதனின் துயர் துடைக்கும் மனப் பாங்கை இதன் மூலம் இம் மாதம் வளர்க்கிறது.

உன்னை யாரும் ஏசினால், அல்லது உன்னோடு சண்டை பிடிக்க வந்தால் நான் நோன்பாளி, நான் நோன்பாளி என்று சொல் என உபதேசிப்பதன் மூலம் வன்முறைகளைப் புறக்கணித்து சுற்றுச் சூழலில் அமை

தியையும், சமாதானத்தையும் இம் மார்க்கம் உருவாக்க முயல்கிறது.

இப் பின்னணியில் நோன்பின் இந்த இலக்குகளை அடைந்து கொள்ள எமது பள்ளிகள் ஆன்மீகப் பயிற்சிப் பாசறைகளாக மாற வேண்டும்.

எனினும் மிகவும் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் ரமழானின் கஞ்சிக்கு நடக்கும் ஏற்பாடாவது இப் பகுதியில் நடக்குகிறதா என்பது சந்தேகமே. மனிதர்களை மாற்றுவதில் அல் குர்ஆனுக்கு ஓர் அற்புதமான சக்தி இருக்கிறது. இந்த மாதத்தில் இதனை நாம் நன்கு பயன் படுத்திக் கொள்ள வேண்டும் என்ற வகையில்தான் - கியாமுல் லைல் - தராவீஹ் தொழுகை - ஒரு சிறப்பான இடத்தை இம் மாதத்தில் வகிக்கிறது. ஆனால் அங்கு ஓதும் குர்ஆன் அவ்வாறு பயன்படுத்தப் படுகிறதா என்பது சந்தேகமாகவே உள்ளது.

கருத்தோ, விளக்கமோ புரியாத வெறும் ஓதல், பல பள்ளிகளைப் பொறுத்த வரையில் மிக வேகமான ஓதல் என்ன தாக்கத்தை தொழுபவர்கள் மீது விளைவிக்கப் போகிறது?!

முஸ்லிமின் வாழ்வில் அடிப்படையாக இருக்கும் ஆன்மீகப் பகுதியில் கூட இவ்வளவு தூரம் பலவீனமாக இருந்து கொண்டு எதனை நாம் சாதிக்கப் போகிறோம்???



# ஸக்காத்தை மறுப்பவர்களுக்கான இஸ்லாமிய சட்டம்

இஸ்லாமிய ஆட்சி நடைபெறும் நாட்டில் ஸகாத் வழங்க மறுப்பவர்களிடம் போரிட்டாவது ஸகாத்தைப் பெற வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். ஒருவன் அல்லாஹ்வை நம்புகிறேன் என்று வாயால் மொழிந்த பிறகு தொழுகையை நிலைநாட்டி, ஸகாத்தையும் நிறைவேற்றும் போது தான் வெளிப்படையில் அவனை ஒரு முஸ்லிம் என்று இஸ்லாமிய அரசாங்கம் தீர்மானிக்கும்.

வழங்காத வரை (இணைவைக்கும்) மக்களுடன் போரிடும்படி நான் கட்டளையிடப்பட்டேன். இவற்றை அவர்கள் செய்துவிடுவார்களானால் தம் உயிரையும் உடைமைகளையும் என்னிடமிருந்து அவர்கள் பாதுகாத்துக் கொள்ள முடியும். (மரண தண்டனைக்குரிய) இஸ்லாத்தின் இதர உரிமைகளில் (அவர்கள் வரம்பு மீறினாலே) தவிர! மேலும் (இரகசியமாக குற்றமிழைத்தால்) அவர்களின்

விசாரணை அல்லாஹ்வின் பொறுப்பிலுள்ளது.
அறிவிப்பவர்: அப்துல்லாஹ் பின் உமர் (ரழி), நூல்: புகாரி 25

மறுத்தன் மூலம்) காஃபிர்களாகி விட்டனர். (அவர்களுடன் போர் தொடுக்க அபூபக்ர் தயாரானார்கள்.) உமர் (ரழி) அவர்கள், ''லா இலாஹ இல்லல்லாஹ் (அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை) கூறியவர் தமது உயிரையும் உடைமையையும் என்னிடமிருந்து காத்துக் கொண்டார்; தண்டனைக்குரிய குற்றம் புரிந்தவரைத் தவிர! அவரது விசாரணை அல்லாஹ்விடமே உள்ளது' என நபி (ஸல்) அவர்கள் கூறியிருக்கும் போது, நீங்கள் எவ்வாறு இந்த மக்களுடன் போர் செய்ய முடியும்?'' என்று கேட்டார்கள். அதற்கு அபூபக்ர் (ரழி) அவர்கள், உமரை நோக்கி, ''அல்லாஹ்வின் மீது ஆணையாக, தொழுகையையும் ஸகாத்தையும் பிரித்துப் பார்ப்போருடன் நிச்சயமாக நான் போர் செய்வேன். ஸகாத்,செல்வத்திற்குரிய கடமையாகும். அல்லாஹ்வின் மீது




வெளிப்படையில் தொழுகையை நிலைநாட்டி, ஸகாத்தையும் நிறைவேற்றுபவர்கள் மீது போர் தொடுப்பதும், அவனுக்குப் பாதிப்பு ஏற்படுத்துவதும் மாபெரும் குற்றமாகும்.

புனித மாதங்கள் கழிந்ததும் அந்த இணை கற்பிப்போரைக் கண்ட இடத்தில் கொல்லுங்கள்! அவர்களைப் பிடியுங்கள்! அவர்களை முற்றுகையிடுங்கள்! ஒவ்வொரு பதுங்குமிடத்திலும் அவர்களுக்காகக் காத்திருங்கள்! அவர்கள் திருந்திக் கொண்டு, தொழுகையை நிலைநாட்டி, ஸகாத்தும் கொடுத்தால் அவர்கள் வழியில் விட்டு விடுங்கள்! அல்லாஹ் மன்னிப்பவன்; நிகரற்ற அன்புடையோன். (அல்குர்ஆன் 9:5)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ''அல்லாஹ்வைத் தவிர வேறு இறைவனில்லை. முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதர்'' என உறுதிமொழிந்து, (கடமையான) தொழுகையை நிலைநிறுத்தி, ஸகாத் (எனும் ஏழைகளின் உரிமையை)

இஸ்லாமிய அரசின் கீழ் உள்ளவர்கள் யாராவது ஸக்காத் என்ற ஏழைகளின் உரிமையை தர மறுத்தால் அவர்களுடன் அரசு யுத்தம் செய்தாவது ஸக்காத்தை வசூல் செய்ய வேண்டுமென்பதை மேற்கண்ட செய்தியின் மூலம் நாம் அறிந்துகொள்ளலாம்.

நபியவர்கள் மரணித்ததற்குப் பின்னால் ஸக்காத்தை தர முடியாது என்று சிலர் மறுப்புத் தெரிவித்தார்கள். அப்போது ஆட்சியாளராகஇருந்த அபூபக்ர் சித்தீக் (ரழி) அவர்கள் அவர்களுடன் போர் செய்வதற்கே தயாராகிவிட்டார்கள்.

அபூஹுரைரா (ரழி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி (ஸல்) அவர்கள் இறந்து அபூபக்ர் (ரழி) அவர்கள் (ஆட்சிக்கு) வந்ததும் அரபிகளில் சிலர் (ஸகாத்தை

ஆணையாக! நபி (ஸல்) அவர்களிடம் வழங்கி வந்த ஓர் ஒட்டகக் குட்டியை இவர்கள் வழங்க மறுத்தால் கூட அதை மறுத்ததற்காக நான் இவர்களுடன் போர் செய்வேன்'' என்றார்கள். இது பற்றி உமர் (ரழி) அவர்கள், ''அல்லாஹ்வின் மீது ஆணையாக! அபூபக்ரின் இதயத்தை (தீர்க்கமான தெளிவைப் பெறும் விதத்தில்) அல்லாஹ் விசாலமாக்கியிருந்ததாலேயே இவ்வாறு கூறினார்கள். அவர்கள் கூறியதே சரியானது என நான் விளங்கிக் கொண்டேன்''என்றார்கள். (நூல்: புகாரி 1400)

இஸ்லாமிய அரசு என்ன முடிவை எடுக்க வேண்டுமோ அந்த முடிவை யாருக்கும் அஞ்சாமல் அபூபக்ர் சித்தீக் (ரழி) அவர்கள் எடுத்தார்கள்.

# இலைதரங்கம்
கலைவாதி கலீல்
கலை - இலக்கியம் - விமர்சனம்





# பிராயச்சித்தம்

– நிசாம் மாயல்

நள்ளிரவு நேரம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் உம்றாவுக்குச் செல்லும் எனது உறவை வழியனுப்ப "லோன்" சில் தரித்து நிற்கின்றேன். நுழைவாயில் நோன்பின் கடைசி பத்தில் உம்றாவுக்குச் செல்லும் பயணிகளால் நிரம்பியிருந்தது. தற்செயலாக அந்தப் பெண் கண்ணில் பட்டாள். இது சுபைதா அல்லவா? பக்கத்திலே சில பெண்களோடு முழு "அபாயாவில் அவளைக் கண்டதும் பழைய நினைவுகள் எண்ணத்தில் வந்து மோதின."

சுமார் ஆறு வருடங்களிலிருக்கும். புதிதாக ஆசிரியை நியமனம் பெற்று அந்த முஸ்லிம் பாடசாலைக்கு முதன் முதலாகச் செல்கின்றேன். நான் பாடசாலையில் படித்த காலத்தில் குழந்தைகளாக இருந்தவர்கள் இன்று 'ஓ' லெவல் வரை வளர்ந்து வகுப்பிலே உட்கார்ந்திருக்கிறார்கள். சில நாட்கள் சென்றன. நான் படிப்பிக்கும் வகுப்பிலே ஒரு வித்தியாசத்தை உணர்க்கின்றேன். மாணவர்களது வழமையான கலகலப்பிலே பங்கு கொள்ளாது விலகி நிற்கும் ஒரு மாணவியைப் பார்க்கின்றேன். அவள் சுபைதாவின் மகள். பெயர் ராஹிலா ஆரம்பத்தில் அதுபற்றி பெரிதாக அலட்டிக் கொள்ளா விட்டாலும் அவளது தொடர் மௌனம், அவள் பேரில் அக்கறைக்கொள்ளச் செய்தது. அவளது தாய் சுபைதா எங்களவே எனக்குப் பரிச்சியமானவள்தான். பெரிய குடும்பத்துப் பெண். அரசியல் சமூகச் செல்வாக்கு வேறு. அப்படிப்பட்ட குடும்பத்தில் இருக்கும் இந்தச் சிறுமிக்கு மட்டும் அப்படியென்ன பெரிய கவலை இருக்கப் போகின்றது என்று எண்ணிக் கொண்டிருந்தேன். "ஏன் ராஹிலா! அடுத்த மாணவர்களோடு சேர்ந்து சந்தோசமாக இருக்கலாமே! என்று அவளைக் கேட்டுவிட்டேன்.

"இல்லை டீச்சர், எனக்கு வாழ்க்கையே வெறுத்துப் போயிருக்கு" "மௌத்தாகிப் போக வேண்டும்" போல இருக்கிறது என்றாள். எனக்கு தூக்கி வாரிப் போட்டது. "சீ அப்படியெல்லாம் பேசக் கூடாது. உனக்கு வீட்டிலே இருக்கப் பிடிக்கவில்லையா? என்னோடு வா. என்னோடு வந்து தங்கிக் கொள்" என்றேன். அவள் வீட்டில் யாரும் மறுப்பு சொல்லாத காரணத்தால் பாடசாலை விட்டு என் வீட்டுக்கே வந்துவிடுவாள். "எனக்கு வாழவே பிடிக்கவில்லை" என்ற வார்த்தைகளையே அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தாலேயொழிய அதற்கான காரணத்தை அவள் சொல்லவே இல்லை. சில வாரங்கள் கடந்தன.

அது ஒரு சனிக்கிழமை. சுபஹ் தொழுது, ஓதுவதற்காக குர்ஆனை எடுக்கும் போது என் வகுப்பில் படிக்கும் மாணவன் சதாம் பரக்க பரக்க ஓடி வருவதைக் கண்டேன். அவனது அவசரத்தைக் கண்டு வீட்டு முற்றத்திற்குச் சென்று விசாரிக்கும் முன்னரே "டீச்சர் ராஹிலா மௌத்தாகிட்டா டீச்சர்" என்று சத்தமாகச் சொன்னான். எனக்கு தூக்கி வாரிப் போட்டது. அதிர்ச்சியில் ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றேன். அவனிடம் எதுவுமே விசாரிக்காமல் ராஹிலாவின் வீட்டுக்கு ஓடினேன்.

வீட்டிலே எல்லோரும் அழுது கொண்டிருந்தார்கள். உயிரோடு இருக்கும் போது எப்படி மௌனம் காத்தாளோ, அதேபோன்று முகத்திலும் அலாதியான மௌனம் தெரிந்தது. எனக்கு வாழவே பிடிக்கல டீச்சர் என்று கண்களில் நீர் ததும்ப சொல்லிக் கொண்டிருக்கும் அவளது கண்கள் நிரந்தரமாக மூடிக் கொண்டிருந்தன.

என்னால் தாங்க முடியவில்லை. அவள் அழகான பெண். படிப்பிலும் கெட்டியாக இருந்தாள். செல்வச் செழிப்பில் மிதக்கும் ஒரு குடும்பத்தில் பிறந்து இப்படிச் செய்து விட்டாளே என்ற சோகத்தை விட அவளது திடீர் மௌத்துக்கு என்ன காரணம் என்பதை அறிய மனம் துடித்தது. "விஷம் கிஷம்" ஏதும் அருந்தி விட்டாளோ என மனதில் சந்தேகம் எலவே என்னோடு கூடவே படிப்பிக்கும் பௌசியா டீச்சரிடம் விசாரித்தேன். "அப்படியொன்றுமில்லை. வெளியே சொல்லவே வெட்கம்! உங்களிடத்தில் சொல்வதற்கென்ன" என்றவாறே என் கையைப் பிடித்து முற்றத்து மரத்தடிக்கு அழைத்து வந்த பௌசியா டீச்சர் "விஷயம் உங்களுக்குத் தெரியாதா" எங்க 'ஸ்டாப்பிலே' இருக்கின்ற சத்தார் மாஸ்டர் அவருக்கும் ராஹிலாவின் உம்மாவுக்கும் தொடர்பாம். அடிக்கடி சந்திப்பார்களாம். ஊருக்கு தெரிந்த விஷயம் உங்களுக்குத் தெரியாமல் போயிற்றே என்றார்.

பௌசியா டீச்சர் சொல்லிக் கொண்டே போனது எதுவும் என் காதில் படவே இல்லை. தாயின் துரோகத்திற்காகவா இந்த சின்னப்புறா தன்னையே மாய்த்துக் கொண்டாள் என்று எனது உள்ளம் புலம்பிக் கொண்டேயிருந்தது.

அதற்குப் பிறகு நான் இடம்மாறிப் போனதால் ராஹிலாவின் குடும்பம் பற்றிய செய்திகள் பெரிதாகக் கிடைக்காது போனாலும் மகளின் மௌனத்திற்குப் பிறகு சுபைதா மாறிப் போனாள் என்று மட்டும் கேள்விப் பட்டேன். இன்று விமான நிலையத்தில் உம்றா குழுவுடன் அவளைக் காண்கின்றேன்.

மகளுக்குச் செய்த அநியாயத்திற்கு இது பிராயச்சித்தமாகவா? என்று என் உள்ளம் கேட்டது.

### பின்குறிப்பு

ஆம், பெரும்பாலான நமது சமூகத் தலைவர்களும் செய்த பாவங்கள் தீரும் என்ற நம்பிக்கையுடன்தானே அடிக்கடி உம்றாவுக்கென்று ஓடுகிறார்கள். ஒருவரையொருவர் திட்டிக்கொண்டும் மானபங்கப் படுத்திக் கொண்டும் பாவத்திலே உழன்று பின்னர் உம்றாவுக்குச் சென்று வருகின்றார்கள். இலக்ஷனில் வென்றாலும் உம்றா, தோற்றாலும் உம்றா, அமைச்சுப் பதவி கிடைத்தாலும் உம்றா. இவர்களும் சுபைதாவை போலத்தான். தெரியாமல் தான் கேட்கிறேன். உம்றா எனும் அரபு பதத்துக்கு என்ன பொருள்?.

சுபைதாவுக்கும் இவர்கள் போன்றோருக்கும் 'பிராயச்சித்தம்' என்று பொருள் சொன்னால் நன்றாக இருக்குமா?

(யாவும் கற்பனை)

## ஆற்றல் உள்ளவன் அல்லாஹ் ஒருவனே!

அரபு நாட்டுத் தலைவர்களே - நீங்கள்
அல்லாஹ்வையே அஞ்சிடுங்கள்
அமெரிக்காவையோ
ஐரோப்பாவையோ
அஞ்சிடத் தேவையில்லை

ஒற்றுமையோடு
அல்லாஹ்வின் கயிற்றை
உறுதியாகப் பிடியுங்கள் - நீங்கள்
உங்களுக்குள்ளே
முரண்பட்டு நின்றால்
ஒரு போதும் விடிவு இல்லை...

அப்பாவிப் பச்சிளம்
குழந்தைகளை அனாதையாக்கும்
அப்பாவிப் பூனைகள் போல் - பொல்லாத
தப்பான தீர்மானம் எடுத்து
தவித்திட வேண்டாமே...

அல்லாஹ்வின் தூதரின்
அழகிய மாதிரி
எம் முன்னால் இருக்கையிலே -
அடுத்தவர்
எம்மைப் பிரித்தாளுவதற்கு
அனுமதித்திடலாமா?

இறைவனையன்றி தம்மைப்
பாதுகாத்தவராய்
என்றும் ஏற்காதீர் - அவர்
இஸ்லாத்தை அழித்திடச் செய்யும்
சூழ்ச்சியில் அகப்பட்டு வீழாதீர்

ஆற்றலுள்ளவன் அல்லாஹ் ஒருவனே
அவனையே நம்புங்கள் - அறிந்த
அது வரலாறு தன்னை
அறிந்தும் சந்தேகமேதற்கோ

- மன்னார் உமர் - அபூபக்கர்

## மரணத்தை அறிந்தவுடன் மனதளவில் மடிந்து போனோம் !!!



(கடந்த மாதம் மரணமடைந்த என் உடன் பிறந்த சகோதரர் முஹம்மது மர்ஹூம் நினைவாக)

அப்துல் சமி உம்மு தமீமா தம்பதியின்
அன்பான இளைய புதல்வர் இவர் !
தப்பாமல் அனைவருடனும்
அன்பாக நடந்து கொண்ட
தரம் நிறைந்த மனிதர் இவர் !

என் உடன் பிறந்த மர்ஹூம் நானா -
மரணித்த செய்தி கேட்டு
மனதளவில் நாமும் மடிந்து போனோம்
நினைவுகளை மறக்கத்தான் முடியவில்லை

இந்தப் பிள்ளைகள் யாவருக்கும்
இனிய மாமாவாக வாழ்ந்தவரே - ஒரே
சொந்த மாமாவாக வாழ்ந்ததனால்
'சந்தமாமா' என்றே அழைக்கப்பட்டார் !

ஏழைகள் அநாதைகள் குடும்பத்தினர் என்று
எல்லோருக்கும் உதவி செய்து
வாழ்ந்தவரே - உங்கள்
பிழைகளை மன்னித்து
மேலான சுவனம் கிடைத்திட
பயபக்தியோடு படைத்தவனை
வேண்டுகிறேன் !

மண்ணிலே பிறந்திட்ட உயிர்கள் யாவும்
மரணத்தை ஒரு நாளில்
சுவைக்க வேண்டும் !
விண்ணையும் மண்ணையும்
படைத்து ஆளும்
வல்லவன் அல்லாஹ்விடம் சேர வேண்டும் !

உலகாளும் இறைவனே மர்ஹூம்
நானாவின்
உயர்பணிகள் அனைத்தையும்
பொருந்திக் கொள்வாய் !
நிலையான ஜன்னதுல்
பிர்தௌஸ் சுவர்க்கத்தை
நிரந்தரப் பரிசாக அவர்க்கு நீ
வழங்கிடுவாய் !

துணைவரைப் பிரிந்து வாடும்
துணைவிக்கும்
தந்தையின்றி தவிக்கின்ற பிள்ளைகட்கும்
இணைந்து வாழ்ந்த குடும்பத்தார்
யாவருக்கும்
இதயத்தில் பொறுமையைக்
கொடுத்தருள்வாய் !

- தர்காநகர் சுலைமா சமி இக்பால்

## தரிப்பு

சம்பியன் கிண்ணத்தைப் பாகிஸ்தான் வென்றிருக்கிறது. வாழ்த்துக்கள்!

இம்ரான் கான் தலைமையிலான அணி, உலகக் கிண்ணத்தை வென்ற தன் பின்னர் பெற்றிருக்கும் மகத்தான வெற்றி இது. அதுவும் பலம் வாய்ந்த இந்திய அணியைத் தோற்கடித்து இந்த மாபெரும் வெற்றியைப் பெற்றிருக்கிறது பாக். அணி. ஒரு தடவை, இறுதிப் போட்டி வரை வந்து, அவுஸ்திரேலியாவிடம் பரிதாபமாகத் தோற்றது வஸீம் அக்ரம் தலைமையிலான பாக். அணி. அவ்வேளை இவ்வணியில் விளையாடியவர்கள் அனைவருமே கிரிக்கட் ஜாம்பவான்களாவர்.

ஆனால், நேற்றைய சம்பியன் கிண்ணத்தில் விளையாடிய பெரும்பாலோர் புத்தம் புதியவர்கள். சிலர் பிரபலமற்றநின்றிருக்கிறார்கள். அதேவேளை இளம் துடுப்பாட்ட வீரர்களும் நன்றாக 'பேட்டிங்' செய்திருக்கிறார்கள். தங்களது இன்னிங்ஸின் வினா சித்தன்னினார்கள். இந்தியாவின் இன்னிங்ஸின் போது பாகிஸ்தானாரின் துல்லியமான பந்து வீச்சினால் தாள்பறந்தது. இந்திய அணியின் மகத்தான வீரர்களான கோஹ்லி, எம்.எஸ். தோனி, ரோஹித் சர்மா, ஷிகர் தவான் போன்றோரை ஒற்றை இலக்கத்தில் இரண்டொரு ஓட்டங்களுடன் மண் கவ்வ வைத்தார்கள். இவ்வெற்றி 180 ஓட்ட வித்தியாசத்தில் பெறப்பட்டிருக்கிறது.

எனவே சம்பியன் கிண்ணத்தை வென்ற பாக். அணியை 'ஜலதரங்கம்' மனதார வாழ்த்துகிறது; பாராட்டுகிறது!

# பாகிஸ்தான் ஜிந்தா பாத்!

வர்கள். உலகத்தரம் வாய்ந்த போட்டிகளில் விளையாடிய அநுபவம் அற்றவர்கள். சுஹைப் மாலிக்கைத் தவிர. ஆனால் இந்தப் போட்டி மூலம் இந்த வெற்றி மூலம் பாக். இளம் வீரர்கள் அனைவருமே விளையாட்டு ரசிகர்கள் மனதில் நிலையான இடத்தைப் பிடித்துக் கொண்டனர்.

இந்த மகத்தான வெற்றிக்குக் கால்கோல் இட்டது பாகிஸ்தானின் துல்லியமான பந்து வீச்சே என்று கூறின் அது மிகைபட்ட கூற்றல்ல. பொதுவாகவே பாகிஸ்தான் அணியென்றால் அதன் பந்துவீச்சு சிறப்பாக இருக்கும் என்பதே கிரிக்கட் விமர்சகர்களின் கருத்தாகும். கடந்த காலங்களில் இம்ரான் கான், வஸீம் அக்ரம், வக்கார் யூனுஸ், சக்லைன் முஸ்தாக், சொஹைப் அக்தார், போன்ற வில்லாதி வில்லர்களே வெற்றிகளுக்குத் துணைநின்றார்கள். இம்முறையும் - சம்பியன் கிண்ணத்திலும் இளம் வீரர்கள் துணை

அதேவேளை, கிரிக்கட் இரசிகர்கள் மற்றும் வாசகர்களது கணிப்பும் தவறாகிவிட்டது என்றுதான் கூறி வைக்க வேண்டும்.

நன்கு எதிர்பார்க்கப்பட்ட அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, இலங்கை, ஓரளவு நியூசிலாந்து ஆகிய நாடுகள் முதற் சுற்றிலேயே வெளியேறின. இறுதியில் ஆசிய அணிகள் இரண்டு மோதி ஒன்று வெற்றவாகை சூடியது. அதேவேளை பங்களாதேஷின் அபரிமித வளர்ச்சியும் எம்மை வியக்க வைத்தது.

உண்மையில் கிரிக்கட்டைக் கண்டு பிடித்தவர்கள் ஐரோப்பியர்களே! ஆனால் ஆதிக்கம் செலுத்துபவர்கள் ஆசியர்கள் என்பது இன்று துலாம்பரமாகியுள்ளது.

ஒரு கிரிக்கட் ரசிகன் என்ற வகையில் தரிப்பின் இந்தப் பத்தி இன்று சம்பியன் கிண்ணத்துக்குச் சாமரம் வீசுகிறது.

***

## இதயமே உறங்காயோ?

ஒடி ஒடி ஒளிக்கனும்
ஊர ஏச்சப் பொறுக்கனும்
வீர வசனம் பேசனும்
வீராப்பு ஜம்பம் அடிக்கனும்
- ஒடி ஒடி ஒளிக்கனும்! ம்...ம்...ம்...

சிறைக்குச் செல்ல
நான் பயப்படவில்லை
சிறைச்சாலை அது எனக்கு
சிங்காரப் பூஞ்சோலை!
எத்தனை படையையும்
எதிர்கொள்ளத் தயார்
என்னைப்பிடிக்க
வேண்டா இருக்கான்!
எலிப் பொந்துக்குள்ளே
வேண்டா நுழைவான்
இந்த ஆரம்பமோ
பெருங்கெடுத்தோடும்


சட்டத்தை மதிக்காத
சண்டியன் நான்
எத்தனைமுறை அழைத்தாலும்
போகேன்!
என் உத்தரவுகளோ
வீர வசனங்கள்
உள்ளத்தில் இருப்பதோ
கீலியோ கீலி!
காவியின் மீது
கை வைக்கப் பாரடா - உன்

ஆவிதான் மிஞ்சும்
ஆள் இருக்க மாட்டார்
விக்கினை - நிஷாந்தை
ஜக்கினை - மனோவை
கைது செய்த பின்
என்னிடம் வாருங்கோ...
அதன் பின்னரும் நான்
அகப்பட மாட்டேன்
தப்பித் தவறிப்
பிடிபட்டாலும்
மாலை - மரியாதை
கழுத்தினில் சூடி
'மாமியார்' வீட்டுக்கு
அழைச்சிட்டுப் போங்கோ
பிணையில் வந்து நான்
பிதற்றித் திரிவேன்

பெரிய ஞானசீர்
பதுங்கு குழியும்
பிரெட் ரைஸ் பார்சலும்
இருக்கும் வரைக்கும்
என்னைப் பிடிக்க
எவனாலும் முடியாது!

என்னைப் பிடிப்பது
என்பதொரு கப்ஸா!
புடிச்சத்தான் -பாருங்களேன்
மூக்குடைபடுவீர்கள்!

– நீர்கொழும்பு





கொழும்பு மாநகரின் வர்த்தக கேந்திர மையமான புறக்கோட்டையில் (பெற்றா - பேட்டை) வரலாற்றுப் பெருமைமிக்க பல, பழைய கட்டிடங்கள் காணப்படுகின்றன. பழைய நகர மண்டபம், டச் மியூஸியம், கான் மணிக்கூண்டுக் கோபுரம், கச்சேரி, சேர்ச், கோவில், சம்மாங்கோட்டைப் பள்ளி (Red Mosque) ஆகியவை இங்குதான் இருக்கின்றன. வீதிகளுக்கு ஆங்கிலேயர்கள், சிறப்புமிக்க மனிதர்கள்.

இவர்களைக் குறிக்கின்ற பெயர்களைக் கொண்டு, பிரதான வீதி தவிர்ந்த ஏனைய வீதிகளுக்குப் பெயர் சூட்டப்பட்டிருக்கின்றன. பிரதான வீதியை ஊடறுத்துச் செல்லும் குறுக்கு வீதிகள் ஐந்து பெற்றாவில் இருக்கின்றன. (1St, 2nd, 3rd, 4th, 5th Cross Streets)

பரபரப்புமிக்க வர்த்தக சந்தியொன்றை, அக்கால மக்கள் 'ஐந்து லாம்பு சந்தி' யென்று அழைத்து வந்தார்கள். இச்சந்தியிலிருந்துதான் தங்கம் புழங்கும் செட்டியார் தெருவுக்குச் செல்ல வேண்டும்.

ஐந்து வீதிகள் சந்திக்கின்ற இந்தச் சந்திக்கு ஏன் 'ஐந்து லாம்புச் சந்தி'யென்று பெயர் வந்தது? தெரிந்தால் எழுதுங்கள் - பிரசுரிப்போம்!



# அமைச்சர் ரவிக்கு லொத்தர் சபையை கையளித்தது சட்டவிரோதமானது

## ட்ரான்ஸ்பரன்சி இன்டநெசனல் அதிருப்தி

சட்டத்திற்கு முரணாக தேசிய லொத்தர் சபையை வெளிவிவகார அமைச்சின் கீழ் கொண்டு வரும் வகையிலான வர்த்தமானியை வெளியிட்டமை குறித்து தாம் கவலையடைவதாக இலங்கை ட்ரான்ஸ்பரன்சி இன்டநெசனல் தெரிவித்துள்ளது. மீண்டும் நிதி அமைச்சின் கீழ் தேசிய லொத்தர் சபையை கொண்டு வரும் வகையிலான வர்த்தமானியை வெளியிட்டு ஏற்பட்டுள்ள குழப்பங்களுக்கு தீர்வு காணுமாறும் அவர்கள் அதிகாரிகளிடம் கோரியுள்ளனர். இலங்கை ட்ரான்ஸ்பரன்சி இன்டநெசனலினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1963ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட நிதி சட்டமூலத்திற்கு அமைய ஸ்தாபிக்கப்பட்ட தேசிய லொத்தர் சபை, 1997 மற்றும் 1998ஆம் ஆண்டுகளில் திருத்தங்களுக்கு உட்படுத்தப்பட்டது. இதற்கமைய குறித்த சபை நிதி அமைச்சரின் கீழ் இதுவரை இயங்கி வந்தது. இந்த நிலையில், தற்போதைய நிதி அமைச்சரான மங்கள சமரவீரவின் மேற்பார்வையின் கீழ் இந்த சபை இயங்க வேண்டும். எனினும், அதனை வெளிவிவகார அமைச்சரான ரவி கருணாநாயக்கவின் கண்காணிப்பின் கீழ் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க, நிதி அமைச்சர் தவிர்ந்து வேறு எந்த அமைச்சரின் வசமும் தேசிய லொத்தர் சபை வழங்கப்படுவது சட்டத்திற்கு முரணானது என, இந்த விடயம் குறித்து கருத்து வெளியிட்டுள்ள இலங்கை ட்ரான்ஸ்பரன்சி இன்டநெசனலின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அசோக ஓபேசேகர கூறியுள்ளார்.

# உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் ஐந்து பேருக்கு திடீர் இடமாற்றம்

பொலிஸ்மா அதிபர் பூஜித்த ஜயசுந்தரவின் பரிந்துரைக்கமைய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் 5 பேர் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் இடமாற்றப்பட்டுள்ளனர்.

தங்கல்லை, மட்டக்களப்பு, காலி, பொலன்னறுவை பொலிஸ் வலயத்தை சேர்ந்த நான்கு அதிகாரிகளுக்கும் மற்றும் கொழும்பு குற்றவியல் விசாரணைப் பிரிவு அதிகாரி ஒருவருக்குமே இவ்வாறு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

சேவை நிமித்தம் மேற்கொள்ளப்படும் இந்த இடமாற்றத்துக்கு தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமைச்சர் சம்பிக்கவிற்கு பொதுபலசேனாவுடன் தொடர்பு

## பிவிதுரு ஹெல உறுமய குற்றச்சாட்டு

ஜாதிக ஹெல உறுமயவிற்கும், பொது பலசேனாவிற்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருந்தது ரகசியமான விடயம் அல்லவென பிவிதுரு ஹெல உறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார். குறித்த இருகட்சிகளும் இணைந்து மஹரகமையில் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொதுபலசேனாவின் ஞானசார தேரர் ஜாதிக ஹெல உறுமயவின் முன்னாள் பிரதி ஏற்பாட்டாளர் என்றும் இவர் 2004 ஆண்டு தேர்தலிலும் போட்டியிட்டவர் என்று உதய கம்மன்பில சுட்டிக்காட்டியுள்ளார். பொது பலசேனா பற்றி பொய்களை கூறி எமக்கு தெரிந்த விடயங்களை வெளியுலகத்திற்கும் தெரியப்படுத்தும் பின்னணியை ஏற்படுத்த வேண்டாம் என அமைச்சர் சம்பிக்கவிடம் தெரிவிப்பதாக உதய கம்மன்பில குறிப்பிட்டார்.

# டெங்கு ஒழிப்புக்கு செயற்பாட்டு குழு

டெங்கு ஒழிப்பு செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான குழுவொன்றை ஆரம்பிப்பதற்கு அரச மருத்துவ அதிகாரிகளின் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நாடளாவிய ரீதியாக பரவிச் செல்லும் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு நிவாரணமளிக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

# பாகிஸ்தான் சென்றார் மஹிந்த

பாகிஸ்தானின் தேசிய பல்கலைக்கழகத்தின் அழைப்பின் பேரில் குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ நேற்று பிற்பகல் 1 மணியளவில் பாகிஸ்தான் நோக்கி பயணமானார். ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான யூ.எல்.183 என்ற விமானத்தில் பயணமானதாகவும், விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த பயணத்தில் மஹிந்தவுடன், ஜீ.எல்.பீரிஸ், விமல் வீரவன்ஷ, டலஸ் அழகப்பெரும உள்ளிட்ட 8 பேர் சென்றுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பாகிஸ்தானின் தேசிய பல்கலைக்கழகத்தில் நடைபெறவுள்ள நிகழ்வொன்றில் சிறப்புரை ஆற்றுவதற்கு மஹிந்தவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும், அதற்கமையவே மஹிந்த உள்ளிட்ட குழுவினர் பாகிஸ்தான் பயணமாகியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்துள்ளன.

# போலி பொலிஸ் அதிகாரிகள் கைது

பொலிஸ் சீருடை மற்றும் சிறைச்சாலைகள் திணைக்களத்திற்குச் சொந்தமான கைவிலங்குகளுடன் இருவர் முல்லேரியா பகுதியில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர். முல்லேரியா பொலிஸ் அதிகாரிகளுக்கு கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய, முச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த வேளையே சந்தேகநபர்கள் கைதாகியுள்ளதாக, பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

மேலும், கைப்பற்றப்பட்ட முச்சக்கர வண்டியில் இருந்து போலி வாகன இலக்கத் தகடு, காப்புறுதி பத்திரம் மற்றும் பொலிஸ் சீருடை, சிறைச்சாலை அதிகாரிகளின் தலைக்கவசங்கள் இரண்டு, சிறைச்சாலைகள் திணைக்களத்திற்குச் சொந்தமான கைவிலங்குகள் போன்ற பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய முச்சக்கர வண்டியொன்றை பரிசோதனை செய்த போது இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை, சந்தேகநபர்கள் அங்கொடை பகுதியைச் சேர்ந்த 34 மற்றும் 40 வயதான இருவராகும்.

இவர்களை நேற்று கடுவலை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதோடு, முல்லேரியா பொலிஸார் இது குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



இரத்தினபுரி மாவட்ட செயலாளர் திருமதி மாலனி லோகுபோதாகமவின் தலைமையில் பலரின் ஒத்துழைப்புடன் இரத்தினபுரி அலோசியஸ் பாடசாலை வளாகத்தில் நேற்றுமுதல் இடம்பெற்ற டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்திற்கு குறித்த பாடசாலைக்கு அருகில் உள்ள பிரபல தமிழ் வர்த்தகர் உட்பட கிறிஸ்தவ பள்ளி மதகுருமார்கள் பலரும் எதிர்ப்பு தெரிவித்து பிரச்சினைகளில் ஈடுபட்டனர். அண்மையில் குறித்த பாடசாலையின் ஆசிரியை ஒருவர் டெங்கு நோயால் இறந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.
(எம்.எல்.எஸ்.முஹம்மத் இரத்தினபுரி)

# லிந்துலையில் இடம்பெற்ற வெடி சம்பவத்தில் ஒருவர் காயம்

(க.கிஷாந்தன்)

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊவாக்கலை தோட்டத்தின் வெள்ளிமலை பிரிவில் ஞாயிறன்று இரவு இடம்பெற்ற வெடிப்பு சம்பவத்தில் காயமடைந்த நபர் லிந்துலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நபரின் வீட்டின் முன் வாசலில் கிடந்த பொதி ஒன்றினை கத்தி ஒன்றினால் தள்ளியபோது பொதியினுள் காணப்பட்ட வெடி பொருள் வெடித்து இவர் காயமடைந்துள்ளார்.

இதேவேளை அப்பகுதியில் பன்றி ஒன்றும் வெடிபொருளினால் வெடித்து உயிரிழந்துள்ளது. குறித்த பிரதேசத்திலிருந்த வெடித்து சிதறிய வெடிபொருட்களை லிந்துலை பொலிஸார் மீட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் லிந்துலை பொலிஸ் நிலையத்தில் முறைபாடு செய்ததையடுத்து பொலிஸார் இந்த வெடிபொருட்கள் எவ்வாறு கொண்டு வரப்பட்டது என விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.



புனித ரமழானை முன்னிட்டு இளம் மாதர் முஸ்லிம் சங்கம் மூன்றாம் கட்டமாக சங்கத்தினால் தெரிவு செய்யப்பட்ட வறிய குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 400 பேருக்கு பெறுமதியான உலர் உணவுப் பொதிகளையும், பல்கலைக் கழகத்திற்கு தெரிவான 5 வறிய மாணவர்களுக்கு புலமைப் பரிசில் நிதி உதவியும், இரு முதியவர்களுக்கு சக்கர நாற்காலிகளும், இரண்டு பேருக்கு சீலிங் மின் விசிறிகள், முதியவர் ஒருவருக்கு எயார் மெற்றஸ் உள்ளிட்ட பொருட்கள் சங்கத்தின் தலைவி தேசமான்ய பவாசா தாஹா தலைமையில் தெமட்டகொடையில் உள்ள வை.எம்.எம்.ஏ தலைமையகத்தில் வைத்து அண்மையில் வழங்கப்பட்டன. மௌலவி அப்துல் ஜப்பாரின் (பஹ்ஜி) விஷேட துஆப் பிரார்த்தனையுடன் வழங்கி வைக்கப்பட்டன. இதன்போது பிரதம அதிதியாக மன்மலே துன்யா இஸ்லாம் அமைப்பின் தலைவர் கலாநிதி வி.சி.எம். அன்வரும், வை.எம்.எம்.ஏயின் முன்னாள் தலைவர் காலித் பாறுக், இளம் மாதர் முஸ்லிம் சங்கத்தின் உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (ஏ.எஸ்.எம்.ஜாவித்)



திருகோணமலை சோனகவாடி சாஹிரா கல்லூரியில் ஞாயிறன்று பஜார் விளையாட்டு கழகத்தின் தலைமையில் சாஹித் சஜித் தலைமையில் நடைபெற்ற இப்தார் நிகழ்வின்போது முகைதீன் ஜும்ஆ மஸ்ஜிதின் பேஷ்இமாம் மௌலவி இர்பான் உரையாற்றுவதையும், கலந்து கொண்டோரையும் படங்களில் காணலாம். (திருகோணமலை நிருபர் காசீம் அஸ்வர்)

# தெளிவற்ற முஸ்லிம் சேவை

(இறக்காமம் நிருபர்)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவையில் ஒலிபரப்பாகும் முஸ்லிம் சேவை கிழக்கு மாகாணத்தில் தெளிவில்லாமல் உள்ளதால் நிகழ்ச்சிகளை சரியாகக் கேட்டு பயனடைய முடியாதுள்ளதாக கிழக்கு மாகாண முஸ்லிம் நேயர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இது புனித றமழான் மாதமாகையால் தினமும் இச்சேவையில் ஒலிபரப்பப்படும் முஸ்லிம் நிகழ்ச்சிகளைக் கேட்கும் ஆவலில் வானொலி பெட்டியைத் திறந்தால் கடும் இரைச்சலுடன் தெளிவில்லாமல் உள்ள அதேவேளை விட்டு விட்டு இரைந்துகொண்டிருக்கின்றது. இதனால் இதனை செவி மடுக்காமல் உடனே மூடிவிட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

காலை 8.00மணி தொடக்கம் காலை 10.00மணி வரைக்கும் இரவு 7.00மணி தொடக்கம் இரவு 8.00மணி வரைக்கும் தேசிய சேவையில் 102.3இல் ஒலிபரப்பாகும் முஸ்லிம் நிகழ்ச்சிகள் அறவே தெளிவில்லாமலுள்ள அதேவேளை காலை 10.00மணிக்குப் பிறகு இதே சேவையில் ஒலிபரப்பாகும் பிராந்திய சேவையான பிறை எப். எம். மிகவும் தெளிவாக உள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஏனைய சேவைகளான தென்றல் மற்றும் வர்த்தக சேவைகளும் மிகவும் தெளிவாவுள்ள நிலையில் முஸ்லிம் சேவை மாத்திரம் ஏன் தெளிவில்லாமலுள்ளது என கிழக்கு மாகாண முஸ்லிம் நேயர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இப்புனிதமான மாதத்தில் விசேட பயான் நிகழ்ச்சிகளைக் கேட்பதற்கு வீட்டிலுள்ள பாடசாலை மாணவ, மாணவிகள் உட்பட சகலரும் மிகவும் ஆர்வமாகவுள்ளனர்.

எனவே இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முஸ்லிம் சேவைப் பணிப்பாளர் மற்றும் நிருவாகத்தினர் இதிலுள்ள கோளாறு என்னவென்பதை அடையாளம் கண்டு உடனடியாக இதனைச் சீர்செய்யுமாறு கிழக்கு மாகாண முஸ்லிம் நேயர்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# இப்தார் நிகழ்வில் பிரதமருக்கு விசேட துஆப் பிரார்த்தனை



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

கொழும்பு சாஹிராக் கல்லூரியின் 2001ஆம் வருட மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட புனித ரமழான் மாத நோன்பு திறக்கும் இப்தார் நிகழ்வு அண்மையில் மருதானை ஜூம்ஆப் பள்ளிவாசலில் இடம்பெற்றது.

இந்த வைபவத்தில் விசேட அதிதியாகக் கலந்து கொண்ட எம்.தாஸின் மௌலவியால் புனித நோன்பின் மகத்துவம் பற்றி விரிவான சொற்பொழிவு இடம்பெற்றது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சுகயீனமுற்று விரைவில் சுகமடைந்து நாட்டுக்காகவும் நாட்டு மக்களுக்காகவும் தொடர்ந்து பணிபுரிய அல்லாஹ்வின் அருள்கிடைக்கவும் மற்றும் நாட்டிற்காகவும், நாட்டுமக்கள் அனைவரும் சௌபாக்கியத்துடனும் வாழவும் விசேடமாக சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டு அகதிமுகாம்களில் உள்ளவர்களுக்காகவும் அத்தோடு, நிகழ்வை ஏற்பாடு செய்த பழைய மாணவர்கள் அனைவருக்கும் ஈருலக நற்பேற்றினையடையவும் பிரார்த்தனை செய்யப்பட்டது.

நிகழ்வில், 2001 பழைய மாணவர்கள், பிரதேச வாசிகள், ஜமாஅத்தினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



மட்டக்குளி அஹதியா பாடசாலையின் 9 ஆவது வருட இப்தார் நிகழ்வு கடந்த ஞாயிறு (18) மட்டக்குளி சேர் ராசிக் பரீட் முஸ்லிம் பெண்கள் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. மட்டக்குளி சமூகச் சேவை ஜனாஸா நலன்புரி சங்கத்துடன் இணைந்து நடத்திய இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக கலந்துக் கொண்ட மட்டக்குளி காக்கைதீவு ஸ்ரீ போதிராஜ விஹாரப்பதி சாஸ்ரவேதி பூஜ்ய திவுல்வேவே மரியதேவ நாஹிமி உரையாற்றுவதையும், மட்டக்குளி சாவியா பள்ளிவாசல் பிரதம இமாம் சலாஹுதீன் மௌலவி துஆப் பிரார்த்தனை நிகழ்த்துவதையும், பயான் நிகழ்த்திய மௌலவி ஜுஹ்ரான் ஹஸன் மற்றும் அஹதியா பாடசாலை அதிபர் முஸம்மில், அஹதியா பாடசாலை தலைவர் அப்துல் ஸலாம் ஹாஜி மற்றும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# இலங்கை ஹஜ் பயண ஏற்பாடுகளும் ஹஜ் கட்டணமும் ஓர் ஆய்வு



**அபூ அய்தா**

(கடந்த வார தொடர்ச்சி)

இவற்றின் அடிப்படையில் மேற்கூறப்பட்ட செலவீனங்களின் கூட்டு தொகை 7 இலட்சத்தி 27 ஆயிரம் ரூபாய்கள் ஆகும். இது சிற்றூர்களில் இயங்கும் முகவர் ஒருவரின் செலவீனம் ஆகையால் இதுவே ஆகக்குறைந்த ஆண்டு செலவீனம் ஆகும். நகர்ப்புறத்தை அண்டி அமைந்த முகவரெனில் அவரின் maintainance செலவு இரட்டிப்பு அதிகமாகும். எனவே குறிப்பிட்ட ஆண்டுக்கான இந்த minimum investment இன் மூலம் முகவர்கள் merchandize ஆக்கப்பட்டுள்ளனர் என்பது புலப்படும். இதன் விளைவாக அக் கட்டணங்களை ஹாஜிகளின் கட்டணத்தின் மூலமே முகவர்கள் அறவிடுவர் என்பது இயல்பானது.

இலங்கையின் மொத்த 2800 கோட்டாக்களுக்குமாக தெரிவு செய்யப்பட்ட 96 ஹஜ் முகவர்களால் அந்த 2800 என்ற கோட்டா எண்ணிக்கையைப் பிரிக்கும் போது ஒரு முகவருக்கான moderate allocation ஆக 29 கோட்டா அமையும். அதனடிப்படையில் 29 கோட்டா பெற்ற முகவர் தலா 25 000/-ரூபா வீதமான ஆக குறைந்த அறவீட்டை ஹஜ்ஜுக் கட்டணத்தில் சேர்த்து அறவிடுவார்கள்.

ஆகவே மேற்கூறப்பட்ட basic ஹஜ் கட்டணத்துடன் இந்த அறவீட்டையும் சேர்த்தால் ஆகக்குறைந்த கட்டணம் 3,70,000/- ஆகவும் ஆகவும் கூடியது 6,47,000/- ஆகவும் அமையும்.

மேலும் ஹஜ்ஜின் போது உரிய முகவர் உரிமையாளர் தனது குழுவோடு பயணித்தல் மற்றும் ஹாஜிகளின் வழிகாட்டுதலுக்காக ஒவ்வொரு 50 ஹாஜிகளுக்கு ஒரு மௌலவி வீதம் அழைத்துச் செல்லல் என்பன MRCA வினால் முகவர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கும் கட்டாய வழிமுறை ஆகும். மேலும் ஹாஜிகளுக்கு இலங்கை முறையிலான உணவு வழங்கப்பட வேண்டும் என்பதனால் இலங்கை cook களையும் முகவர்கள் அழைத்துச் செல்கின்றனர். இதனால் ஏற்படும் செலவீனங்களாலும் ஹஜ்ஜுடைய கட்டணம் கணிசமான அளவில் மேலும் உயர்வடைகின்றது. மேலும் இந்த ஹஜ் பிரயாணத்தை இலகுபடுத்த சவூதி அரசால் இலங்கைக்கு வழங்கப்படும் bessa எனப்படும் priviledged visa முகவர் உரிமையாளருக்கு மட்டும் கிடைப்பதனால் அவருடைய செலவீனம் மிகக்குறைவாக அமையும். அதாவது விமான டிக்கட், சாப்பாடு செலவுகள் மற்றும் muallim கட்டணம் அடங்கலாக கிட்டத்தட்ட 200,000/--LKR மாத்திரமே.

மேலும் வழிகாட்டி, உலமா மற்றும் சமையலாளி என்போரை ஒரு முகவர் தமக்கு கிடைக்கப் பெற்றிருக்கும் கோட்டவுக்குள்ளேயே சேர்த்துக் கொள்ள நிர்ப்பந்திக்கபடுவதால், அவர்களுக்குரிய செலவீனம் என்பது ஒரு ஹாஜிக்கான barcode sticker I use பண்ணுவது போலாவது. அதாவது அவர்களுக்காக சவூதியில் செலவாகும் அனைத்து செலவினங்களும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அது மட்டுமில்லாமல் அவர்களுக்கான மாத சம்பளமாக தலா 3000-SR அதாவது 1,20,000-/-&-LKR வீதம் மொத்தம் 2,40,000-/ LKR வழங்கப்படுகிறது

moulavi cook செலவு ஆக குறந்தது 3,70,000/- *2 =7,40,000/- + அவர்களின் sa-la-ry 2,40,000-/- இவற்றின் கூட்டு தொகை 9,80,000/-LKR

ஆகக்கூடியது 6,47,000/- *2 = 12,94,000/- + அவர்களின் சம்பளம் 2,40,000/- இவற்றின் கூட்டுத்தொகை 15,34,000-/-&-LKR

இவை 50 பேர் கொண்ட குழுவின் செலவீனம்; ஆகவே moderate allocation 29 பேர் கொண்ட குழு எனில்; மேற்கூறப்பட்ட கூட்டுத் தொகையை 50 இனால் வகுத்து வரும் தொகை ஒரு ஹாஜி மீது உரித்தாகும் அறவீடாகும். அதனடிப்படையில், ஆகக்குறைந்தது தலா 19,600/- LKR உம் ஆகக்கூடியது 30,680/-LKR உம் ஆகும்.

மேலும் உரிமையாளரின் செலவீனமான 2,00,000/-LKR Imoderate allocation 29 ஆல் வகுக்கும் போது வரும் 7000/- LKR தொகையையும் அதனோடு சேர்த்தால் ஆகக்குறைந்தது 27,600/- LKR ஆகவும் 37,680/-LK-Rஆகவும் அமையும் இறுதியாக இத் தொகையினை, ஹஜ் கட்டணங்களோடு சேர்க்கும் போது சராசரியாக ஆக குறைந்தது 4,00,000/- ஆகவும் ஆகக்கூடியது 6,85,000/- ஆகவும் ஹஜ் கட்டணம் அமையும். மேலும் மக்கள் பொருந்திக்கொள்ளும் ஒரு முகவரின் profit ஆக குறந்தது தலா 50,000 /- ரூபாவையும் அதனோடு சேர்த்தால் ஆகக்குறைந்த கட்டணமாக 4,50,000/- ரூபாய்களும் ஆகக்கூடிய கட்டணமாக 7,35,00/- ரூபாய்களுமாக அமையும்.

இருந்தாலும் எல்லா முகவர்களாலும் ஆகக்குறைந்த கட்டணத்தைக் கொண்ட எல்லா சேவைகளையும் பெறுவது என்பது நடக்காத காரியம் என்பதால், மேற்கூறப்பட்ட சவூதி செலவீனங்களை ஒரு மத்திமதொகைக்கு (middle amount ) அமைவாக கணக்காய்வு செய்வதன் மூலம் 5,80,000/--LKR என்ற நிகர தொகையயை ஹஜ் கட்டணமாக அறிந்து கொள்ளலாம். மேலும் இதனோடு மிக அண்மித்த rates கள் ( குறைந்தது 5, 25 இலட்சத்திலிருந்து கூடியது 6.25 இலட்சம்) தான் இலங்கை நாட்டு மக்களுக்கு போதுமான சௌகரியத்துடன் கூடிய தமது வாழ்க்கைத்தரத்திற்கும் கிட்டத்தட்ட நெருங்கிய தங்குமிடங்களாகவும் ஒரு தரமான முகவர் சேவையை வழங்க கூடியதாகவும் அமையும். குறிப்பு: இந்த கணிப்பு 2016ஆம் ஆண்டு நிலவிய 39-LKR saudi exchange rate படி அமைந்த கட்டணம். 2017ஆம் ஆண்டுக்கான சவூதி றியால் exchange rate 42 /- ரூபாவாக இருப்பதனால் இவ்வாண்டுக்கான கட்டணம் 20,000 /- ரூபாவால் அதிகரிக்க இயலும் என்பதனையும் கருத்திற்கொள்க. மேலும் ஹாஜிகளை முகவர்களுக்கு பெற்றுக்கொடுக்கும் தரகர் தொழிலை கிராமங்கள் மற்றும் ஊர்கள் தோறும் தங்களை மௌலவிகளே அன்று தொட்டு இன்று வரை நடைமுறையிலுள்ளது. இதன் மூலம் ஒரு ஹாஜி அங்கீகரிக்கப்பட்ட முகவர் நேரடியாக தெரிவு செய்வது என்பதல்லாமல் தரகர்களே முகவர்களை தேர்வு செய்யும் நிலை நடைமுறையிலுள்ளது. ஒரு ஹாஜிக்கு தலா 20, 000 இலிருந்து 30,000 வரையான தரகுப் பணமும் அவர்களால் அறவிடப்படுவதால், ஹஜ் கட்டணத்தில் தவிர்க்க முடியாத பங்கை இந்த தரகர் கட்டணம் கொண்டுள்ளது என்பதனையும் மக்கள் விளங்கி கொள்ள வேண்டும்.

### பிற நாடுகளின் கட்டணமும் இலங்கை ஹஜ் கட்டணமும்

கடந்த கால வாழ்க்கைச் செலவை விட இவ்வருட செலவுகள் நம் வளர்ந்து வரும் நாட்டின் சமூகவுடமை பொருளாதார கொள்கைக்கு ஏற்றாற் போல் அதிகரித்துக் கொண்டே செல்லும். மேலும் ஹஜ்ஜுக்கான செலவு என்பது சவூதி அரேபியா என்ற செல்வச் செழிப்புள்ள ஏகாதிபத்திய நாட்டில் நிகழ்கின்ற விடயம் என்பதனால் அதன் செலவுகள் நமது நாட்டுடன் ஒப்பிடுவது அந்நியமே. நமது அண்டைய நாடான இந்தியாவைப் பொறுத்தமட்டில் அரசினூடான மானிய முறையிலும், தனியார் முகவர்கள் ஊடாகவும் ஹஜ் பயண ஏற்பாடுகள் மேற் கொள்ளப்படுகின்றன.

இந்திய தனியார் முகவர்களின் கட்டணம் 3.50 இலிருந்து 6 இலட்சங்களாக காணப்படுகிறது, அதாவது இலங்கை நாணயப்படி 8,75,000/- இல் இருந்து 15 இலட்சங்கள்; மேலும் நிபந்தனைகளுடன் கூடிய air ticket மற்றும் அஸீஸியா தங்குமிடம்( without makkah madhina accommodations ). அடங்கலான அரச மானிய விலை ஆக குறைந்தது 1,85,000 இந்திய ரூபாய்கள் இல் இருந்து ஆரம்பிக்கின்றது. அதாவது 4,65,000/- இலங்கை ரூபாவிலிருந்து ஆரம்பிக்கின்றது. மேலும் பங்களாதேஷ் பொறுத்தமட்டில் 8000 டொலர்களாகவும் பாகிஸ்தானில் 6 இலட்சம் ரூபாய்களாகவும் காணப்படுகிறது. ஏற்கனவே குறிப்பிட்டது போல் இந்த ஹஜ் கட்டணங்கள் என்பது சவூதி அரேபியாவில் செலவிடப்படும் செலவீனம் எனபதாலும் இந்திய - பாகிஸ்தான் போன்ற நாடுகள் இலங்கை போன்ற நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை பெரும்பாலும் ஒத்திருப்பதாலும் இந்த நாடுகளில் நிலவும் கட்டணங்கள் எமது நாட்டு ஹஜ் கட்டணங்களில் பெரும் செல்வாக்கு செலுத்துகிறது. ஆகவே இந்த ஒப்பீட்டாய்வின் அடிப்படையில் ஹஜ் விதியாவதற்கான பொருளாதார வசதி என்ற வரத்தை தெளிவான முறையில் கணித்துக்கொள்ளலாம்.

மேலும் அமெரிக்க பிரித்தானிய மற்றும் பிற செல்வந்த நாடுகளில் நிலவும் ஹஜ் கட்டணமானது 14 நாட்கள் பயணத்திற்கு ஏறக்குறைய 8- 10 ஆயிரம் டொலர்களாக அறவிடப்படுவதை எமது வாழ்க்கைத் தரத்திற்கு ஒவ்வாது என்பதால் அவற்றை நம் நாட்டோடு பொருத்திப் பார்க்க இயலாது.

இது ஏலவே குறிப்பிட்டது போன்று மேலே சொல்லப்பட்ட கட்டணங்கள் இன்றைய சூழலுக்கும் அதனோடு ஒத்த வாழ்க்கை தரத்திற்கும் ஏற்றாற்போல் கணக்கிடப்பட்டுள்ளன.

ஆகவே எமது அதேவாழ்க்கைத் தரத்தைக் கொண்ட எமது அண்டை நாடான இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகில் அறவிடும் 10- 15 இலட்சம் இலங்கை ரூபா பெறுமதியான ஹஜ் கட்டணத்தை விட இலங்கை தனியார் முகவர்களின் கட்டணம் ஒப்பீட்டளவில் அரைவாசி என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

அதிலும் ஒரு படி மேலாக இந்திய அரசின் நிபந்தனைகளுடன் கூடிய (மக்கா, மதீனா ஹோட்டல் அற்ற )மானிய ஹஜ் விலையான ட்டிண 4,60,000/- என்ற தொகையயை ஓரளவு ஒத்ததாகவே காணப்படுகிறது. இதைவிடக் கூடுதலாகவோ அல்லது குறைவாகவோ ஒரு முகவர் அறவிடுவார் எனில் அதில் ஏதோ சேவைக்குறைப்பு அல்லது ஏமாற்று வேலைகள் நடைபெற வாய்ப்பு மிக அதிகம் என்பதை கடந்த கால வரலாறுகள் பறைசாற்றுகின்றன என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

(நாளை தொடரும்)

# முஸ்தபா மௌலவி ஓய்வு



கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் ஒரே நிலப்பரப்பில் தனித்துவமாக செறிந்து வாழும் ஓர் ஊர் காத்தான்குடி. இவ்வூரில் பிறந்து வளர்ந்து, கல்வி கற்று மார்க்கப்பணிகளிலும், அரச சேவையில் ஆசிரியராகவும், மத்தியஸ்த சபையில் உறுப்பினராகவும், ஏனைய சமூக சேவை நிறுவனங்களில் செயலாளராகவும், உறுப்பினராகவும் பணியாற்றி வரும் மௌலவி செய்யித் முஹம்மத் முஹம்மத் முஸ்தபா (பலாஹி) கடந்த 15ஆம் திகதியுடன் 28 வருட ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

இவர் காத்தான்குடி அல் அமீன் வித்தியாலயம், மெத்தைப்பள்ளி வித்தியாலயம் ஆகியவற்றில் ஆரம்பக் கல்வியையும், காத்தான்குடி மத்திய கல்லூரியில் உயர் கல்வியையும் கற்றுவிட்டு காத்தான்குடி ஜாமிஅதுல் பலாஹ் அரபுக் கல்லூரியில் மார்க்கக் கல்வி கற்று மௌலவிப் பட்டம் பெற்றார்.

இளமையில் கல்வி கற்கும் காலங்களில் மற்றவர்களுக்கு உதவி செய்யும் ஆர்வமுள்ளவராகவும், சமூகப் பணிகளில் ஈடுபாடுள்ளவராகவும் தன்னைப் பயிற்றுவித்துக் கொண்ட மௌலவி முஸ்தபா தந்தையின் வழிகாட்டலில் தனது பணிகளை மேற்கொண்டார்.

மௌலவி எஸ்.எம்.எம். முஸ்தபா ஒரு மார்க்க அறிஞர். இவர் காத்தான்குடி ஜம்இய்யதுல் உலமாவின் நீண்டகால சிரேஷ்ட உறுப்பினர். குறிப்பிட்ட காலம் அதன் நிர்வாக சபை செயலாளராகவும், தகவல் குழு, பிறைக் குழு ஆகியவற்றின் செயலாளராகவும் பணியாற்றியவர். சில காலம் காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் செயலாளராகவும் கடமையாற்றிவிட்டு காத்தான்குடி பள்ளிவாயல்களின் கதீப்மார் இமாம்கள் சம்மேளனத்தின் பிரதிநிதியாகவும் சிரேஷ்ட உறுப்பினராகவும் அங்கம் வகிக்கின்றார்.

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமாவின் பொதுச் சபையின் சிரேஷ்ட உறுப்பினராக இருப்பதுடன், சில காலம் அதன் தகவல் குழு உறுப்பினராகவும் செயற்பட்டார். குருநாகல் தம்பதெனிய ஜும்ஆ மஸ்ஜித், மல்வானை வல்கம தைக்கிய்யா, கொழும்பு ஆராமய பிளேஸிலுள்ள ஜும்ஆ மஸ்ஜித், வாழைத்தோட்டம் மஸ்ஜிதுல் முனீர் மஅல்லா மத்ரஸா ஆகியவற்றில் மார்க்கப் பணியாற்றி விட்டு, மர்ஹூம் பத்திரிகையாளர் எம்.எஸ். முஹம்மதின் சிபாரிசில் கொழும்பு தெவட்டகஹ ஜும்ஆ மஸ்ஜிதில் கடமையாற்றிக் கொண்டிருக்கும் போது மௌலவி முஸ்தபா தன்னுடைய ஆசிரியர் பணியை முதன் முதலாக ஒரு கிராமத்தில் இருந்தே ஆரம்பித்தார். மட்டக்களப்பு பூநொச்சிமுனை இக்ரா வித்தியாலயத்தில் முதல் நியமனம் 1990 ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்று தனது கல்விப் பணியை மேற்கொண்டார்.

இந்த நேரத்தில் ஆசிரியர் நியமனம் வழங்கிய ஏழைகளின் தோழனாக இருந்து மக்கள் அபிமானத்துடன் ஜனாதிபதியாக பதவியேற்ற ரணசிங்க பிரேமதாஸ ஜனசவிய எனும் திட்டத்தின் கீழ் 35 ஆயிரம் பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கினார். மக்களுக்காக சேவை செய்த செம்மல் ஆர். பிரேமதாஸவை பாராட்டுவதில் மௌலவி முஸ்தபா பெருமையடைகின்றார்.

பூநொச்சிமுனை இக்ரா வித்தியாலயம், மஞ்சந்தொடுவாய் முகைதீன் வித்தியாலயம், புதிய காத்தான்குடி பத்ரிய்யா வித்தியாலயம், அல்ஹிறா வித்தியாலயம், அல்ஹஸனாத் வித்தியாலயம் ஆகியவற்றில் ஆரம்பக் கல்வி ஆசிரியராக பணியாற்றி ஓய்வு பெற்றுச் செல்வது அவரது கல்விப் பயணத்தின் மகத்தான சேவையினை ஞாபகப்படுத்துகிறது. கல்வி அதிகாரிகளும் அவருடன் சுவாரஷ்யமாகவும் அன்புடனும் பழகியிருக்கிறார்கள். மௌலவி முஸ்தபா ஆசிரிய பணி செய்த காலப்பகுதியானது நாட்டில் யுத்தம் இடம்பெற்றுக் கொண்டிருந்த போராட்ட காலம் என்றபடியால் பெரும் சவால்களையும் அவர் எதிர்நோக்கியிருந்தார்.

ஓய்வு பெறும் வரை பொதுப் பணிகளில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி செயற்பட்ட முன்னோடிகளில் ஒருவரான மௌலவி முஸ்தபா (பலாஹி), காத்தான்குடி மீடியா போரம், காத்தான்குடி பள்ளிவாயல்களின் கதீப்மார் இமாம்கள் சம்மேளனம் ஆகிய இரு நிறுவனங்களை ஸ்தாபித்து உயிரோட்டமுள்ள நிறுவனங்களாக அவற்றை இயங்க வைத்துக்கொண்டிருக்கிறார்.

அதேபோன்று இவர் ஓர் ஊடகவியலாளராகவும்; தேசிய பத்திரிகையான லேக் ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தின் பிராந்திய செய்தியாளராகவும், இலங்கை வானொலி சேவையின் பிராந்திய செய்தியாளராகவும் பணியாற்றி வருகின்றார். இவர் தனது எழுத்துப் பணிகளை கடந்த காலங்களில் சமாதானம், சகவாழ்வு மற்றும் சமூகங்களின் ஒற்றுமைக்காகவும், ஐக்கியத்துக்காகவும் பயன்படுத்தியவர்.

யுத்த சூழ்நிலை, இன முரண்பாடு நிலவிய காலப்பகுதிகளில் தமிழ்- முஸ்லிம் ஒற்றுமையை வலுப்படுத்தும் நோக்கில் 2003 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கதீப்மார் இமாம்கள் குழுவொன்றை சமாதானம் மற்றும் நல்லெண்ணத்தை ஏற்படுத்துவதற்காக வட மாகாணத்துக்கு அழைத்துச் சென்று, அங்குள்ள போராட்டத் தலைவர்களையும், சமய சமூகத் தலைவர்களையும் சந்தித்து, இன நல்லுறவையும், பரஸ்பர ஒற்றுமையையும் ஏற்படுத்துவதில் மௌலவி முஸ்தபா துணிவோடு செயற்பட்டவர்.

தற்போது அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா, காத்தான்குடி, மட்டக்களப்பு மாவட்ட ஜம்இய்யதுல் உலமா ஆகியவற்றின் சிரேஷ்ட நிர்வாக சபை உறுப்பினராகவும், சிறீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் உப செயலாளராகவும், காத்தான்குடி மீடியா போரத்தின் செயலாளராகவும், காத்தான்குடி பள்ளிவாயல்களின் கதீப்மார் இமாம்கள் சம்மேளனத்தின் செயலாளராகவும், காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் சிரேஷ்ட உறுப்பினராகவும் செயற்பட்டு வரும் மௌலவி முஸ்தபா, புதிய காத்தான்குடி பெரிய ஜும்ஆ பள்ளிவாயலின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினராகவும், கிழக்கிலங்கை இஸ்லாமிய வலது குறைந்தோர் நலன்புரி அமைப்பின் உப தலைவராகவும், அகில இலங்கை சோனகர் சங்கம், சர்வதேச வை.எம்.எம்.ஏ ஆகியவற்றின் உறுப்பினராகவும் சமூகப் பணியில் உழைத்து வரும் சமூக செயற்பாட்டாளரான மௌலவி முஸ்தபாவின் பணி தொடர்ந்தும் சமூகத்துக்கு அவசியமாகும்.

மௌலவி முஸ்தபா மாணவர்களின் கல்வியில் மிகவும் ஆர்வம் கொண்டவர். மிகவும் நாசுக்காகவும் அன்பாகவும் மாணவர்களுக்கு கல்வியை புகட்டுவார். மகிழ்ச்சிகரமான கற்பித்தலையே மாணவர்களுக்கு மேற்கொள்வார். நாட்டிலுள்ள வரலாற்று முக்கியத்துமிக்க இடங்களை பார்வையிடுவதற்காக பாடசாலை மாணவர்களை கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்வதில் முன்னின்று செயற்படுபவர். இவரிடம் கற்ற மாணவர்களில் அதிகமானோர் வைத்தியர்களாக, பொறியியலாளர்களாக, ஆசிரியர்களாக, நிர்வாகத் திறனுள்ளவர்களாக, மார்க்க அறிஞர்களாக, துறை சார்ந்த நிபுணர்களாக, வசதி வாய்ப்புள்ளவர்களாக இருப்பதைக் கண்டு மன மகிழ்ச்சியடைந்து அவர்களின் வளமுள்ள எதிர்காலத்துக்காக பிரார்த்திக்கிறார்.

மஸ்ஜிதுகளில் கடமையாற்றும் கதீப்மார் இமாம்களுக்கு உதவி உபகாரம் புரிவதில் குறிப்பாக அவர்களுக்கு ரமழான், ஹஜ் காலங்களில் தேவையான வசதிகளை செய்து கொடுப்பதில் மௌலவி முஸ்தபா அதிக ஈடுபாடு காட்டுபவர். இவர்களை சமூகமயமாக்கலில் இணைப்பதற்காக நல்லெண்ண விஜயங்களை மேற்கொண்டு நாட்டின் முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பார்ப்பதிலும், சமூக சமயத் தலைவர்களை சந்தித்து கலந்துரையாட வைப்பதிலும், கதீப்மார், இமாம்களை விளையாட்டுக்கள் மற்றும் சுவாரஷ்யமான செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதிலும் மௌலவி முஸ்தபா ஆர்வத்தோடும் மகிழ்ச்சியோடும் செயற்படுவார்.

ஓய்வு பெறும் மௌலவி முஸ்தபா கப்பல் ஆலிம் பரம்பரையில் ஓய்வு பெற்ற அதிபர் கலாபூஷணம் எம்.ஏ. செய்யித் முஹம்மத், முஹம்மத் இஸ்மாயில் மர்சூனா பீவி ஆகியோரின் ஏக புதல்வன். இவரின் தந்தையின் தந்தை கப்பல் ஆலிம் என அழைக்கப்படும் மர்ஹூம் முஹம்மது முஸ்தபா ஆலிம் ஆவார். இவரின் தாயின் தந்தை ஓய்வு பெற்ற அதிபர் மர்ஹூம் முஹம்மத் இஸ்மாயில் ஆவார். மௌலவி முஸ்தபா ஒரு கல்விக் குடும்பத்தில் பிறந்து சாதனை படைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மௌலவி முஸ்தபா ஆசிரியர் தமிழ் முஸ்லிம் உறவை கட்டியெழுப்புவதில் அக்கறையுடன் செயற்பட்டவர் அத்தோடு மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் மிகுந்த அக்கறை காட்டியவர் தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தமிழ் முஸ்லிம் வறிய மாணவர்களை இலவசமாக குருநாகல்,கண்டி,கொழும்பு போன்ற இடங்களுக்கு கல்வி சுற்றுலாவுக்கு அழைத்து செல்வதிலும் இவர்முன்னின்று செயற்பட்டார்.

எம்.எஸ்.எம். நூர்தீன்
சிரேஷ்ட ஊடகவியலாளர்
காத்தான்குடி



லண்டனில் பள்ளிவாசலில் தொழுகை முடிந்து திரும்பி வந்தவர்கள் மீது வெள்ளை வேனை ஏற்றி தீவிரவாதிகள் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

நடுவானில் பிறந்தது குழந்தை

## ஆயுள் முழுவதும் இலவச பயண சலுகையை வழங்கிய ஜெட் எயார்வேஸ்



ஜெட் எயார்வேஸ் விமானத்தில் பயணம் செய்து கொண்டிருந்த பெண்ணுக்கு நடுவானிலேயே குழந்தை பிறந்தது. இதை யடுத்து அந்த குழந்தைக்கு ஆயுள் முழுதும் இலவச பயண சலுகையை ஜெட் எயார்வேஸ் விமானம் அறிவித்துள்ளது.

சவூதியிலிருந்து கொச்சிக்கு 162 பயணிகளுடன் நேற்றுமுன்தினம் பயணித்த ஜெட் எயார்வேஸ் விமானம் நடு வானில் பறந்து வந்து கொண்டிருந்த போது, பெண் ஒருவருக்கு பிரசவ வலி ஏற்பட்டது.

இதையடுத்து, மருத்துவ அவசரம் என கோரி விமானத்தை உடனடியாக மும்பைக்கு விமானத்தை விமானி திருப்பினார். விமானம் அரேபிய கடல் பகுதியில் சுமார் 35 ஆயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருந்தபோது அந்தப்பெண் அழகான ஆண் குழந்தையை பெற்றெடுத்தார். விமானம், மும்பை விமான நிலையத்தில் தரையிறங்கியதும் பெண்ணும் அவரது குழந்தையும் வைத்தியசாலைக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். அங்கு குழந்தையும் தாயும் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் உள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து 90 நிமிட தாமதத்திற்கு பின்னர் விமானம் மும்பை விமான நிலையத்திலிருந்து புறப்பட்டு கொச்சியை சென்றடைந்தது. இச் சம்பவம் பற்றி மகிழ்ச்சி தெரிவித்துள்ள ஜெட் எயார்வேஸ், தங்கள் நிறுவன விமானத்தில் இதுபோன்ற சம்பவம் நடைபெற்றிருப்பது இதுதான் முதல் தடவை எனவும், விமானத்தில் பிறந்த குழந்தை தன் ஆயுள் முழுவதும் இலவச பயணத்தை ஜெட் எயார்வேஸ் நிறுவன விமானத்தில் மேற்கொள்ளலாம் என்று அந் நிறுவனம் தெரிவித்துள்ளது

## சிரிய போர் விமானத்தை சுட்டு வீழ்த்திய அமெரிக்கா

சிரியாவில் கிளர்ச்சியாளர்கள் மீது தாக்குதல் நடத்திய அந்நாட்டு போர் விமானத்தை அமெரிக்க இராணுவம் சுட்டு வீழ்த்தியுள்ளது.

சிரியாவில் கடந்த 6 ஆண்டுகளாக உள்நாட்டு போர் நடைபெற்று வருகிறது. கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவாக அமெரிக்காவும், அதன் ஆதரவு படைகளும் களமிறங்கியுள்ளன.

மேலும் அங்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் ரக்கா உள்ளிட்ட சில பகுதிகளை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர். அங்கு அவர்களுக்கு எதிராக அமெரிக்கா படைகள் முகாமிட்டு தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்நிலையில், ஜனாதிபதி பஷர் அல்-அஸாத் ஆதரவு இராணுவ போர் விமானங்கள் ரக்கா மீது குண்டு வீசி தாக்கின. அப்போது அங்கு ஏற்கனவே முகாமிட்டிருந்த அமெரிக்க இராணுவம் போர் விமானமொன்றை சுட்டு வீழ்த்தியது.

இதற்கு சிரியா கண்டனம் தெரிவித்தது. ஆனால், தங்களை காப்பாற்றி கொள்ளவே விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

இம்மாத தொடக்கத்தில் சிரியாவின் ஆளில்லாத விமானத்தை அமெரிக்கா சுட்டு வீழ்த்தியது. தற்போது முதன் முறையாக சிரியா போர் விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது.

## காற்று சுழற்சியில் சிக்கிய விமானம்

26 பேர் காயம்; நால்வர் கவலைக்கிடம்

காற்று சுழற்சியில் சிக்கி விமானம் குலுங்கியதில் 26 பயணிகள் காயமடைந்துள்ளதுடன் நால்வரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சீனாவின் கிழக்கு எயர்லைன்ஸ் நிறுவனத்துக்கு சொந்தமான விமானம், பாரிஸிலிருந்து சீனாவின் தென்மேற்கு நகரமான கன்மிங் நோக்கி நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது வான்பரப்பில் காற்று வெற்றிடம் அல்லது காற்று சுழற்சி ஆகியவற்றால் ஏற்படும் அதிர்வுகளால் விமானம் அதிர்ந்துள்ளது.

இதில் 26 பயணிகள் காயம் அடைந்தனர். சிலருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டது. அவர்களில் 4 பேரின் நிலைமை மிகவும் மோசமாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நடப்பு வாரத்தில் இரண்டாவது முறையாக சீன எயார்லைன்ஸ் விமானம் இத்தகைய சம்பவத்தில் சிக்கியுள்ளது. கடந்த ஜூன் 11 ஆம் திகதி சிட்னியிலிருந்து ஷங்காய் நகருக்கு வந்த விமான என்ஜினில் சேதம் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பிரான்ஸ் பாராளுமன்ற தேர்தல்: மெக்ரானின் கட்சி அபார வெற்றி



பிரான்ஸ் பாராளுமன்ற தேர்தலில் ஜனாதிபதி இம்மானுவெல் மெக்ரானின் செஞ்சுறிஸ்ட் கட்சி அபார வெற்றி பெற்று பெரும்பான்மை இடத்தை பிடித்துள்ளது.

சமீபத்தில் நடைபெற்ற பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் 39 வயதான இமானுவெல் மெக்ரான் வெற்றி பெற்று ஜனாதிபதியானார். அவர் செஞ்சுரிஸ்ட் கட்சி என்ற பெயரில் கட்சியை தொடங்கி ஓராண்டுக்குள் வெற்றி வாகை சூடினார்.

ஜனாதிபதி தேர்தல் முடிந்ததையொட்டி கடந்த 11ஆம் திகதி பாராளுமன்ற தேர்தல் நடந்தது. பிரான்ஸ் பாராளுமன்றத்தின் எம்.பிக்கள் எண்ணிக்கை 577 ஆகும். அவற்றுக்கு நடந்த வாக்குப்பதிவில் பெரும்பான்மையான இடங்களில் ஜனாதிபதி மெக்ரானின் செஞ்சுரிஸ் கட்சி வெற்றி பெற்றது.

பிரான்ஸை பொறுத்தவரை எம்.பி., தேர்தலில் போட்டியிடுபவர்கள் 50 சதவீத ஓட்டுகளை பெற வேண்டும். இதற்காக 2 கட்டமாக தேர்தல் நடைபெறும். முதற்கட்ட தேர்தலில் 50 சதவீத வாக்குகள் கிடைக்காவிடில் குறைந்த வாக்குகள் பெற்றவர்கள் நீக்கப்பட்டு முன்னணியில் இருப்பவர்கள் மீண்டும் போட்டியிடுவார்கள். அவர்களில் 80 சதவீதம் வாக்குகள் பெறுபவர்கள் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்படுவார்.

முதல் சுற்று தேர்தலை வைத்து எத்தனை எம்.பிக்கள் வெற்றி பெற்றுள்ளனர். என கணிக்க முடியாது. எனவே நேற்றுமுன்தினம் 2ஆவது சுற்று தேர்தல் நடந்தது. அதில் ஏற்கனவே நடந்த தேர்தலில் அதிக வாக்குகளைப் பெற்றவர்கள் மட்டும் போட்டியிட்டனர்.

இதில், ஜனாதிபதி மெக்ரானின் செஞ்சுரிஸ்ட் கட்சி மொத்தமுள்ள 577 தொகுதிகளில் 355இலிருந்து 425 இடங்கள் வரை கைப்பற்றியது.

பாராளுமன்ற தேர்தலில் ஜனாதிபதியின் கட்சி வெற்றி பெற்றுள்ளதால், மெக்ரான் முன்வைத்த புதிய பொருளாதார திட்டங்கள், பிரித்தானியாவுடனான உறவு குறித்த கொள்கைகள் பாராளுமன்றத்தில் பெரிய எதிர்ப்பின்றி நிறைவேறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## உலகச் செய்திகள்

## தெஹ்ரான் தாக்குதலுக்கு ஈரான் பதிலடி: ஐ.எஸ். தீவிரவாதிகள் மீது ஏவுகணை தாக்குதல்



17 பேரை பலிகொண்ட தெஹ்ரான் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் விதமாக சிரியாவிலுள்ள ஐ.எஸ் தீவிரவாதிகளை குறி வைத்து ஏவுகணைகள் ஏவப்பட்டுள்ளதாக ஈரான் தெரிவித்துள்ளது.

ஈரான் தலைநகர் தெஹ்ரானிலுள்ள பாராளுமன்ற வளாகத்தில் கடந்த 7ஆம் திகதி நுழைந்த துப்பாக்கி ஏந்திய 3 நபர்கள் உள்ளே புகுந்து கண்மூடித்தனமாக துப்பாக்கிச்சூட்டில் ஈடுபட்டனர். மேலும், அங்குள்ள மெட்ரோ சுரங்க ரெயில் நிலையம் அருகே மறைந்த மதகுரு கோமெனியின் கல்லறை மாடத்தின் அருகே மற்றொரு தீவிரவாதி துப்பாக்கிசூடு மற்றும் குண்டு வெடிப்பு தாக்குதலை நிகழ்த்தினான்.

இவ்விரு தாக்குதல்களிலும் இரு பொலிஸார் உட்பட 17 பேர் கொல்லப்பட்டனர். 50இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயங்களுடன் உயிர்தப்பினர். இந்நிலையில், இந்த தாக்குதலை நடத்தியது ஐ.எஸ் தீவிரவாதிகள் ஐந்து பேர்தான் என உறுதிப்படுத்திய ஈரான் இராணுவம் சிரியாவின் கிழக்குப்பகுதியில் பதுங்கியுள்ள அவர்கள் மீது தாக்குதலை நடத்த திட்டமிட்டது.

அதன்படி, குறைந்த தூரம் சென்று நேருக்கு நேர் தாக்கக்கூடிய ஏவுகணைகளை ஐ.எஸ் தீவிரவாதிகளின் இருப்பிடம் நோக்கி செலுத்தப்பட்டுள்ளதாக ஈரான் படைத்தலைவர் தெரிவித்துள்ளார்.

## போர்த்துக்கலில் காட்டுத் தீ: 62 பேர் பலி; 60 பேர் காயம்







போர்த்துக்கலில் ஏற்பட்ட காட்டுத் தீயில் சிக்கி 62 பேர் உயிரிழந்துள்ளதுடன், 60இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

போர்த்துக்கலின் பெட்ரோகோ கிராண்டி வனப்பகுதியில் சனியன்று இரவு ஏற்பட்ட காட்டுத் தீ, காற்றின் வேகம் காரணமாக வனப் பகுதி முழுவதும் தீ மளமளவென்று பரவியது.

அப்பகுதி நெடுஞ்சாலை வழியாக காரில் சென்று கொண்டிருந்தவர்கள் தீயில் சிக்கிக் கொண்டனர். 30 பேர் காரிலேயே கருகி உயிரிழந்தனர். அருகிலுள்ள கிராமங்களைச் சேர்ந்த மேலும் 32 பேர் தீயில் சிக்கி உயிரிழந்துள்ளனர். சுமார் 60இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தீயின் உக்கிரத்தால் பல கிராமங்கள் அழிந்துவிட்டன. ஆயிரக்கணக்கான மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர்.

சுமார் 700இற்கும் மேற்பட்ட தீயணைப்பு வீரர்கள் இரவு பகலாக தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். ஸ்பெயின், பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் போர்த்துக்கலுக்கு உதவிக் கரம் நீட்டியுள்ளன. அந்த நாடுகளைச் சேர்ந்த விமானங்கள், ஹெலிகொப்டர்கள் தீயை கட்டுப்படுத்த வனப்பகுதியில் தண்ணீரை தெளித்து வருகின்றன.

போர்த்துக்கல் பிரதமர் அந்தோனியோ கோஸ்டா கூறியபோது, இது மிகவும் மோசமான தீ விபத்து. உயிரிழப்பு மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சுகிறோம். தீயை கட்டுப்படுத்த தீவிரமாகப் போராடி வருகிறோம். பாதிக்கப்பட்ட கிராமங்களில் மீட்புப் பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

17

2017 ஜுன் 20
ஹிஜ்ரி 1438 ரமழான் 25

நவமணி மற்றும் ஜம்மியத்துஷ் ஷபாப் நிறுவனம்
ஐந்தாவது தடவையாக இணைந்து நடாத்தும்
மாபெரும் பரிசுப்போட்டி

ரமழான் முபாறக்
பரிசு மழை

நவமணி

| போட்டி - 01 | போட்டி - 02 |
|---|---|
| (திங்கள் – வெள்ளி) | (வெள்ளிக்கிழமை) |
| 1ஆம் பரிசு : உம்ரா பொதி<br>2ஆம் பரிசு : மடிக் கணனி<br>3ஆம் பரிசு : கணனி<br>22 ஆறுதல் பரிசுகள் | கட்டுரைப் போட்டியில் முதல் 3 இடங்களுக்கு பெறுமதியான பரிசில், நினைவுச் சின்னம், சான்றிதழ் வழங்கப்படும் |

போட்டி நிபந்தனைகள்

- தினமும் 5 கேள்விகள்
- 30 நாள் கேள்விகளில் 25 நாட்களுக்கு மாத்திரம் விடையளித்தல் போதுமானது. (5 நாட்களுக்கு விடையளிக்காது விடலாம்)
- வெள்ளிக்கிழமைகளில் வழங்கப்படும் தலைப்புக்கு (போட்டி 02) 200 சொற்களில் கட்டுரை எழுதி அனுப்பவேண்டும்.
- போட்டி 02 இல் பங்குபற்றுவது விருப்பத்துக்குரியது
- போட்டி 01 மற்றும் 02 இற்கான விடைகளை ஒட்டுமொத்தமாக ஜுலை 15ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவையுங்கள். தனியாக அனுப்பப்படுபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- போட்டிகளின் முடிவுத்திகதி – ஜுலை 15, 2017

1. அல் - குர்ஆனின் இறுதியாக இறங்கிய வசனம் எது?
2. இஸ்லாமிய வரலாற்றில் முதலில் சிறைச்சாலைகளை நிர்மாணித்தவர் யார்?
3. மத்திய கிழக்கல்லாத பெரும்பான்மை முஸ்லிம்களைக் கொண்ட 5 நாடுகளைத் தருக?
4. இரு குளிர்நேரத் தொழுகைகள் எவை?
5. நபி (ஸல்) அவர்களால் உஹதில் கொல்லப்பட்டவன் யார்?

நவமணி போட்டி - 17
20.06.2017 - செவ்வாய்க்கிழமை நவமணி

பெயர் :..................................
முகவரி :..................................
தொலைபேசி :..................................
தே.அ.அ. இல.:..................................
கையொப்பம் :..................................

Freelanka Media Ltd, 156, Hospital Road, Kalubowila, Dehiwala

மேலதிக விபரங்களுக்கு
எம்.எஸ்.எம். சாஜஹான் - 0778751032,
வாரித் - 0772604964, அஷ்ஷெய்க் ரிஷாத் 077 2415415

## தீதாவின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

செப்டம்பர் மாதம் 25ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

இரட்டை பிரஜாவுரிமையை கொண்டுள்ள கீதா பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்க தகுதியற்றவர் என நீதிபதி அறி வித்ததுடன், பாராளுமன்ற கூட் டத்தொடர்களில் பங்கேற்க அவ ருக்காக செலவு செய்யப்பட்ட தொகையை மீள அறவிடவும் உத்தரவிடப்பட்டிருந்தது.

இந்த தீர்ப்புக்கு எதிராக கீதா குமாரசிங்க மேன் முறையீட்டு மனுவை உயர் நீதிமன்றில் தாக் கல் செய்தார்.

குறித்த மனுவை விசாரிப்ப தற்காகவே இந்த ஐந்து பேர் கொண்ட நீதவான் குழு அமைக் கப்பட்டுள்ளது.

## பிரதான...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இந்த உதவியை நாடியுள்ளதாக பொலிஸார் அறிக்கை ஊடாக அறிவித்தனர்.

கடந்த பெப்ரவரி 27 ஆம் திகதி நீதிமன்றுக்கு கைதிகளை ஏற்றிச்சென்ற களுத்துறை சிறைச் சாலை பஸ்மீது நடத்தப்பட்ட கண்மூடித்தனமான துப்பாக்கிப் பிரயோகத்தில், நிழல் உலக தலைவர் என அழைக்கப்படும் சமயங் உள்ளிட்ட சிறைக்கைதி கள் ஐவர் மற்றும் சிறைச்சாலை அதிகாரிகள் இருவர் என எழு பேர் ஸ்தலத்திலேயே கொல்லப் பட்டனர்.

நாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இந்த தாக்குதல் சம்பவம் குறித்த நடத்தப்பட்ட விசாரணைகளின்போது அங் கொட லொக்கா மற்றும் லடியா ஆகியோரே பிரதான குற்றவாளி கள் என்று தெரியவந்தது.

எனினும், குறித்த நபர்கள் நாட்டை விட்டு தப்பிச்சென் றுள்ளமையாலேயே அவர் களை கைது செய்ய சர்வதேச பொலிஸாரின் உதவி தற்போது நாடப்பட்டுள்ள என்று தெரிவிக் கப்பட்டள்ளது என்பது குறிப்பி டத்தக்கது.

## ஞானசாரதேரர்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அமைந்துள்ள தமதுக் கட்சி த் தலைமையகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்த போதே அவர் மேற்கண்ட கருத் துக்களை வெளியிட்டார்.

இதன்போது அவர் தெரிவித் ததை வருமாறு,

ஞானசார தேரரை நான் பாது காத்து வைத்துள்ளேன் என்றும் பொதுபலசேனா அமைப்பை ஜாதிக ஹெல உறுமயக் கட்சித் தான் வழிநடத்துகின்றது என்றும் மஹிந்த தரப்பினால் தற்போது கூறப்படுகின்றது. கோட்டாபய ராஜபக்ஷவைத் தலைவராக்கும் முனைப்புடன் வெளியிடப்படும் இந்த அடிப்படை உண்மையற்ற கருத்துக்களுக்கு ஒருசில ஊடகங் களும் சில ஊடகவியலாளர்களும் கூட துணைப்போகிறார்கள். எனி னும், இதற்கெல்லாம் நாம் ஒரு போதும் அஞ்சப்போவதில்லை.

மஹிந்த, கோட்டா மற்றும் கம் மன்பிலவின் வழக்குகள் தொடர் பில் நீதிமன்றில் ஆஜராகும் ஜனாதிபதி சட்டத்தரணி தான் ஞானசார தேரர் தொடர்பிலும் தற் போது ஆஜராகின்றார். எனவே, மஹிந்த தரப்பு இந்த சட்டத்தர ணியிடம் விசாரித்தாலே தேரர் எங்கு உள்ளார் என்று தெரியவந் துவிடும்.

அத்தோடு, ஞானசார தேர ருக்கும் எமக்குமான உறவு 2004 ஆம் ஆண்டுடனேயே முடிந்து விட்டது. இதனைத் தொடர்ந்து நடைபெற்ற 2005 ஜனாதிபதித் தேர்தலில் நாம் மஹிந்தவுக்கு அத ரவு வழங்கியபோது அவர் ரணி லுக்கு சார்பாகவே செயற்பட்டார். 2010 தேர்தலிலும் நாம் மஹிந்த பக்கம் இருந்தபோது அவர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா பக்கமே இருந்தார். மேலும், 2015 தேர்த லில் நாம் மைத்திரிபால சிறிசே னவுக்கு சார்பாக இருந்தபோது அவர் மஹிந்தவுக்கு ஆதரவு தெரிவித்து அவர்களின் மேடை யேறினார். இவற்றிலிருந்தே எமக்கும் ஞானசார தேரருக்கு மான தொடர்பு நிலை எவ்வாறு உள்ளது என தெரிந்துக்கொள்ள முடியும்.

ஜாதிக ஹெல உறுமயவை கவிழ்க்க வேண்டும் என்று பொது பல சேனாவை உருவாக்கி, அவர் களுக்கு வாகனங்கள் உள்ளிட்ட வசதிகளை பெற்றுக் கொடுத்தவர் கள் தான் தற்போது எம்மீது சேறு பூசும் நடவடிக்கையில் ஈடுபடு கின்றர். இதனை நாம் முழுமை யாக கண்டிக்கின்றோம்.

பெரும் போராட்டத்துக்கு மத்தியில் பெற்றுக்கொண்ட இந்த அமைதியான சூழலை குழப்பு வதற்கு எவரேனும் முயற்சிப் பாராயின் அவருக்கு எதிராக கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது தான் எமதும் நிலைப்பாடாக இருக்கிறது. ஆனால், இங்கு சி ங்க மொழியிலான இனவாதக் கருத்துக்கள் மட்டும் தான் பெரி தாக பார்க்கப்படுகின்றனவே ஒழிய தமிழ் மொழியில் தெரி விக்கப்படும் இனக்குரோதக் கருத்துக்கள் தொடர்பில் யாரும் கண்டுக்கொள்வதில்லை என்ப தையும் நாம் சுட்டிக்காட்டியே ஆகவேண்டும்.

ஞானசார தேரர் மட்டுமன்றி, இனவாத கருத்துக்களை எவர் வெளியிட்டாலும் அவருக்கு எதி ராக பாரபட்சம் பாராது சட்டந டவடிக்கை எடுத்தால் மட்டுமே இந்தப் பிரச்சினைக்கு முடிவு காணமுடியும். அதேநேரம், சர்வ தேச பயங்கரவாதத்துடன் தொடர் புடையோர் கூட இலங்கையில் இருக்கிறார்கள். இதுதொடர்பில் நாமும் தொடர்ச்சியாக கூறிக் கொண்டு தான் இருக்கிறோம். இது ஒரு தரப்பினரை மட்டுமன்றி நாட்டில் வாழும் சிங்களம், தமிழ், முஸ்லிம்கள் என அனை வரின் வாழ்க்கையையும் கேள் விக்குறியாக்கி விடும் என்பதால் பொலிஸார் இதுவிடயத்திலும் அதீத கவனம் செலுத்த தவறிவி டக்கூடாது என்றுத் தெரிவித்தார்.

இச்சந்திப்பின்போது, இன வாத கருத்துக்களை வெளியிட் டார் என்று ஞானசார தேரர் மீது தற்போது குற்றம் சுமத்தப்பட் டுள்ளது. எனினும், அமைச்சர் ஹக்கீம் அண்மையில் தெரிவித்த இனவாதக் கருத்து தொடர் பில் எவ்வித நடவடிக்கையும் இதுவரை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லையே. இதுகுறித்து உங்களின் நிலைப்பாடு என்ன? என்று வினவொன்று எழுப்பப் பட்டமைக்கு,

இந்த விடயத்தில் அமைச்சர், பிரதியமைச்சர் என எவரையும் பார்க்கக்கூடாது. மக்களை குழப் பும் வகையில் அவர் கருத்து வெளியிட்டிருப்பாராயின் அவ ருக்கு எதிராக நடவடிக்கை எடுக் கப்பட வேண்டும் என்பது தான் எமது தெளிவான நிலைப்பா டாகும். இவற்றை மறைப்பதும் பயங்கர குற்றச்செயலாகும் என்று அமைச்சர் சம்பிக்க பதிலளித்தார்.

## மியன்மார்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

வைத்தியசாலையிலிருந்து முகாமுக்கு அழைத்துச்செல்வ தாக கூறிய பொலிஸ் அதிகாரி, இடையில் பெண்ணை துஷ்பிர யோகத்துக்குள்ளாக்கி முகாமுக் கருகே விட்டுச்சென்றுள்ளார்.

வைத்தியசாலையிலிருந்து திரும்பி பெண்ணைக் காணவில் லையென்று தேடிய போதே இவ்வாறு கற்பழிக்கப்பட்டு மீட்கப்பட்டுள்ளதாக சோனகர் வலைதளம் செய்தி வெளியிட் டுள்ளது.

பொலிஸ் மா அதிபருக்கு விடயத்தை எத்திவைத்தபோது, உடன் விசாரணைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளது.

## கட்டார்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இணைந்து இராணுவப் பயிற்சிகளில் ஈடுபடுவதற் காகவே கட்டார் வந்துடைந் துள்ளது.

இதன் முதற்கட்டமாக தாரிக் பின் ஸியாத் இராணுவ தளத் தில் நேற்று முன்தினம் இரா ணுவப் பயிற்சிகள் நடைபெற் றுள்ளது.

துருக்கிக்கும், கட்டாருக்கும் இடையிலான இராணுவ ஒத்துழைப்பை அதிகரிப்பதற் கான ஒப்பந்தம் கடந்த வரு டம் கைச்சாத்திடப்பட்டிருந்த நிலையிலேயே, துருக்கி இரா ணுவம் கட்டாருக்கு விஜயம் மேற்கொண்டுள்ளது.

கட்டாரில் அமைக்கப்பட்டு வரும் துருக்கியின் இராணுவ தளத்தில் 3000 துருக்கி இரா ணுவத்தினரை நிலைநிறுத்து வதற்கான அனுமதியையும் துருக்கி பாராளுமன்றம் அண் மையில் அளித்திருந்தது.

மத்திய கிழக்கு பிராந்தியத் தில் துருக்கியும், கட்டாரும் இராணுவ, பொருளாதார, அர சியல் ரீதியான மிக நெருங்கிய கூட்டாளிகளாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விமலின் விசாரணை முடிவு சட்டமா அதிபரிடம் கையளிப்பு

வாகன முறை கேடு தொடர் பில் முன்னாள் அமைச்சர் விமல் வீரவங்ச மற்றும் அரச பொறியியல் இணைக்களத்தின் முன்னாள் பொது முகாமை யாளர் ஆகியோருக்கு எதிரான வழக்கு விசாரணைக்கு விரை வாக சட்ட ஆலோசனைகளை வழங்குமாறு நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு பணிப் புரை ஒன்றை விடுத்துள்ளது.


இது தொடர்பான வழக்கு விசாரணை இன்று கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத் தில் இடம்பெற்றது.

இதன்போது நீதிபதி லங்கா ஜெயரத்ன இந்த உத்தரவை பிறப்பித்தார்.

இன்றைய வழக்கு விசா ரணையின் போது குறித்த இருவரின் வாகன மோசடி தொடர்பான விசாரணை நிறை வுசெய்யப்பட்டு சட்டமா அதி பரிடம் அனுப்பிவைக்கப்பட் டுள்ளதாக காவல்துறை நிதி மோசடி விசாரணை பிரிவு நீ திமன்றத்தில் அறிவித்துள்ளது.

இதற்கமைய, சட்டமா அதிபரின் ஆலோசனைக்காக வழக்கு விசாரணை ஒக்டோபர் மாதம் 23 ஆம் திகதிவரை ஒத் திவைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமான 40 வாகனங்களை முறையற்ற வகையில் பயன்ப டுத்தியதன் மூலம் அர சாங்கத்திற்கு 9 கோடி ரூபாய்களை நஷ்டப்ப டுத்தியதாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட் டுள்ளது.



## சட்டத்தரணி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தொலைக்காட்சியொன்றில் சட்டத்தரணி லக்ஷான் டயஸ் தெரிவித்த கருத்துக்கு 24மணி நேரங்களுக்குள் பொதுமக்களிடம் மன்னிப்புக் கோராவிட்டால் தொழிலில் இருந்து நீக்குவதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்ததைத் தொடர்ந்தே இந்த எதிர்ப்பு மேலெழுந்துள்ளது.

நீதி அமைச்சரின் இவ்வாறான அச்சுறுத்தல்கள் அதிகார துஷ்பி ரயோகமாகும் என்றும் சிவில் செயற்பாட்டாளர்கள் அதிருப் தியடைந்துள்ளதாகவும் மனித உரிமை மற்றும் ஆய்வு நிலையத் தின் பணிப்பாளர் ரஞ்சித் கீர்த்தி தென்னகோன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தேசிய கிறிஸ்தவ கூட்டணி பொலிஸ் முறைப் பாடுகளுடன் வெளியிட்டிருந்த அறிக்கையை சுட்டிக்காட்டிய சட்டத்தரணி லக்ஷான் டயஸ் கிறிஸ்தவர்களுக்கெதிராக 195 இனவாத செயற்பாடுகள் நடை பெற்றுள்ளதாக தெரிவித்திருந் தார். சட்டத்தரணி லக்ஷான் டயஸின் கூற்று பற்றி தான் எதுவும் அறிந்திருக்கவில்லை என்று கார்டினல் மெல்கம் ரஞ்சி த் தெரிவித்ததைத் தொடர்ந்தே சட்டத்தரணியை பதவிநீக்கம் செய்யப்போவதாக நீதி அமைச் சர் தெரிவித்தார். சட்டத்தரணி லக்ஷான் டயஸின் பாதுகாப்பை உறுதிசெய்து, அவரின் கருத்து புள்ளி விபரங்களின் அடிப்ப டையிலாகும் என்பது குறித்து மக்களை தெளிவுபடுத்த அரசாங்க நடவடிக்கையெடுக்க வேண்டும் என்றும் சிவில் செயற்பாட்டாளர் கள் தெரிவித்துள்ளனர்.

## வடமாகாண...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கலந்துரையாடியதாகவும் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

இந்த சர்ச்சை தொடர்பில் நேற்றைய தினம் தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தனுக்கு விக்னேஸ்வ ரன் எழுதியுள்ள கடிதத்தில்,

வடமாகாணசபைக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள ஊழல்குற்றச் சாட்டு குறித்து தற்போது விசார ணைகள் மேற்கொள்ளப்படுகின் றமையால் குறித்த அமைச்சர்கள் இருவருக்கும் கட்டாய விடு முறை வழங்கினால் அவர்களின் தலையீட்டை இல்லாது செய்ய லாம் எனும் நோக்கிலேயே விடு முறை வழங்கப்பட்டது.

இக்காலத்தில், அவர்களுக் கான வரப்பிரசாதங்களையும் தடையின்றி அவ்விரு அமைச்சர் களாலும் அனுபவிக்க முடியும் என்பதால் இந்த முடிவானது அவர்களுக்கான தண்டனையல்ல என்றே கருதப்பட்டது.

இந்நிலையில், இரா.சம்பந்தன் எமக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறித்த அமைச்சர்கள் இருவரும் விசாரணைகளில் குறுக்கிடக்கூ டாது என்று அறிவுரை வழங்குவ தாக கூறியிருந்தார்.

இதற்கு கூட்டமைப்பின் பங்கா ளிக் கட்சித் தலைவர்களான செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், முன்னாள் பாரா ளுமன்ற உறுப்பினரா சுரேஸ் பிரேமசந்திரனும் இணங்கியுள்ள னர்.

எனவே, இதனை கருத்தில் கொண்டு பி.டெனிஸ்வரன் மற் றும் பி சத்தியலிங்கம் ஆகியோ ருக்கான கட்டாய விடுமுறையை தளர்த்திக்கொள்ள நான் முடிவெ டுத்துள்ளேன். இந்த விடயத்தை இனிமேல் வலியுறுத்தப்போவ தில்லை என்று சி.வி.விக்னேஸ் வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து நவம ணிக்கு கருத்து வெளியிட்ட குழுக்களின் பிரதித் தவிசாளரான செல்வம் அடைக்கலநாதன், விடு முறை தளர்த்தப்பட்டாலும் விசா ரணைகள் தொடரும் என்றும் இதன்ஊடாக கூட்டமைப்பில் காணப்பட்ட பிரச்சினைகளுக்கு முடிவொன்று காணப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஐ.நா. ...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

காயேயிடம் இலங்கை முஸ்லிம்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறை சம்பவங்கள் குறித்து தெளிவுபடுத்தியபோதே அவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளதைத் தெரி வித்துள்ளார்.

டேவிட் கேய்யின் விஜயத்தின் போது அண்மைக்கால வன்மு றைகளால் தாக்கப்பட்ட முஸ் லிம் வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள் மற்றும் தாக்குத லுக்குள்ளான பள்ளிகளின் நிர்வா கிகள் நேரடியாக சந்தித்து தமது முறைப்பாடுகளை கையளிப்பதற் கான நடவடிக்கையெடுக்கவுள்ள தாகவும் முயீன் வஹாப்தீன் தெரிவித்தார்.

இலங்கை முஸ்லிம்கள் மற்றும் சிறுபான்மையினருக் கெதிரான பௌத்த இனவாதி களின் செயற்பாடுகள், மதஸ்த லங்கள் மீதான தாக்குதல்கள், கடையெரிப்பு சம்பவங்கள் குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்டோபர் அல்லது நவம்பர் மாதத்தில் இலங்கைக் கான உத்தியோகபூர்வ விஜய மொன்றை மேற்கொண்டு நிலை மைகள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையிட உள்ளதாக டேவிட் காயே தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் சர்வதேச மனித உரிமைகள் செயற்பாட்டாளர் முயீன் வஹாப்தீன் ஐக்கிய நாடு கள் சபையின் 35ஆவது மனித உரிமைகள் கூட்டத் தொடரின் உப மாநாட்டில் கலந்துகொண்டு, இலங்கை முஸ்லிம்களுக்கு எதி ராக மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறை சம்பவங்கள் தொடர் பில் உரையாற்றியிருந்ததும் குறிப் பிடத்தக்கது.

## தொழுகை...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இதை தொடர்ந்து அங்கு பாது காப்புக்கு நின்றிருந்த பொலி ஸார் விரைந்து சென்று 48 வயது மதிக்கத்தக்க வேன் சாரதியை மடக்கி பிடித்துள்ளனர்.

இது எதிர்பாராத விதமாக நடந்த விபத்து அல்ல. சமீபத் தில் லண்டனில் நடைபெற்று வரும் தீவிரவாத தாக்குதல்களின் தொடர் வரிசை என உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட் டுள்ளன.

இத் தாக்குதல் தொடர்பாக பிரதமர் தெரசா மே தெரிவிக்கை யில், தீவிரவாதிகள் போன்று திட் டமிட்டு தாக்குதல் நடத்தியுள்ள னர் என்று குறிப்பிட்டார்.

லண்டனில், கடந்த சில நாட் களுக்கு முன்பு ஐ.எஸ். தீவிரவா திகள் கத்திக்குத்து தாக்குதலில் ஈடுபட்டனர்.

அதை தொடர்ந்து லண்டன் பாலத்தில் நடந்து சென்றவர்கள் மீது வேன் மூலம் மோதியும் அருகேயுள்ளசந்தையில் கத்திக் குத்து தாக்குதல் நடத்தியும் 7 பேரை கொன்றனர்.

இதனால் லண்டனில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு மீண்டும் வேன் மூலம் மோதி தாக்குதல் நடத்தியுள்ள னர்.

## இலங்கைப் பேராசிரியர் அமெரிக்காவில் காலமானார்

அமெரிக்காவில் வசித்து வந்த இலங்கையைச் சேர்ந்த பேரா சிரியர் ஏ.முஹம்மத் மரூப் நேற்று காலமானார். பேராதனை பல்கலைக்கழக பட்டதாரியான இவர், பென்சில்வேனியா பல்க லைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றிவந்தார். இலங்கை முஸ்லிம்கள் பற்றி பாரசீக கலைக் களஞ்சியத்துக்கு இவர் விரிவான ஆய்வுக் கட்டுரையொன்றை அண்மையில் சமர்ப்பித்திருந்தார்.

பேராதனைப் பல்கலைக்கழக மானுடப் புவியியல் கலாசார பாடத்தில் சிறப்புப் பட்டம் பெற்ற இவர் அமெரிக்காவுக்கு விஜயம்செய்து, பென்சில்வே னியா பல்கலைக்கழகத்தில் பேரா சிரியராகப் பணிபுரிந்தார்.

இஸ்லாமிய கற்கைநெறி தொடர்பாக பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளை இவர் வழங்கி யுள்ளார்.




# மனித உள்ளங்களை வென்று வாழ்ந்த முஹம்மது ஹனீபா மௌலவி



கேகாலை மாவட்டத்தில், ஹெம்மாதகமை பிரதேசத்தில், கொட்டேகொட என்ற கிராமத் தில் அப்துல் காதர்லெப்பை முஹம்மத் ஸாலிஹ், உமர் லெப்பை உம்முகுல்தூம் தம்பதி யினரின் புதல்வராக 18.12.1927 இல் பிறந்த முஹம்மது ஹனீபா, ரஊப் மௌலவி என்ற பெயரில் பிரபல்யம் பெற்றார்.

விவசாயியாக இருந்த அவரது தந்தை தனது பிள்ளைகளின் கல் விக்கண்களை திறந்து விடுவதில் நாட்டம் கொண்டு தனது மகன் ஹனீபாவை 1936இல் ஹெம் மாதகம சிங்கள மொழிக்கல்விப் பாடசாலையில் சேர்த்தார். சி ங்களச் சமூகத்தோடு இரண்டறக் கலந்து தனது ஆரம்பக் கல் வியை அப்பாடசாலையில் கற்றுக் கொண்ட முஹம்மது ஹனீ பா, 1942இல் இலங்கையில் சிறந்து விளங்கிய கூரிய்யா அர புக் கலாசாலையில் சேர்க்கப்பட்டார். அறபு மொழி, இலக்கண இலக்கியங்களோடு, ஷரீஆவைக் கற்றுத் தேர்ந்த முஹம்மது ஹனீபா, 1950இல் கூரிய்யா பட்டத்தைப் பெற்று 1952இல் அல் - ஆலிம் சான்றிதழையும் பெற்றுக் கொண்டார்.

1955இல் அரசாங்க ஆசிரியர் நியமனத்தைப் பெற்ற முகம் மது ஹனீபா, கன்னத்தோட்டை கஸ்மோனியா வித்தியாலயத் தில் அறபு, இஸ்லாம் பாடங்களைச் சிறப்பாகக் கற்பித்தார். 1958இல் திப்பிடியைச் சேர்ந்த சேகு அபூபக்கர் உடையாரின் புதல்வி சித்தி ருகையாவை வாழ்க்கைத் துணைவியாகக் கரம் பிடித்து சிறப்பாக வாழ்ந்து நல்ல மக்களை நாட்டிற்கு வழங்கி னார்.

1969இல் நாங்கல்ல முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் பணியாற்றிய முஹம்மது ஹனீபா, தலைநகருக்கு இடமாற்றம் பெற்று மாளிகாவத்தை தாருஸ்ஸலாமில் 1988வரை சேவை புரிந்து அப்பிரதேச மக்களதும், பெற்றோர்களினதும் அபிமா னத்தையும் நன்மதிப்பையும் பெற்றுக் கொண்டார். 1988இல் கொள்ளுப்பிட்டி சென். மைக்கல் கல்லூரியில் சிங்கள மொழி மூலம் இஸ்லாம் பாடத்தைக் கற்பித்தார்.

பாடசாலைகளோடு மட்டும் தன்னை முடக்கிக் கொள்ளாமல் பல்வேறு சமூகப்பணிகளிலில் பங்கேற்ற இவர், ஹெம்மாதகம ஜம்மியத்துல் உலமா சபையின் உறுப்பினராகவும், பிரதித் தலைவராகவும், பத்வாக் குழுத்தலைவராகவும் கடைசிவரை மகத்தான சேவை புரிந்துள்ளார். சேவைக்காலத்திலும், சேவையி லிருந்து ஓய்வு பெற்ற பின்னரும் இலங்கையின் பல பாகங்களி லுமுள்ள பள்ளிவாசல்களில் குத்பாப் பிரசங்கங்கள் நடத்தியவர். தெஹிவளைப் பெரிய பள்ளிவாசலில் இரண்டு வருடங்கள் பேஷ் இமாமாகக் கடமையாற்றி அப்பிரதேச மக்களின் நன்ம திப்பைப் பெற்றுக் கொண்டார்.

மஹர, வெலிக்கட சிறைச்சாலையில் 1970களில் மார்க்கப் போதனை புரிவதற்காக முஸ்லிம் லீக்கினால் போதகராக நியமிக் கப்பட்டிருந்த போது சிறைக்கைதிகளின் உள்ளங்களை தனது உயரிய போதனைகளால் நெகிழச் செய்தார்.

மார்க்க விளக்கங்கள் பெறுவதற்கு தன்னை அணுகுபவர்க ளுக்கு குர்ஆன் - ஹதீஸ் அடிப்படையில் தெளிவுகளை வழங் குவதில் ஹனீபா மௌலவி திறமை காட்டினார். இவர், மார்க்க விடயத்தில் ஒரு போதும் விட்டுகொடுப்பதோ, தயக்கம் காட்டு வதோ கிடையாது. அவரிடம் இறையச்சம் நிரம்பிக் காணப்பட் டது.

இந்தக் கட்டுரைக்கான தகவல்களைத் தந்துதவிய கலாபூ ஷணம் மீஆது ஆசிரியர், ஒரு முறை ஹனீபா மௌலவியிடம் '' நீங்கள் இன்னும் ஏன் ஹஜ்ஜுக்கு செல்லத் தயாராகவில்லை'' என வினவிய போது, சுகவீனால் இன்னும் ஹஜ்ஜு செய்யப் போதுமான அளவு சம்பாத்தியத்தைப் பெற்றுக் கொள்ள முடிய வில்லை என்று கூறிய அவரது பதில் அவரின் வெளிப்படைத் தன்மையை எடுத்துக் காட்டுகிறது.

இவர், ஒன்பது பிள்ளைகளின் தந்தையாவார். இவரது ஒரு மகன் இலங்கை விமானப் படையில் உயர் அதிகாரியாகப் பணி புரிகிறார். மற்றொருவர் டாக்டராகவும் மற்றும் ஆசிரியர்களா கவும் பணி புரிந்து வருகின்றனர்.

2014 ஜூன் 22இல் இவ்வுலக வாழ்வைப் பிரிந்த ஹனீபா மௌலவியின் பணிகளை எல்லாம் வல்ல இறைவன் பொருந் திக் கொள்வானாக!

அன்னவருக்கு ஜென்னத்துல் பிர்தௌஸ் கிடைக்கப் பிரார்த்திப் போமாக!




# இந்தியாவை பழி தீர்த்து சம்பியனானது பாகிஸ்தான்

இங்கிலாந்தில் நடைபெற்று வந்த 8ஆவது ஐ.சி.சி. சம்பியன் கிண்ணத்தை பாகிஸ்தான் அணி முதன்முறையாக வென்றுள்ளது. இந்தியாவுடன் இறுதிப் போட்டியில் மோதிய பாகிஸ்தான் அணி 180 ஓட்டங்களினால் வெற்றி பெற்றது. இதுவரையில் நடைபெற்ற உலகக்கிண்ணம் மற்றும் ஐ.சி.சி சம்பியன் கிண்ணத் தொடர்களின் இந்தியாவிடம் தோல்விகளையே சந்தித்து வந்த பாகிஸ்தான் அணி சுமார் 8 வருட இடைவெளியின் பிறகு முதன் முறையாக இந்திய அணியை வீழ்த்தியது.

இத்தொடரின் இறுதிப் போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி களத்தடுப்பை தெரிவு செய்தது. இதற்கமைய, துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில், நான்கு விக்கட்டுகளை மாத்திரம் இழந்து 338 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் பகர் சமான் கன்னிச் சதத்தினைப் பதிவு செய்து 114 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். அவரைத் தவிர அசார் அலி 59 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் புவனேஸ்வர் குமார், ஹர்திக் பாண்டியா, கேதர் யாதவ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெட்டினை வீழ்த்தினர். 339 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி ஆரம்பம் முதலே தடுமாற்றத்துடன் விளையாடியது. ஓட்டம் எதனையும் பெறாத நிலையில் ரோஹித் சர்மாவை இழந்த இந்திய அணி, 6 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது நம்பிக் கைக் குரிய வீரர் விராட் கோஹ்லியையும் இழந்தது. தொடர்ந்து சீரான இடைவெளியில் விக்கெட்டுகளை இழந்த இந்திய அணி 72 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுகள் என்று மிகவும் இக்கட்டான நிலையில் இருந்தது. இதன் போது, ஜோடி சேர்ந்த பாண்டியா, ஜடேஜா ஆகியோர் அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்த முற்பட்ட போதிலும், அது சாத்தியப்படவில்லை. அதிரடியால் மிரட்டிய பாண்டியா மொத்த ஓட்டங்கள் 152 ஆக இருந்த போது 43 பந்துகளில் 76 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். இறுதியில் 158 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்து 180 ஓட்டங்களினால் தோல்வியைத் தழுவிக் கொண்டது. இந்த வெற்றியின் மூலம் இளம் வீரர்களைக் கொண்ட பாகிஸ்தான் அணி முதன் முறையாக ஐ.சி.சி சம்பியன் கிண்ணத்தை வென்று சாதித்துள்ளது. அத்துடன், உலகக்கிண்ணம் மற்றும் ஐ.சி.சி சம்பியன்ஸ் கிண்ணத் தொடர்களில் இந்தியாவை ஒரு முறையேனும் வெற்றி பெற்றிருக்காத பாகிஸ்தான் அணி இந்திய அணியை வீழ்த்தி புதிய வரலாறு படைத்தது.

இந்நிலையில், இறுதிப் போட்டியின் நாயகனாக பகர் ஸமான் தெரிவானார். தொடரின் நாயகனாக, ஹஸன் அலி தெரிவானார். இத்தொடரில் 13 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய ஹஸன் அலி, அதிக விக்கெட்டுகளைக் கைப்பற்றியவர்களுக்கான தங்கப் பந்தையும் வென்றிருந்தார். இத்தொடரில், 338 ஓட்டங்களைப் பெற்ற ஷிகர் தவான், அதிக ஓட்டங்களைப் பெற்றவர்களுக்கான தங்கத் துடுப்பு மட்டையை வென்றமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவை தினறடித்து சதம் விளாசிய ஸமான்




சம்பியன் கிண்ண தொடரின் இறுதிப் போட்டியில் இந்திய அணியை 180 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி பாகிஸ்தான் அணி முதல்முறையாக சம்பியனானது. பாகிஸ்தானின் இந்த வெற்றிக்கு பகர் ஸமானின் சதமும் காரணம். ஸமான் 3 ஓட்டங்களை எடுத்த போது பும்ராவின் பந்துவீச்சில் கேட்ச் ஆனார். ஆனால் அவர் அதிர்ஷ்டம் அது நோ-பாலானது. இதைப் பயன்படுத்திக் கொண்ட பகர் ஸமான், இந்திய பந்து வீச்சை சிதறடித்து தனது முதல் சதத்தை நிறைவு செய்தார். அத்துடன் இம்முறை போட்டித் தொடரில் தென்னாபிரிக்கா(31), இலங்கை(50), இங்கிலாந்து(57) ஓட்டங்களைக் அவர் குவித்தார். இவரின் இந்த அசத்தல் ஆட்டத்தால் தற்போது பாகிஸ்தானின் செல்லப்பிள்ளையாகியுள்ளார்.

பாகிஸ்தானின் மர்டான் மாவட்டத்தில் உள்ள கட்லாங் பகுதியைச் சேர்ந்தவர் பகர் ஸமான். படிப்புக்காக கராச்சிக்கு வந்த இவர், பிறகு பாகிஸ்தான் கப்பல் படையில் வேலைக்கு சேர்ந்தார். சிறு வயதிலேயே கிரிக்கெட் ஆசை, எனினும் பெற்றோர்களால் அடக்கி வைக்கப்பட்டார். இருந்தாலும் விட்டுவிடுமா ஆசை? அவ்வப்போது கிரிக்கெட் விளையாடி வந்த ஸமானின் திறமை, கப்பல் படை அணிக்கு தெரியவர, அந்த அணிக்கு விளையாடினார்.

அதன் பயிற்றுவிப்பாளர், ஆஷம் கான், உற்சாகப்படுத்தினார். உற்சாகம் அதிகரிக்க, வேலையை உதறினார். முழு நேர கிரிக்கெட்டுக்கு என்ன செய்யலாம் என, பாகிஸ்தானின் முன்னாள் தலைவர், யூனிஸ்கானிடம் ஆலோசனை கேட்டார் சமான். அவர், உன் சொந்த ஊரிலேயே போய் விளையாடு என அறிவுரை கூற, அது பயன் தந்தது. உள்ளூர் மற்றும் பிராந்திய அளவிலான போட்டிகளில் கவனிக்கப்பட்டார். பிறகு பாகிஸ்தான் அணிக்குள் நுழைந்துவிட்டார். கடந்த 7 ஆம் திகதி தென்னாபிரிக்காவுக்கு எதிராக நடந்த போட்டிதான் ஸமானுக்கு முதல் சர்வதேச ஒருநாள் போட்டியாகும். பாகிஸ்தானின் செல்லப்பிள்ளையாக் கூறப்படுகின்ற 27 வயதான ஸமான், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பியன் கிண்ண இறுதிப் போட்டியில் தனது முதலாவது ஒருசதத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் சர்வதேச கிரிக்கெட் தொடர் ஒன்றின் இறுதி போட்டியில் சதம் அடித்த முதல் பாகிஸ்தான் வீரர் என்ற சிறப்பை ஸமான் பெற்றுள்ளார். முன்னதாக சம்பியன் கிண்ண போட்டிகளில் சயீத் அன்வர், சொயிப் மாலிக் ஆகியோருக்கு பிறகு சதம் அடித்த பாகிஸ்தான் வீரர் பகர் ஸமான் என்றும் கூறப்படுகின்றது.

## 43ஆவது தேசிய விளையாட்டு விழா;
# நிரோஷன், மத்ரிகா நடை போட்டி சம்பியன்களாக முடிசூடல்





பீ.எப்.எம் நிஷாட்

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவுள்ள 43 ஆவது தேசிய விளையாட்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற நடைப் போட்டியில் ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவில் மேல் மாகாணத்தைச் சேர்ந்த நிரோஷன் அப்புஹாமி மற்றும் கஸ்தூரி மத்ரிகா சம்பியன்களாக முடிசூடினர்.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை காலை பத்தரமுல்லையில் உள்ள ஜப்பான் நட்புறவு பாலத்திற்கு அருகாமையில் உள்ள விசேட செயற்கை ஓடு பாதையில் நடைபெற்ற இப்போட்டியில் 9 மாகாணங்களையும் சேர்ந்த சுமார் 100இற்கும் அதிகமான வீர, வீராங்கனைகள் கலந்துகொண்டனர். முன்னதாக மரதன் ஓட்டம், நடை போட்டி மற்றும் சைக்கிளோட்டப் போட்டி என்பன கடந்த மாதம் 27 மற்றும் 28ஆம் திகதிகளில் எம்பிலிப்பிட்டியவில் நடைபெறவிருந்தது. எனினும், நாட்டில் நிலவிய சீரற்ற கால நிலை காரணமாக போட்டிகள் அனைத்தும் பிற்போடப்பட்டன.

இந்நிலையில், ஆண்கள் பிரிவில் மேல் மாகாணத்தைச் சேர்ந்த நிரோஷன் அப்புஹாமி போட்டித் தூரத்தை ஒரு மணித்தியாலமும் 4.06 செக்கன்களில் நிறைவு செய்து தங்கப் பதக்கத்தை வென்றதுடன், வட மத்திய மாகாணத்தைச் சேர்ந்த எஸ்.எஸ் துஷார 2ஆவது இடத்தையும், மேல் மாகாணத்தைச் சேர்ந்த எஸ்.எஸ் பெர்னான்டோ 3ஆவது இடத்தையும் பெற்றுக்கொண்டனர். இதே வேளை, பெண்கள் பிரிவில் முதலிடத்தை மேல்மாகாணத்தைச் சேர்ந்த கஸ்தூரி மத்ரிகா பெற்றுக்கொண்டார். அவர் போட்டித் தூரத்தை ஒரு மணித்தியாலமும் 48.36 செக்கன்களில் நிறைவு செய்தார். இவர் கடந்த சில தினங்களுக்கு ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்ட வீராங்கனையாவார். மேலும், தென் மாகாணங்களைச் சேர்ந்த நிஹுஷா தில்ஹானி மற்றும் லக்ஷ்மி கல்யாணி ஆகியோர் முறையே 2, 3ஆவது இடங்களைப் பெற்றுக்கொண்டனர்.

இந்நிலையில், இம்முறை நடை போட்டியில் ஆண்கள் பிரிவில் வட மத்திய மாகாணம் ஒட்டுமொத்த சம்பியனாகவும் மத்திய மாகாணம் 2ஆவது இடத்தையும் பெற்றுக்கொண்டதுடன், பெண்கள் பிரிவில் ஒட்டுமொத்த சம்பியனாக மேல் மாகாணம் தெரிவாக, 2ஆவது இடத்தை தென் மாகாணம் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# பாக். வெற்றியின் எதிரொலி: இந்திய ரசிகர்கள் ஆவேசம்





சம்பியன் கிண்ண தொடர் இறுதிப்போட்டியில் இந்திய அணி தோல்வியடைந்ததையடுத்து, இரசிகர்கள் தொலைக்காட்சிகளை உடைத்தும், வீரர்களின் உருவப்படங்களை எரித்தும் தங்கள் ஆத்திரத்தை வெளிப்படுத்தியுள்ளனர். அதேசமயம், இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றதும் காஷ்மீரின் பல இடங்களில் இளைஞர்கள் பட்டாசு வெடித்து வெற்றி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். இங்கிலாந்தில் இடம்பெற்ற ஐ.சி.சி சம்பியன் கிண்ணத் தொடரின் இறுதிப் போட்டியில் இந்தியாவை வீழ்த்தி பாகிஸ்தான் அணி கிண்ணத்தை கைப்பற்றியது. ஓவல் மைதானத்தில் இடம்பெற்ற இந்த போட்டியில் பாகிஸ்தான் அணி 180 ஓட்டங்களால் வெற்றி பெற்ற ஐ.சி.சி வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றியது. எனினும், கிரிக்கெட் விளையாட்டை தெய்வமாக கருதுகின்ற இந்திய ரசிகர்களுக்கு தோல்வியென்பது ஜீரணிக்க முடியாத விடயம் என்பது அனைவரும் அறிந்த உண்மை. உத்தரப்பிரதேச மாநிலத்தின் கான்பூர் நகரில் சில இரசிகர்கள் இந்திய வீரர்களின் உருவப்படங்களை வீதியில் எரித்து தங்களது ஆத்திரங்களை தீர்த்துக்கொண்டுள்ளனர். மேலும், சிலர் இந்திய அணிக்கு எதிராக கோஷங்களை எழுப்பியுள்ளனர். இந்திய அணி தோல்வியடைந்தால் வீரர்களின் வீட்டில் கல் எறிந்து இரசிகர்கள் வன்முறைகளில் ஈடுபடும் நிலை கடந்த காலங்களில் காணப்பட்டது. எனவே அவ்வாறான சம்பவங்களை தவிர்த்து கொள்வதற்காக, முன்னெச்சரிக்கையாக முக்கிய வீரர்களின் வீடுகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. அந்தவகையில், ராஞ்சியிலுள்ள டோனியின் இல்லத்தின் முன்பு அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டுள்ளனர்.

முன்னதாக கடந்த 2007 ஆம் ஆண்டு இந்திய அணி உலகக்கிண்ணத் தொடரின் முதல் சுற்றோடு வெளியேறியது. இதனால், அப்போது டோனியின் இல்லம் ரசிகர்களால் தாக்கப்பட்டது நினைவிருக்கலாம். இந்நிலையில் காஷ்மீரில் உள்ள இளைஞர்கள் வெற்றி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர். தெருக்களில் திரண்ட இளைஞர்கள் இந்தியாவை எதிர்த்து கோஷமிட்டனர். பாகிஸ்தானை வாழ்த்தி முழக்கமிட்டனர். பட்டாசுகளும் வெடிக்கப்பட்டன. சில இடங்களில் இளைஞர்கள் பாகிஸ்தான் நாட்டு தேசியக் கொடியை ஏந்தியபடி சென்றனர்.

# பாகிஸ்தானில் வந்து விளையாடுங்கள்
## சர்பராஸ் அழைப்பு

சம்பியன் கிண்ண கிரிக்கெட் தொடரில் முதல்முறையாக சம்பியன் பட்டம் வென்றுள்ள பாகிஸ்தான் அணியின் தலைவர் சர்பராஸ் அஹமட், பாகிஸ்தானுக்கு வந்து மற்ற அணிகள் விளையாட வேண்டும் என அழைப்பு விடுத்துள்ளார்.

இங்கிலாந்தில் சம்பியன் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில், இந்திய அணியை பாகிஸ்தான் 180 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. சுமார் 8 வருடங்களுக்கு பின்னர் ஐ.சி.சி தொடர் ஒன்றில் பாகிஸ்தான் அணி சம்பியன் பட்டம் வென்றுள்ளதால் அந்நாட்டு ரசிகர்கள் உற்சாக வெள்ளத்தில் மிதக்கின்றனர்.

இந்நிலையில், வெற்றி குறித்து கருத்து தெரிவித்துள்ள பாகிஸ்தான் அணித் தலைவர் சர்பராஸ், இந்த வெற்றி இன்று மற்றும் நாளை நினைவு கூரத்தக்கது அல்ல. பல வருடங்கள் கொண்டாடத்தக்கது. பாகிஸ்தானில் கிரிக்கெட் இருக்கும் வரை இந்த சாதனை இருக்கும் என்பதில் மகிழ்ச்சி என்றார். இனி, உலகக்கிண்ணம் போன்ற பெரிய போட்டிகளில் இந்தியாவை பாகிஸ்தான் வென்றதே இல்லை என யாரும் பேசமாட்டார்கள். இந்தப் போட்டிக்கு நாங்கள் வரும்போது 8ஆவது இடத்தில் இருந்தோம்.

தற்போது சம்பியன் ஆகியிருக்கிறோம். இந்த வெற்றி பாகிஸ்தான் கிரிக்கெட்டை ஊக்கப்படுத்தும். இந்தப் போட்டியில் விளையாடிய பல வீரர்களுக்கு இதுதான் முதல் பெரிய போட்டி. நாங்கள் வெல்வோம் என்று பலருக்கு நம்பிக்கையே இல்லை என்றார்.

மேலும், நீண்ட நாட்களாக நாங்கள் டுபாயை தான் சொந்த மைதானமாக வைத்துக் கொண்டு விளையாடி வருகிறோம். மற்ற அணிகளை போல் சொந்த மண்ணில் விளையாடும் சிறப்பு எங்களுக்கு இல்லை. இந்த வெற்றி மூலம் மற்ற அணிகள் பாகிஸ்தானுக்கு வந்து விளையாட வேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறேன் எனவும் கூறினார். அத்துடன் அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்ற அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் அவர் தெரிவித்தார். கடந்த 2009ஆம் ஆண்டு பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்த இலங்கை அணியினர் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதிலிருந்து, அங்கு சர்வதேச போட்டிகள் எதுவும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.



# பாக். உடனான தோல்வி ஏமாற்றம் அளிக்கிறது



பாகிஸ்தான் அணியுடனான தோல்வி மிகுந்த ஏமாற்றம் அளிப்பதாகவும், தவறுகளில் இருந்து பாடம் கற்றுக்கொண்டு அடுத்த கட்டத்துக்கு சென்று விட வேண்டும் என்று இந்திய அணியின் தலைவர் விராட் கோஹ்லி கருத்து தெரிவித்துள்ளார். போட்டியின் பின்னர் இந்திய அணியின் அணித்தலைவர் விராட் கோஹ்லி கருத்து தெரிவிக்கையில்,

தோல்வி மிகுந்த ஏமாற்றம் அளிக்கிறது. ஆனாலும் எனது முகத்தில் சிரிப்பு இருக்கிறது. அதற்கு காரணம், நமது வீரர்கள் இந்த தொடரில் விளையாடிய விதத்தை நினைத்து பெருமைப்படுகிறேன். இறுதிப்போட்டியில் ஒட்டுமொத்த பெருமையும் பாகிஸ்தானையே சாரும். எல்லா வகையிலும் எங்களை தோற்கடித்து விட்டனர். அவர்களுக்கு வாழ்த்துகள்.

கிரிக்கெட்டில் சில நேரம் சிறு விஷயம் கூட பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி விடும். ஆனால் இப்போது நாங்கள் தோற்று விட்டோம். இந்திய ரசிகர்களை ஏமாற்றத்தில் ஆழ்த்தி விட்டதாகவும், தவறுகளில் இருந்து பாடம் கற்றுக்கொண்டு அடுத்த கட்டத்துக்கு சென்று விட வேண்டும் என்றார்.

# பாகிஸ்தானுக்கு துருக்கி ஜனாதிபதி வாழ்த்து



பாகிஸ்தான் மற்றும் இந்திய அணிகளுக்கிடையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சம்பியன் கிண்ண இறுதிப் போட்டியை கண்டுகளித்த துருக்கி ஜனாதிபதி தய்யிப் எர்துகான், சம்பியன் பட்டத்தை வென்ற பாகிஸ்தான் அணிக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

நடப்புச் சம்பியனான இந்தியாவை 180 ஓட்டங்களால் வீழ்த்தி முதற்தடவையாக சம்பியன் கிண்ணத்தை கைப்பற்றிய பாகிஸ்தான் அணியின் வெற்றி தொடர்பில் அந்நாட்டு பிரதமர் நவாஸ் ஷரீப்பை தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு துருக்கி நாட்டு மக்களின் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், இந்திய அணியை தோல்வியடையச் செய்து முதல் முறையாக ஐ.சி.சி. சம்பியன் கிண்ணத்தைச் கவீகரித்துக்கொண்ட பாகிஸ்தான் அணிக்கு இலங்கை கிரிக்கெட் சபை தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது. இலங்கை கிரிக்கெட் சபை மற்றும் இலங்கை ரசிகர்களின் வாழ்த்துக்கள் பாகிஸ்தான் அணிக்கு உள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் திலங்க சுமதிபால, பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷஹாரியர் கானுக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்தத் தொடரில் பாகிஸ்தான் அணி மிகச் சிறப்பாக விளையாடியதாகவும் இலங்கை கிரிக்கெட் சபை தமது கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 20TH JUNE 2017